www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ரூபா 11/00

ஏப்.06–12,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 199

## விமான அபாயம்

## உயரும் எங்கே ? எப்போது ? ஏவுகணைகள்







## இரகசிய ஒத்திகை



படிப்பகம்

# முரசம்

## மனமுண்டானால்....

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"இலங்கையில்
சமாதானம் மலர்வதற்கு
மத்தியஸ்தம் செய்யத் தயார்" என்று
யாசீர் அரபாத் கூறியிருந்தார்.

பாலஸ்தீன பிரச்சனையே
இன்னமும் முடிந்த பாடில்லை.
இஸ்ரேலின் இழுத்தடிப்பு மத்தியில்
சமாதானப் பாதையில் முன்னேற
படாதபாடு படுகிறார் அரபாத்!

நம் பிரச்சனையிலும்
அவர் தலையை உருட்ட
நாம் நினைக்கக் கூடாது!

மத்தியஸ்தம் செய்யத் தயார்
என்று அவர் அறிவித்தமை
அவரது நல்ல உள்ளத்தை,
உயர்ந்த எண்ணத்தை
உணர்த்தி நிற்கிறது!

விட்டால் எங்கே
மத்தியஸ்தம் செய்ய
வந்துவிடுவாரோ, என்று நினைத்து
அவர் சொன்னது
காதில் விழாதது போல்
காட்டிக் கொண்டது அரச தரப்பு!

"பத்திரிகையாளர்களிடம்தானே
அப்படிக் கூறியிருக்கிறார்,"
என்று சொல்லியுள்ளார்
கௌரவ காணி அமைச்சர்.

அழையாத விருந்தாளியாக,
தானாக நுழையுமளவுக்கு
நாகரிகம் தெரியாதவரல்ல
பாலஸ்தீனத் தலைவர்.

மருந்துக்கு வலியா
புண்ணுக்கு வலியா?

மத்தியஸ்தத்தை
அரசு விரும்புமானால்
நியாயமான மத்தியஸ்தர்களை
அரசே முன்வந்து
விரும்பி அழைக்க முடியும்!

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர்
முதற்கொண்டு
பாலஸ்தீனத் தலைவர்வரை
மத்தியஸ்தம் செய்யத் தயார்
என்று சொல்லியுள்ளனர்.

அவ்வாறு அவர்கள் கூறியிருப்பது
இலங்கை இனப்பிரச்சனை
சர்வதேசப் பிரச்சனையாக
மாறிவிட்டதென்பதை
அங்கீகரித்திருப்பதன்
அடையாளம்தான்!

யுத்தத்துக்கு
சர்வதேச ஆதரவையும்
உகந்த உதவிகளையும்
தானாகவே வலியச் சென்று
திரட்டிவருகிறது அரசாங்கம்!

எந்த ஒரு வெளிநாடும்
தானாக முன்வந்து
அட்சய பாத்திரத்தை நீட்டவில்லை!
நமது அமைச்சர் பெருமக்கள்தான்
உலக வலம் சென்று
உதவி கேட்டுப் பெறுகிறார்கள்!

சமாதானத்தீர்வுக்கான மத்தியஸ்தம்
மட்டும் வேண்டாம் என்கிறார்கள்!
தயார் என்று சொன்னால்கூட
'நம்மிடம் நேராகச் சொல்லவில்லையே,'
என்று காரணம் கூறுகிறார்கள்.

மனமுண்டானால் இடமுண்டு.
நமது நோய்க்கு
வைத்தியம் நாம்தான் தேட வேண்டும்!
மருந்து செய்தே ஆகவேண்டும்!
என்று மனது வைத்தால்
வைத்தியர்கள் பலர் உண்டு.
வரவழைக்கவும் வழிகள் உண்டு!

'கைப்புண்ணுக்கு
கண்ணாடி எதற்கு?' என்பர்.
இன்னமும் இனப் பிரச்சனையை
உள்நாட்டுப் பிரச்சனை என்று
ஒளித்து வைக்க நினைப்பது
நம்மை நாமே ஏமாற்றிக்
கொள்வதாகிவிடும்!

அரபாத் வந்தார்-
வாஞ்சையுடன் வரவேற்றார்
ஜனாதிபதி சந்திரிக்கா.

பாலஸ்தீனப் பிரச்சனையில்
மத்தியஸ்த அணுகுமுறைக்கு
உடன்பட்டு முன்வந்தவர் அரபாத்.

அரபாத்தை வரவேற்கும்
ஜனாதிபதி அவர்கள்
அரபாத் அங்கு உடன்பட்ட
மத்தியஸ்தம் முன்பான
சமாதானப் பேச்சுவார்த்தையை
இங்கும் பரிசீலித்துப் பார்க்கலாமே!

போர் விமானம் செலுத்த
வெளிநாட்டு விமானிகள் வருகிறார்கள்.
பேச்சுக் கதவுகளைத் திறக்க
வெளிநாட்டு சமாதான அபிமானிகள்
இங்கு வந்தால் என்ன?
நம்மால் முடியாதபோது
நாலுபேர் உதவட்டுமே!
யார் குத்தியும் அரிசியாகட்டுமே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## இதயம் என்ற பூஞ்சோலையிலே அன்பு எனும் மலர்



இதயம் என்ற சோலையில் பல்வகை அழகிய மலர்கள்....மணமுள்ள அழகிய நல் மலர்கள்....அவை என்னென்ன பூக்கள்? அன்பு, மன்னிப்பு, விருப்பு, சயவெறுப்பு, சகிப்பு...இவற்றிடையே இறுமாப்பு, வெறுப்பு என்ற வாசனையற்ற பூக்களும் உள்ளன...இதில் சில பூக்களை நீருற்றி வளர்க்க வேண்டும். சிலவற்றை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும்.

'அன்பு' என்ற மென்மலர் வாழ்வில் இன்ப நாதம். மற்றவர்களும் என்னைப் போன்றவர்களே என ஒவ்வொரு மனிதனும் நினைத்தால் பெரும்பாலான பிரச்சனைகள் தீர்ந்துவிடும். அன்பைப் பற்றி சரிவர அறிந்து கொள்ளாத மனிதன்தான் மற்றவனை பிரச்சனைக்குட் படுத்துகிறான்.

அன்பு எங்கேயிருந்து உண்டாகிறது? 1 யோவான் 4:7-21 கூறுவதென்ன- "அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்தவன். அன்பில்லாதவன் தேவனை அறியான்." தம்மைப் போல பிறரையும் நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தேவன் எம்மேல் வைத்துள்ள அன்பை அவரது மரணத்தின் மூலமாக ருசித்துள்ள நாம், அவ்வன்பைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம் என்பதை மறவாதவர்களாக இருக்க வேண்டும்.

தேவ அன்பு எம்மில் நிலைக்க இறைத்துணையை நாடுவோம்.

ஜே.புளோரன்ஸ், கெங்கல்ல.

## அண்டை வீட்டாரை ஆதரிப்பீர்!

ஹஸரத் ஆயிஷா(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! எனக்கு இரண்டு அண்டை வீட்டுக்காரர்கள் உள்ளனர். இவர்களிருவரில் நான் யாருக்கு அன்பளிப்புத் தருவது?" என்று கேட்டேன். அதற்கு அண்ணலார் "யாருடைய வீட்டின் வாயிற்படி உமக்கு அருகிலிருக்கிறதோ அவருக்கு கொடுக்கவும்" என்றார்கள்.

மற்றோர் அறிவிப்பில் பின்வருமாறு காணப்படுகிறது: "அண்டை வீட்டுக்காரரைக் கேவலமாகக் கருதாதீர். அவர் கொடுக்கும் அற்ப அன்பளிப்பையும் (சந்தோஷத்துடன்) ஏற்றுக்கொள்ளவும்."

ஆதாரம்-புகாரி.

யார் அண்டை வீட்டார்க்கு தொல்லை தருகிறாரோ அவருக்கு அல்லாஹ் நஷ்டத்தைத் தருவான். யார் அவரை சிரமத்திற்குள்ளாக்குகிறாரோ அல்லாஹ் அவரை சிரமத்திற்குள்ளாக்குவான்.

ஒரே சமயத்தில் இருவர் வந்து உங்களுக்கு விருந்துக்கு அழைப்புக் கொடுத்தால் உங்களுக்கு அருகிலிருப்போருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் அவர் உங்களுக்கு அண்டையிலிருக்கிறார். அண்டை வீட்டாரில் சிலர் ஒரே நேரத்தில் விருந்துக்கு அழைத்தால் அவர்களில் முதலில் வந்தவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஆதாரம்-புஹாரி முஸ்லிம்-472

பாத்திமா மின்ஹா, புத்தளம்.

# கவிதைப் போட்டி இல.196



## பரிசுக்குரிய கவிதை

### வீதியிலே!!

ஆண்டுகள் பலசென்றும்
அமைதிதான் இல்லை இங்கு.!
அனுதினமும் மனிதஉயிர்
அழிந்து வரும் தீவினிலே
அங்கங்கள் இழந்தவரை
அளவிடவே முடியவில்லை!
அதிலொருவர் தானிங்கு
அமைதி இன்றி வீதியிலே...!!

ஏ.எஸ்.மரைக்கார் மதீனா-
மண்டலக்குடா, கல்பிட்டி.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### வேதனை தீராதோ...?

நாதியற்று வீதியோரம்
கிடக்கின்ற நம்மினத்தின்
வேதனைதான் தீராதோ...?
விடிவு காலம் வாராதோ....?

சுந்தரி சதாசிவம்-மிருசுவில்.

### படகு

யுத்தத்தின் பசித் தீக்கு
என் கால்தான் உணவாச்சு!
நடைபாதை வழியோரம்
நான் தூங்கும் இடமாச்சு!
முச்சக்கர வண்டியிலே
என் வாழ்க்கைப் படகாச்சு!

பா.எல்றோய்- இறம்பைக்குளம்,
வவுனியா.

### சாந்தி இல்லை

கூட்டிய மனைவி யில்லை
வீட்டிலும் மக்கள் தொல்லை
நாட்டிலும் சாந்தி யில்லை
காட்டிலோ பேரால் தொல்லை
நீட்டி நடக்கக் காலில்லை
ஓட்டிய வண்டியில் காற்றில்லை
ஆட்டி அழித்திடவோ
ஆண்டவனும் விரும்பவில்லை.

ச.மகாலிங்கம்-வெலிமடை குருப்,
வெலிமடை.

### எ(இ)ங்கே நிம்மதி?

எங்கே நிம்மதி என்று
எல்லோரும் தேடுகிறார்...!
இங்கே நிம்மதியென்று
நன்றே நீயும் தூங்கினயோ..?

வாஹிட் ஏ.குத்தூஸ்-கோட்டைமுனை.

### ஏன் மறந்தார்?

காலிரண்டும் ஊனம் என்று
வண்டியொன்று தந்தவர்கள்,
வயிறொன்று உள்ள தென்று
மறந்து விட்டுப் போன தேனோ...?

எம்.ஐ.எம்.உவைஸ்-அக்பர் கிராமம்,
மருதமுனை.

# கவிதைப் போட்டி இல.199



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 12.04.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.199
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

### எழுந்தோடு

முன்னேறும் படைக்கஞ்சி
எல்லோரும் ஓடிவிட-
-நீ மட்டும்
முன்னேற முடியாது-வீதி
முன்றலிலே நித்திரையோ?
ஐயோ நீ எழுந்தோடு-வந்து
ஆட்டிலறிவிழுமுன்னே....!

கோ.நந்தினி-வேலணை.

### துக்கமா? தூக்கமா?

பஞ்சு மெத்தை, தலையணைகள்,
பக்கத்திலோர் மின்விசிறி, சொந்தமுடன் தொடர்புகொள்ள
தொலைபேசி வசதிகள், சுகமான தூக்கம் அன்று!
சொந்த இடம் பிரிந்து, துயருற்று, நலிவுற்று
சந்திதனில் படுத்தெழும்பும் துயரான தூக்கம் இன்று!

திருமதி க.கதிரவேலு-பண்டாரிகுளம், வவுனியா.

### ஊனம்

அழிவுதரும் போரிங்கு
அங்கவீனர்களாக்கி
தெருவோரம் மனிதத்தை
தேடுவாரற்றிங்கு
தேசிய சொத்தாக
முச்சக்கரவண்டிதந்து
ஊனமுள்ள தேசமொன்றை
உருவாக்கும் காட்சியிதோ!

பூ.இதயரெத்தினம்-
ஆரையம்பதி-03.

### வேதனை.

கண்ணிவெடி பட்டு
கால் ஊனமாயாச்சு;
கைவண்டி ஒன்றே
கதியென்று ஆயாச்சு;
செய்த பிழையொன்றுமில்லை;
செய்ய ஒரு தொழிலுமில்லை;
எய்தவனுக்குத் தெரியுமா
அம்பு பட்டவன் வேதனை?

சி.மு.சுந்தரேசன், அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### தேசிய பாதுகாப்பு

வீடுகளில்
கிடைக்காதது!!
வீதிகளில்
கிடைப்பதாலோ??

ஏ.எல்.ஸாஜஹான்-
ரஞ்சன் விஜேயரத்னபுர,
வெள்ளவத்தை.

### துணிந்ததனால் அயர்ந்தான்!

வாழ்வு வாழவதற்கே என்றுணர்ந்தான்!
மரணம் என்றோ வரும் என்று தெரிந்திருந்தான்!
அதனால் சஞ்சலம் கொள்வதை அவன் மறந்தான்!
எதையும் எதிர்கொள்ளத் துணிந்ததனால் அவன் அயர்ந்தான்!

கே.எஸ்.கமிலாயநாதன்-வவுனியா.

# வாசக(ர்) சாலை




## அற்புதமான பொருத்தம்

1987 அக்டோபர் 17ல் ஆனைக்கோட்டை கூளாவடியிலுள்ள 'புதுவாழ்வு' செபாலயத்தில் இந்திய இராணுவ ஷெல் வீச்சுக்கு ஆலயத்தோடு நானும் பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலிருந்தும், அற்புதமாய் பாதுகாக்கப் பட்டேன். ஏறக்குறைய 10 ஆண்டுகளாகிவிட்டன. கடந்த மாதம் கால் வலிக்குதென மருத்துவமனைக்குப் போய், எக்ஸ்ரேயில் காலில் குண்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அறுவை நடந்து வீட்டில் தங்கி இருக்கிறேன். ஆயினும் கால் எலும்புக்குள் இன்னுமொரு குண்டு இருக்கிறது.

10 ஆண்டுகளின் பின் முரசில் கட்டுரைவந்ததும்- என் காலிலும் அறுவை நடந்ததும் அற்புதமான பொருத்தமே. நல்ல பல கட்டுரைகளை வெளியிடுவது மட்டுமல்ல அவைகளை நூலாக்கி முரசு வெளியீடாகக் கொண்டுவரவேண்டுமென விரும்புகிறேன். நடக்குமென நம்புகிறேன். உங்கள் பணி தொடர என் வாழ்த்துக்கள். உங்களுக்கும் உடன் பணியாளர் யாவருக்கும் என் அன்பு. கர்த்தர் உங்களை ஆசீர்வதித்துக் காப்பாராக ஆமேன்.

அருட்திரு வீ.ஜே. சீவரத்தினம், நுகேகொட.

✖✔

கைகொடு முரசே! உள்ளூராட்சித் தேர்தல் கணிப்பு நெத்தியடி! தான் கூட முரசு அவசரப்பட்டு கணிப்பு போட்டுவிட்டதோ என்று கவலைப்பட்டேன். முரசு சொன்னது பலித்தது!

ஆர். சிவபாதம், ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்பு-03.

## நாரதருக்கே நம் வாக்கு

வானொலியில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்டன பின்னே! முரசு நம் வீட்டுக்கு வந்து முடிவைக் கூறிவிட்டது முன்னே! முரசு செய்தியில் கணிப்பு கூறப்படமுன்னரே, எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் நாரதர் தந்துவிட்டார் கணிப்பு. அதனால் நாரதருக்கே நம் வாக்கு!

திருமதி நல்லையா பரிமளம், என். கௌசல்யா, நீர்கொழும்பு.

"பிரபாகரனாலும் இனிமேல் பொது ஜன முன்னணியின் வெற்றிவாய்ப்பை சேதப்படுத்த முடியாது!" நாலந்த மரணத்தின் பின்னர் நாரதர் சொன்ன அரசியல் ஆருடம் அது. வவுணதீவு தாக்குதலின் பின்னர் நாரதர் கணிப்பு பொய்க்கலாம் என நினைத்தேன். தேர்தல் முடிவு மெய்ப்பித்துவிட்டது. சபாஷ் நாரதரே!

எம்.என். ஹனீபா, மொரட்டுவ.

✖✔

## கிளம்பட்டும் வாள்

பூலான்தேவி புதுமெருகோடு புறப்பட்டுள்ளாள். பழிவாங்கும் வாள் உறைவிட்டுக் கிளம்புவதுபோல இருக்கிறது. மல்லாவின் குணாதிசயங்கள்- கொள்ளைக்காரனுக்கும் இதயம் உண்டு என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றன. பாத்திரங்களை கவனமாகச் சித்தரிக்கும் ரசிகனுக்கு பாராட்டு.

பூ. நடராசா, நேரியகுளம், வவுனியா.

✖✔

'கனவு மெய்ப்பட வேண்டும்' தலைப்பே இனிது. கதையும் அவ்வாறே ஆரம்பமாகிச் செல்கிறது. பிரபஞ்சனின் தமிழ் நடையும் நயமாகவுள்ளது.

சி. பத்மாவதி, திருக்கோணமலை.

✖✔

சுஜாதாவின் கைவண்ணம் முரசில் தொடர்வதையிட்டு என்போன்ற வாசகர்களுக்கு பிடிபடாத சந்தோஷம். அனிதாவை மறக்க முடியாமல் தவிக்கும் எமக்கு இப்போது காயத்ரி! முரசே! இன்னும் எம்மை என்ன செய்யப் போகிறாய்?

எல். நூர்தீன், கண்டி.

✖✔

தமிழக அரசியல் கட்சிகள், இந்திய மத்திய அரசு ஆகியவற்றின் இன்றைய நிலையை 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல' எடுத்துக்காட்டியிருந்தார் ஆர். நாகராஜன்.

சா. விக்கினேஸ்வரன், மட்டக்களப்பு.

✖✔

தன் காதலி எப்படியிருக்கவேண்டும்? என்று அப்பால் விளக்கிச் சொல்ல, இங்கிருந்தும் விண்ணப்பங்கள் பறக்க, அப்பால் திண்டாட...யோவ்...உமக்கு இது தேவைதானா? போதும் அப்பால் புராணம்!

ஜி. ஜோன், செங்கலடி.

## மறக்காதீர்!

உடல் எடையைக் குறைக்க நடைப் பயிற்சி நல்லதுதான். நடைப் பயிற்சி பற்றி முரசு தந்த விபரங்கள் அசத்தல்தான். நடைப்பயிற்சியின்போது மறக்கக்கூடாத ஒன்றை முரசு சொல்லத் தவறிவிட்டதைக் கண்டிக்கிறேன். அதுதான்.... அடையாள அட்டை!

ஏ.எல். மன்சூர், கொழும்பு-15.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

- பரிதிமதி, ரம்புக் எலை.
- எம்.எச்.ஏ. கரீம், புத்தளம்.
- ம. இன்பரூபி, வவுனியா.
- ஆ. நிதாகரன், மண்டூர்-02.
- செல்வி எ. நிசாந்தினி, மட்டக்களப்பு.
- சு. சுரேஸ்குமார், கொழும்பு-14.
- எம். சுப்பையா, நீர்கொழும்பு.
- ரி. ஏகாம்பரம், இலண்டன்.
- பூ. சாந்தமலர், முதலைக்குடா.
- ஜலீர், கட்டார்.
- ராஜேஸ்வரி மேகநாதன், இரத்தினபுரி.
- வி. ஸ்ரீகாந்த், திருமலை.
- ஈ. நிசாந்தன், கல்முனை.
- ஏ. ராஜகுமாரி, குவைத்.
- மஜ்ஜதீன், நீர்கொழும்பு.
- சிவா. யோகன், சுலோஜினி, கனடா.
- ச. குணசிங்கம், கிரான்குளம்.
- வி. யோகநாதன், ஜெர்மன்.
- டக்ளஸ் ஏபிரகாம், ராகம.
- எஸ். ஆதிமூலம், தெல்தோட்டை.
- ப. பார்த்திபன், வவுனியா.
- அ. கிளேரா, கொழும்பு-13.
- செல்வி மகேஸ்வரி கர்தையா, களுத்துறை.
- திருமதி. சீ. இராமையா, சாமிமலை.
- எஸ். கிருஷ்ணன், மாணிக்கமடு.
- எஸ்.எம். அஸ்மி, மருதமுனை.
- எஸ்.ஏ.எம். சியாம், புத்தளம்.
- எஸ். விக்னேஷ், துறைநீலாவணை.
- ஆர். ராஜரட்ணம், சுவிற்ஸர்லாந்து.

www.padippakam.com

# தென்னாபிரிக்காவில் அரசு-புலிகள் பேச்சு?

# ஜீ.எல். பீரிஸ்—லோறன்ஸ் திலகர் சந்திப்பு!

## தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் மத்தியஸ்தம்?

(நமது அலுவலக நிருபர்)

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே மத்தியஸ்தம் செய்துவைக்க தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ.என்.சி) தயாராக இருப்பதாக தெரியவந்துள்ளது. நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் தற்போது தென்னா பிரிக்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண் டுள்ளார். அங்கு புலிகளின் சர்வதேசப் பிரமுகரான லோரன்ஸ் திலகரை அவர் சந்திக்கக்கூடும் என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன. தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர் முன்னிலையில் அச் சந்திப்பு நடைபெறக்கூடும் என்றும் மேலும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் வன்னிக்கு வந்து சென்றுள்ள லோரன்ஸ் திலகர் வெளிநாட்டு இராஜதந்திரி கள் பலரை இரகசியமாகச் சந்தித்து வருகிறார். தென்னாபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர் களைச் சந்தித்தும் அவர் பேசியிருக்கிறார்.

இலங்கை அரசு பேச்சுக்குத் தயாராக இல்லை. நியாயமான தீர்வுக்கு முன்வரப் போவதில்லை. எனவே விடுதலைப் புலிகளுக்கு உதவ முன்வரவேண்டும் என்பது தான் முன்வைக்கும் கோரிக்கை என்று கூறப்படுகிறது.

இலங்கை அரசும், புலிகளும் வெற்றி பெறமுடியாத ஒரு யுத்தத்தை நடத்திவரு கின்றனர். இரு தரப்பும் பலத்த இழப்புக் களுடன் களைத்துப் போயிருக்கின்றன. எனவே பேச்சுவார்த்தைக்கு இருதரப்பினரை யும் இணங்க வைப்பது சுலபம் என்று வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலர் அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

### மூன்றாம் தரப்பு

உள்ளூராட்சித் தேர்தலும் நடந்து முடிந் துள்ளதால் புலிகளுடன் பேச்சு நடத்துவது பற்றிய செய்திகள் அரசுக்கும் அரசியல் ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தாது. எனினும் சில அடிப்படை விடயங்களில் உடன்பாடு எட்டும்வரை பேச்சுக்களை இரக சியமாக ஆரம்பிப்பது. தொடர்ந்து இணக்க மாகப் பேச முடியுமானால் பகிரங்கமாக அறிவிப்பது என்று மேலைநாட்டு இராஜ தந்திரி ஒருவர் யோசனை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில்தான் அரசுக்கும், புலிகளுக் கும் இடையே மத்தியஸ்தம் செய்யக்கூடிய மூன்றாம் தரப்பாக செயற்பட தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் முன்வந்தது என்று கூறப்படுகிறது.

### இந்தியாவின் நிலை

தென்னாபிரிக்க ஜனாதிபதியும், தென்னா பிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர்களில் ஒருவருமான நெல்சன் மண்டேலா சர்வதேச ரீதியாக மதிக்கப்படுகிறவர். அவர் இந்தியா வுக்கும் மிக வேண்டப்பட்ட நண்பர். அதனால் தென்னாபிரிக்க தேசிய காங்கிரசின் மத்தியஸ் தத்தை இந்தியாவும் சந்தேகத்தோடு நோக் காது என்பதும் பிரதானமானது. மூன்றாம் நாடு ஒன்று தலையிடுவது இந்தியாவுக்கு ஒரு கௌரவப் பிரச்சனையாக இருக்கும் என்பதால்தான், தென்னாபிரிக்கா அரசு என்றில்லாமல், தென்னாபிரிக்க தேசியக் காங்கிரஸ் கட்சி மத்தியஸ்தம் செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டதாம்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னரே சந்திப்புக்கான உடன்பாடு ஏற்பட்டதாம். தேர்தலுக்கு முன்னர் சந்திப்பு இடம்பெறு வதை அரசதரப்பு விரும்பவில்லை. திலகரும் பிரபாகரனை சென்று சந்தித்து நேரடியாக கலந்துரையாட வேண்டி இருந்தது. அதனால் தான் தேர்தலின் பின்னர் வரக்கூடியதாக திகதி குறிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

### புலிகள் கோரிக்கை

தென்னாபிரிக்கா இலங்கை அரசுக்கு உதவி செய்யக்கூடாது என்று சில மாதங் களுக்கு முன்னர் புலிகள் இயக்கத்தினர் பகிரங்கமாகவே வேண்டுகோள் விடுத்திருந் தனர். தேசிய காங்கிரஸ் தலைவர்களை சந்தித்தும் பேச்சு நடத்தினர். அதன்பின்னரே மத்தியஸ்தம் வகிக்கும் முடிவை எடுத்தது தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ்.

எனினும் இந்த முயற்சிகள் இலங்கையில் நடைபெறும் யுத்த நடவடிக்கைகளில் உடனடியாக எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. படையினரும் தாக்கலாம். புலிகளும் தாக்கு தலை நிறுத்தமாட்டார்கள். அதுமட்டுமல்லா மல் பேச்சுக்களில் தமது தரப்பின் பலம் உயர்வாக இருக்கக்கூடிய வகையில் புலிகள் பாரிய தாக்குதல்களில் ஈடுபடவும் கூடும்.

புலிகளை முற்று முழுதாக வெற்றி கொள்ள முடியாது என்பதுதான் ஜனாதிபதி யின் அபிப்பிராயம் என்றும், நீதியமைச்சருக் கும் அதில் உடன்பாடு உண்டு என்றும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

ஆனால் இத் தகவல்களை 'முரசு' திட்டவட்டமாக ஊர்ஜிதம் செய்ய இயல வில்லை. லோரன்ஸ் திலகரின் வன்னி விஜயம் தொடர்பான தகவலினை முரசுக்கு தந்த வட்டாரங்களே இத் தகவலினையும் தந்துள்ளன. லோரன்ஸ் திலகரின் விஜயம் பற்றிய செய்தி பின்னர் ஊர்ஜிதமானது குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போது வெளி யாகியுள்ள செய்தி தொடர்பான மேலதிக தகவல்களை பெற்று 'முரசு' விரைவில் ஊர்ஜிதம் செய்யும். அதுவரை இவை ஊர் ஜிதமற்ற செய்திகளாகவே தரப்படுகின்றன.

### மறுப்பு

விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமையக வட்டாரங்கள் இந்தச் செய்தி களை உடனடியாக மறுத்துள்ளன. "மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாம் ஏற்றுக்கொள் கிறோம். ஆனால் இலங்கை அரசுடன் இரகசியப் பேச்சு நடத்தமாட்டோம்!" என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை அரச - தரப்பு மேற்கண்ட ஊகத்தை மறுத்துள்ளது. நீதியமைச்சரை உடனடியாகத் தொடர்புகொள்ள முடியவில்லை.

## அறிவித்தல்களைச் சிங்களத்தில் எழுதுக!

### படையினர் கண்டிப்பான எச்சரிக்கை!

ஏற்கனவே பல நெருக்கடி, கெடுபிடி களுக்கு மத்தியில் உயிரைப் பணயம் வைத்துப் பயணம் செய்து கொண்டிருக்கும் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் பயணிகளுக்கும், வாகனச் சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்கும் மேலும் சில நெருக்கடிகளும், எச்சரிக்கை களும் படையினரிடமிருந்து கிடைத்துள்ளன.

பொது மக்களின் வாகனங்கள் சோத னைச் சாவடிகளைத் தாண்டிச் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மின்குமிழ்கள், கொப்பிகள், பேனாக்கள், சாக்குகள்,வயர்கள், புத்தகங்கள், பத்திரிகைகள், கல், மண், விறகு, மரம், மீன், மரக்கறி வகைகள், குடி பானங்கள் என்பனவும் கொழும்பு போன்ற தூரப் பகுதிகளிலிருந்து பொருட்களை ஏற்றிவரும் வாகனங்களிலிருந்து பொருட்கள் தவிர சுமாரான வகையீடு (ஒரு லொறி நூறு ரூபா விகிதம்)க் கொடுக்கப்பட்டால் போதும். பெரும்பாலும் மேற்படி பொருட்கள் ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் வற் புறுத்தியே பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

இவை போதாக்குறைக்கு தற்சமயம் மட்டக்களப்பு-பிள்ளையாரடியிலுள்ள படை யினர் வாகனங்களை வழி மறித்து "இனி மேல் இவ்வீதியால் எந்த வாகனங்கள் செல்வதாக இருந்தாலும் அவற்றின் முகப்பு அறிவித்தல்கள் சிங்களத்தில் கட்டாயம் எழுதப்பட்டிருக்க வேண்டும், சிங்களத்தில் தெளிவாக, அழகாக அறிவித்தல் எழுதப் படாத வாகனக்காரர் கடுமையாகத் தண்டிக் கப்படுவர். அத்துடன் படையினரை வீதியில் எங்கு கண்டாலும் கண்ணியம் கொடுத்து வாகனத்தை மெதுவாக ஓட்டிச் செல்ல வேண்டும்!" என்று படையினர் கடுமையாக எச்சரித்து அனுப்புகிறார்கள்.

## ஆயுதம் சகிதம் ஓட்டம்

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் இருவர் ஆயுதங்களுடன் தப்பியோடியுள்ளனர். அவர்களை தேடிப் பிடித்து தம்மிடம் ஒப்படைக்குமாறு ஈ.பி.ஆர். எல்.எஃப். தலைவர் பொலிசாரிடம் முறை யிட்டுள்ளார்.

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துக்குள் ஏற்பட்ட உட் பிரச்சனைகள் காரணமாகவே அவர்கள் தப்பியோடியதாகக் கூறப்படுகிறது.

வவுனியா மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் குகனேஸ்வரன் ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்தில் இருந்து வெளியேறி ரெலோவில் இணைந்திருக்கிறார். அதனை யடுத்து வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் இருந்தவர்கள் விலகிச் சென்றுள்ளனர்.

## சுற்றி வளைப்புத் தேடுதல்

பருத்தித்துறை 1ம் கட்டையில் உள்ள சாரையடி என்னும் இடத்தில் அமைந்துள்ள வீடொன்றில் 23.3.97 ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் ரீ.வி. பார்த்துக்கொண்டிருந்த ஆண், பெண் உட்பட 30 பேரை பருத்தித் துறை துறைமுக இராணுவம் சுற்றி வளைத்தது.

இந்த வீட்டில் இருந்த இளைஞர்களின் கண்கள் அவர்கள் அணிந்திருந்த சட்டை களால் கட்டப்பட்டு குப்புறப் படுக்க வைக் கப்பட்டனர். பெண்களை விசாரித்து ஒதுக்கி விட்டனர். பின் இராணுவத்தினர் அழைத்து வந்த இரண்டு தலையாட்டிகளின் முன் இவ்விளைஞர்கள் கண்கட்டு அவிழ்த்து விடப்பட்டனர். அதில் இரு இளைஞர்கள் தலையாட்டிகளினால் அடையாளம் காட்டப் பட்டனர். அதில் ஒருவர் புலிகள் அமைப்பை சேர்ந்த மூர்த்தி என அடையாளம் காணப் பட்டார்.

பின்னர் இளைஞர்களை அழைத்து அறுபது பாகை கிணற்றடி எனும் இடத்தில் அமைந்துள்ள ஒரு வீட்டில் இருந்த தண்ணீர் தொட்டியில் தலையாட்டி காட்டிக் கொடுத்த இருவரையும் முச்சு திணறும் வரை இராணு வத்தினர் அமிழ்த்தி எடுத்தார்கள். இதனை ஏனைய இளைஞர்கள் பார்த்துக் கொண்டி ருந்தனர். இச் சித்திரவதையின் பின் புலி உறுப்பினர் மூர்த்தி என்பவர் தன்னிடம் இரு கைக்குண்டுகள் இருப்பதாகக் கூறி அருகில் உள்ள வீடொன்றில் இருந்து அவற்றை எடுத்துக் கொடுத்தார்.

பின்னர் மீண்டும் தண்ணீர் அமிழ்த்தி எடுத்தபோது மேலும் இரண்டு கைக்குண்டு களை பழைய லொறி ரயர் ஒன்றினில் இருந்து எடுத்துக்கொடுத்தார். புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் தவிர்ந்த ஏனையோர் மறுநாள் அதிகாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

## காரைநகரில் வாலிபர் பலி!

யாழ்ப்பாணம் காரைநகரில் தருமராசா ஜனார்தனன் என்னும் இளைஞர் 29.03.97 அன்று கடற்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டார். கடற்படையினர் தேடுதல் நடத்தியபோது அந்த இளைஞர் கைக்குண்டை வீசியதாகவும், அதன் பின்னரே கடற்படையினர் சுட்டதாகவும் கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

பலியானவரின் தந்தையான செல்லையா தருமராசா கடற்படையினர் கூறுவதை மறுத் துள்ளார். நள்ளிரவு 12.30 மணியளவில் தமது வீட்டுக்கு வந்த கடற்படையினர் தன்னையும், தனது மனைவியையும் வீட்டை விட்டு வெளியே செல்லுமாறு கூறிவிட்டு மகனை விசாரணை செய்தனர். அதன் பின்னரே வெடிச்சத்தங்கள் கேட்டன என கூறியுள்ளார்.

## உதவினாலும் சூடு

மட்டக்களப்பு கழுவன்கேணியில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். 25.03.97 அன்று இச் சம்பவம் நடைபெற் றுள்ளது. சீருடையில் நின்றவர்கள் அந்த இரு இளைஞர்களிடமும் தமது ஆயுதங்களை சுமந்து வருமாறு கொடுத்தனராம். சிறிது தூரத்தின் பின்னர் ஆயுதங்களை திரும்ப வாங்கிக்கொண்ட சீருடை தரித்தோர் அந்த இளைஞர்களை சுட்டுக்கொன்றனராம்.

## தீர்வுக்கு கருத்துக் கணிப்பு – ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு!

"உள்ளூராட்சித் தேர்தலில், மகத்தான வெற்றி பெற்றுவிட்டதாகக் காட்டிக்கொண்டு, சூட்டோடு சூடாக அரசியல் தீர்வுத்திட்டத்துக் கான மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப் பையும் நடத்த பொதுஜன முன்னணி திட்ட மிட்டு வருவதாகத் தெரிகிறது. வடக்குக் கிழக்குக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் நோக்குடன் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு எடுக்கப்படும் முயற்சிகளை ஜே.வி.பி. மும் முரமாக எதிர்க்கும்!" இவ்வாறு ஜே.வி.பி.யின் தகவல் மற்றும் பிரசாரப் பிரிவின் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். சர்வதேச ரீதியில் தமது திட்டத்துக்கு ஆதரவு திரட்டப் போவதாகவும் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தலில் பொது ஜன முன்னணி பெரும் மோசடிகளைச் செய்தே வெற்றி பெற்றிருக்கிறது. ஜே.வி.பி.யைச் சேர்ந்த தொண்டர்களை படுமோசமான முறையில் தாக்கி, அவர்கள் தங்கள் கடமை களைச் செய்யவிடாமல் பொ.ஜ.முன் னணி தடுத்திருக்கிறது. இத்தகைய சம்பவங் களையொட்டிய முறைப்பாடுகளை ஜே.வி.பி. அரசியற் பிரிவு, தேர்தலுக்குப் பொறுப்பான பொலிஸ் செயலகத்திடமும் தேர்தல் ஆணை யாளரிடமும் கையளித்திருக்கிறது.

இவை தொடர்பாக சட்ட நடவடிக்கை களை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ள தாகவும் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

## விமானத் தளத் தாக்குதல்

### தகவல் கொடுத்தவர் கைது!

திருகோணமலை-சீனக்குடாவிலுள்ள விமானப்படைத் தளத்துக்குள் கடந்த மார்ச் 6ம் திகதி ஊடுருவிய விடுதலைப்புலிகள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சீனத் தயாரிப்பான 'வை-12' விமானத்தைத் தகர்த்து விட்டுச் சென்றனர். அத்துடன் 'ஸற் வி-23' விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் நாசமாக்கி யுள்ளனர்.

மிகவும் உச்சக்கட்டப் பாதுகாப்புடன் கூடிய இத்தளத்துக்குள் பிரவேசித்த புலிப் படையினரில் நான்கு தற்கொலைப் படை யினர் பலியாகினார்கள்.

இத்தளத்திலுள்ள படையினருக்கு வேண் டிய பொருட்களை விநியோகிக்கும் தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவரே புலிகளுக்கு தகவல் கொடுத்து உதவினாராம். தற்போது அவர் கைதாகியிருக்கிறார். இவருக்குச் சொந்தமான வாகனம் ஒன்றும் புலிகளால் இத்தாக்குதலுக் குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

## மின்மாற்றி புலிகளால் தகர்ப்பு

(காரைதீவு நிருபர்)

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரிக்கு அருகாமையில் இருந்த மின் மாற்றி (ட்ரான்ஸ்போமர்) ஒன்று கடந்த ஞாயிறன்று இரவு 8.35 மணியளவில் புலிகள் இயக்கத்தினரால் குண்டுவைத்து தகர்க்கப் பட்டுள்ளது.

100கிலோவாற்று வலுவுள்ள இந்த மின்மாற்றி பொருத்தப்பட்டு ஒரு மாதமா கின்றது. சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த இம்மின்மாற்றி தகர்ப்பினால் 350 குடும்பங்கள் மின்சாரமின்றி தவிக்கின்றன.

மேலும் காரைதீவு பொது வைத்திய சாலை, விபுலானந்த மத்திய கல்லூரி, 3 ஆலயங்கள், விளையாட்டரங்கு போன்ற முக்கிய இடங்களுக்கெல்லாம் மின்சாரம் இல்லாமல் உள்ளது.

காரைதீவில் தகர்க்கப்பட்ட மூன்றாவது ட்ரான்ஸ்போமர் இதுவென்பது குறிப்பிடத் தக்கது. ஏலவே தகர்க்கப்பட்ட 2 மின்மாற்றி களுக்கு பதிலாக இன்னும் புது மின்மாற்றி பொருத்தப்படாத நிலையிலே மூன்றாவது மின்மாற்றியும் தகர்க்கப்பட்டிருக்கிறது. காரைதீவு விஷேட அதிரடிப்படையினர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

## கோப்பிக் கடையில் குண்டு வீச்சு!

### போதை வியாபாரத்துக்கு எதிர்ப்பு!

இனம் தெரியாத இளைஞர் குழு வொன்றினால் கடந்த 27.03.97 அன்று இரவு வாழைச்சேனை-பிறைந்துரைச்சேனை என்ற முஸ்லிம் கிராமத்திலுள்ள கடையொன் றுக்குள் கைக்குண்டு வீசப்பட்டதன் காரண மாக அங்கிருந்த மூவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஏழுபேர் காயமடைந்தனர்.

கைக்குண்டு (கிரனைட்) எறியப்பட்ட குறித்த தேநீர்க் கடையில் நீண்ட காலமாக நிஸான் கோப்பி என்றழைக்கப்படும் கஞ்சாத்தூள் கலந்த முட்டைக்கோப்பி, மற்றும் போதையூட்டும் பல்வேறு குடிபானங்கள் விற்கப்பட்டு வந்ததாகவும், சீட்டாட்டம் போன்ற சூது விளையாட்டுக்கள் இடம் பெற்று வந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த கிரனைட் வீச்சில் கொல்லப்பட்ட, காயம்பட்ட அனைவரும் 15 வயது தொடக்கம் 35 வயதிற்கிடைப்பட்டவர்களாகும். ஏ.ஏ. அமீன்(31), எஸ்.ஏ.ஈ.ஸாமுஹம்மது (35), எம்.சி.மஹ்மூது லெப்பை (30) ஆகியோர் பலியானவர்களாகும். ஏ.எச்.றஸ்ஸாக்(34), எம்.ஐனுதீன்(20), எஸ்.ஐ.பௌஸுல்(15), ஆர்.எம்.றபீக்(27), ஏ.ஜலீல்(20), ஏ.அன்வர்(19), எச்.அஹமது(29) ஆகியோர் பாரதூரமான காயங்களுடன் பொலன்னறுவை ஆஸ்பத் திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி தேநீர்க் கடையில் இடம்பெற்று வந்த செயல்கள் சமூகச் சீர்கேடானது எனக்கருதிய உள்ளூரின் இனந்தெரியாத முஸ்லிம் இளைஞர் குழுவொன்றே கிரனைட்டை வீசி விட்டுத் தப்பி ஓடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் விசார ணைகளைத் துவக்கியுள்ளனர்.

## "ஒற்றையாட்சி முறையை நீக்க முடியாது"

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனை களில் 18 அதிகாரங்களை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மார்ச் 26ம் திகதி வெளியிட்டுள்ளார். இவ்வாறு அவசரமாக வெளியிட்டமை பாராளுமன்றத்துக்கான சிறப்புரிமைகளை மீறிய செயலாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றப் பிரதிநிதிகள், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் முறையிட்டுள்ளனர்.

"தீர்வுத் திட்ட ஆலோசனைகள் இன்னும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிசீ லனையில் இருக்கிறது. இதில் வேறுபல அம்சங்கள் தொடர்பாக எதுவித முடிவும் எட்டப்படவில்லை. இவ்வாறிருக்கும்போது இந்நாட்டின் ஒற்றை ஆட்சிமுறையினை நீக்கிவிட்டு சமஷ்டி ஆட்சியினை ஏற்படுத்து வதற்கு அரசாங்கம் அதிவேகமாகச் செயற் பட்டு வருகிறது.

ஒற்றை ஆட்சி முறையினை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஒரு போதும் சம்மதிக்கப் போவதில்லை!" இவ்வாறு ரணில் விக்கிரம சிங்கா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் யாப்பின் ஒரு பகுதி என்ற நிலையில், தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியான ஐ.தே.கட்சியின் அங்கீகாரம் பெறாமல்- பரிசீலனையிலுள்ள சரத்துக்களை எந்த வகையிலும் பிரசுரிப்பது சட்ட விரோதமானது. பாராளுமன்ற சிறப் புரிமைகளுக்கும் முற்றிலும் விரோதமானது, என்று திரு.விக்கிரமசிங்கா மேலும் தெரி வித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 7ம் திகதி இடம் பெறவிருக்கும் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில், எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்படவிருப்ப தாக அவர் கூறினார்.

## புலிகள் மூவர் பலி

மட்டக்களப்பு வெல்லாவெளியில் நடை பெற்ற மோதல் ஒன்றில் தமது தரப்பில் மூவர் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

படையினர் தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும், தமது தரப்பில் கப்டன் வேந்தன் (தர்மலிங்கம் மோகன்-மட்டக்களப்பு), கப்டன் சாந்தலிங்கம் (நல்லதம்பி கோணேஸ்வரன்-மண்டூர்), ஜீவராஜன் (வேல்முருகு ராஜா-மட்டக்களப்பு) ஆகியோர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

## அரச ஊழியர்களுக்கு சம்பள நிறுத்தம்!

### வேலைக்கு உடன் திரும்புமாறு அறிவுறுத்தல்!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள முசலி, நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முன்னர் அரச ஊழியர்களாக கடமையாற்றி, தற்போது வெளிமாவட்டங் களில் தங்கியிருப்போருக்கான சம்பளத்தை உடனடியாக இடை நிறுத்துமாறு சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மார்ச் மாத சம்பளம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. முதற் கட்டமாக மேற்படி பகுதிகளில் கடமை யாற்றிய கிராம அதிகாரிகளுக்கே இத்திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து இப் பகுதி அரச ஊழியர்கள் புத்தளம் போன்ற வெளி மாவட்டங்களிலேயே இருந்து வரு கின்றனர். இதில் அநேகமானோர் நிரந்தர இடமாற்றம் பெற்றுள்ளனர். ஏனையோர் மன்னார் மாவட்ட அலுவலகங்களில் இருந்து சம்பளம் பெற்றுக் கொள்வதற்கேற்ப தற் காலிக இணைப்பு இடமாற்றத்தில் கடமை யாற்றி வருகின்றனர்.

கிராம அதிகாரிகளுக்கான சம்பளத்தை மன்னார்க் கச்சேரியே வழங்கி வந்தது. இதேவேளை முதற்கட்டமாக கிராம அதிகாரி களுக்கே, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்ட போதிலும் ஆசிரியர்கள் உட்பட ஏனைய தர ஊழியர்களுக்கான சம்பளமும் நிறுத்தப் படவுள்ளதாக அதிகாரி ஒருவர் சொன்னார்.

மேற்படி இரு உ.அ.அ. பிரிவுகளிலும் முஸ்லிம்கள் எவரும் இல்லாததால் அப்பகுதி களுக்குச் சென்று தம் கடமைகளைப் பொறுப் பேற்க கிராம அதிகாரிகளும் ஏனைய அலுவலர்களும் தயக்கம் காட்டுவதாக முஸ்லிம் கிராம அதிகாரி ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார்.

முசலி, நானாட்டான் பகுதி அரச ஊழியர்கள் வேலைக்குத் திரும்புமாறு அறி வுறுத்தப்பட்டபோதிலும், அப்பகுதிகளுக்குச் சென்று வருவதற்கான போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற வசதிகள் இன்னும் செய்துதரப்படவில்லை என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். தற்போது மன்னாரிலிருந்து உயிலங்குளம் வரைக்கும் மட்டுமே பஸ்சேவை நடைபெற்று வருகிறது.

## படையினரிடம் அடையாள அட்டைகள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் தமது கண்காணிப்பின் கீழ் இல்லாத பகுதி களின் மீது இறுக்கமான பிடியில் சில கட்டுப்பாடுகளை அதிகரித்து வருகின்றனர். தமது கண்காணிப்பின் கீழுள்ள பகுதிகளி லிருந்து புலிகளின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகளுக்குச் சென்று வரும் வாகனங்களின தும், சாரதிகளினதும் அனுமதிப்பத்திரங் களைப் படையினரின் கடைசிச் சோதனைச் சாவடியில் ஒப்படைத்து விட்டு மீண்டும் திரும்பி வரும்போது அவற்றைப் படையின ரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நடைமுறை தற்சமயம் கடைப்பிடிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இப்பொழுது மேலும் ஒரு இறுக்கமான பிடியைப் படையினர் மக்கள்மீது ஏற்படுத்தி யிருக்கின்றனர். மட்டக்களப்பு-வாகரைப்பகுதி புலிகளின் ஆளுகையின் கீழ் இருந்து வரு கிறது. அப்பகுதிக்கு வெளியிடங்களிலிருந்து செல்லும் அரச உத்தியோகத்தர்களும் மற்றும் அவ்வூர் மக்களல்லாத வெளியாட்கள் யாராவது செல்லும் பொழுது கடைசியாகச் சோதனை செய்யப்படும் உஸன் ஏற்ற படைமுகாமில் தத்தமது அடையாள அட்டைகளை ஒப் படைத்து விட்டு மீண்டும் வரும் பொழுது அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்விதம் படையினர் ஒரு புறத்தில் தமது அடையாள அட்டைகளைக் குறித்த முகாமில் பறித்து வைக்கும் வேளையில் வேறொரு பகுதியிலிருந்து படையினர் சுற்றி வளைப்பு நடத்தி அவர்கள் படை நடவடிக்கை மேற்கொள்ளும்போது தம்மிடம் அடையாள அட்டை இல்லாதுபோனால் கைது செய்யப் பட வாய்ப்புண்டு. தமது அடையாள அட்டை களைச் சேகரித்து வைத்திருக்கும் குறித்த சோதனைச் சாவடி சிலவேளை புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானாலும் தாம் அடையா அட்டைகளை இழக்க வேண்டிய நிலை யேற்படுமென்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

# பயணக் கட்டுப்பாடுகள்

## பாஸ் நடைமுறை தொடர்ந்தும் இருக்கும்!

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து வவுனியா மற்றும் நாட்டின் இதர பகுதிகளுக்குச் செல்லும் 13 வயதிற்கும் 35 வயதிற்குமிடைப்பட்டவர்கள் மீது கடுமையான பாதுகாப்பு விதிகள் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இதன்படி மேற்படி வயதெல்லைக்குட்பட்டோர் பயணம் செய்ய விரும்பின் இவர்கள் தொடர்பான சகல விபரங்களும் பெறப்பட்ட பின்பே பயணத்திற்கு அனுமதி கிடைக்கும். ஏனையோர் சாதாரண பயண விதிகளை அனுசரிக்க வேண்டி இருக்கும்.

தற்போது பயண அனுமதிக்காக 7 படிவங்கள் நிரப்பிக் கொடுக்கும் முறையே இருந்து வருகின்றது. இதனால் பல பயணிகள் பயணத்திற்கான தினத்தை நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாமலும் தினமும் பாஸ் அலுவலகத்திற்கு அலைந்து திரிவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

அண்மைக்காலமாக, இப்பகுதியில் வசிப்போருக்கு விசேட அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அநேகமாக இம்மாதத்திற்குள் இவ் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு விடும் எனவும் அதன்பின் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளில் சற்று தளர்வு ஏற்படக்கூடும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை, மன்னாரிலிருந்து கொழும்புக்கு நேரடி பஸ் சேவையை ஆரம்பிக்கும் முகமாக தலா 40 இலட்சம் ரூபா பெறுமதியான 2 'செமி லக்ஷுரி' பஸ்கள் மன்னார் டிப்போவுக்கு உடனடியாகக் கிடைக்க விருக்கின்றன.

மன்னாரிலிருந்து கொழும்புக்கு பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டால் பயணக் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் நடை முறைகள் பற்றி இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

இது இவ்வாறிருக்க, கற்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. அல்விஸ் தற்போது புத்தளம் பொலிஸ் நிலையத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். மன்னார் மக்களுக்கு மிகவும் பரிச்சயமான பெயர் தான் அல்விஸ் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயின் கடத்தியோர் கைது!

(அக்குறணை நிருபர்)

அக்குறணை நகருக்குள் நீண்டகாலமாக போதைப்பொருள் விற்பனையில் மறைமுகமாக ஈடுபட்டு வந்த மஹியாவ எனும் இடத்தைச் சேர்ந்த இரண்டு முஸ்லிம் இளைஞர்களை அக்குறணை பஸாரில் வைத்து பொது மக்கள் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

அதில் ஒருவரிடம் குறிப்பிடத்தக்க அளவு போதைத் தூள் சுருள்கள் உள்ளங்கியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அவர்களிற்கு உடந்தையாக செயற்பட்டு, முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் போதைப் பழக்கத்தை உண்டு பண்ணி இலாபம் சம்பாதிக்கமுயன்ற இன்னும் இரண்டு நபர்கள் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டனர்.

மேலதிக குற்றப்புலனாய்வுப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்களிடமிருந்து இன்னும் தகவல்கள் கிடைக்கலாம் என நம்பப்படுகிறது. விசாரணைகள் தொடர்கின்றன.

# முன்னறிவித்தலின்றி தொலைபேசி துண்டிப்பு

## பொறியியலாளர் மீது ஒரு இலட்ச ரூபா கோரி மனு

மட்டக்களப்பு 'ரெலிகொம்' பொறியியலாளர் மீது ஒரு இலட்ச ரூபா நஷ்டஈடு கோரி மட்டக்களப்பு திருமலை வீதியில் பிரபல வியாபார ஸ்தாபனம் நடத்திவரும் வர்த்தகர் ஒருவர் சட்டத்தரணியூடாக மனுச் செய்துள்ளார்.

எதுவித முன்னறிவித்தலுமின்றியும்- முறைகேடான விதத்தில்- உத்தியோகபூர்வ காரணங்கள் ஏதுமில்லாமல் தனது வியாபார ஸ்தலத்திற்கும் வீட்டிற்குமுரிய நான்கு தொலைபேசி இணைப்புக்களையும் துண்டித்தமைக்காக தனக்கு வியாபார நஷ்டமேற்பட்டிருப்பதாக இந்த வர்த்தகர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். தனிப்பட்ட பிரச்சனைகளைக் காரணமாக வைத்தே தனது தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டதாக அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக் கடிதங்களின் பிரதிகள் தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சர், பிரதி அமைச்சர், கொழும்பு 'ரெலிகொம்' பொது முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு 'ரெலிகொம்' நிலையத்தில் கருமங்களை முடிப்பதற்கு செல்வாக்குள்ள 'பிரமுகர்களின்' உதவியை நாடவேண்டியிருப்பதாகவும், இலஞ்சம், ஊழல் என்பன நிறைந்துள்ளதாகவும் பரவலாகப் பேசப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தொலைபேசிச் சீர்கேடுகள் குறித்து தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சர் திரு. மங்கள சமரவீரவுக்கு பலதரப்பிலிருந்தும் முறைப்பாடுகள் தெரிவிக்கப் படுகின்றன.

# லுணுகலையில் அத்தியாவசியத்தேவை

(ஏறாவூர் நிருபர்)

சுமார் ஒரு இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட லுணுகலைப் பகுதியில் ஒரு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையக் கிளை இல்லாதது பெருங்குறையாக இருந்து வருகிறது. இப்பகுதியில் உள்ள 15 கிராம சேவகர் பிரிவுகளில் பெரும்பாலான பகுதிகள் மிக வறுமையான தோட்டத் தொழிலாளர் குடியிருப்புக்களைக் கொண்டதாகும்.

லுணுகலை நகரில் ஒரு கூட்டுறவு விற்பனவுக் கிளை இல்லாததனால் தோட்டத் தொழிலாளிகளான ஏழைக்குடும்பங்கள் தாம் பெருங்கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை தனியார் கடைகளில் அதிக கிராக்கியான கொள்ளை விலைக்குப் பொருட்களை வாங்குவதில் செலவிட வேண்டியுள்ளது.

அப்பிரதேசத்தின் நகர மக்களும், தோட்டப்புறப் பகுதிகளான சோலண்ட்ஸ், கொகாகொல, ஹொப்ரன், அடாவத்த, மற்றும் கிராமங்களான ஜனதாபுர, உடகிருவ, பல்லேபங்குவ, சூரியகொட பகுதிகளும் பொருட்களை வாங்கும் தமது நாளாந்தத் தேவைக்காக 20 கிலோமீட்டர் தூரத்திலுள்ள பஸ்ஸரைக்கு அல்லது 18கி.மீ. தூரத்திலுள்ள பிபிலைக்கு வர வேண்டியுள்ளது.

இது ஒரு புறமிருக்க, பிபிலையிலிருந்தும் பஸ்ஸரையிலிருந்தும் லுணுகலைப் பிரதேசத்திற்கான பஸ்சேவை காலைவேளையிலும் மாலையிலும் மிக மிகக் குறைவாக இருப்பதாகவும் இதனால் நேரகாலத்துடனேயே முண்டியடித்துக்கொண்டு பயணம் செய்ய வேண்டியிருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்நிலமைகளைக் கருத்திற் கொண்டு லுணுகலையில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இல்லாதிருக்கும் ஒரு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தைத் திறக்க ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் மக்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

# தமிழே இல்லாத பாதைச் சமிக்ஞைகள்

(அக்குறணை நிருபர்)

கண்டி பெருநகரில் பல இடங்களில் வீதிப் பொலிஸாரினால் வைக்கப்பட்டுள்ள திசை பாதைச் சமிக்ஞைகளில் ஆங்கில, சிங்கள மொழிமூலமான வாசகங்கள் மட்டுமே எழுதப்பட்டுள்ளதால் இவ்விரு மொழிகளும் தெரியாத தமிழ் மட்டும் வாசிக்கத் தெரிந்த பலர் பெரும் சிரமங்களிற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தற்செயலாகவோ அல்லது தெரியாத்தனமாகவோ அந்தச் சமிக்ஞைகளின் குறிப்பை மீறுபவர்களின் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

எவ்வளவுதான் மொழி தெரியாத விடயத்தை எடுத்துச் சொன்னாலும் ஏற்பதற்கு தயாரில்லாத வீதிப் பொலிஸாரிடம் தண்டக்குற்ற பத்திரத்தை வாங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழிலும் சமிக்ஞைகளை எழுத சம்பந்தப்பட்டவர்கள் முன்வந்து பொதுமக்களின் அசௌகரியங்களை நீக்க வேண்டும். இதற்கு தமிழ் அமைச்சர்களும் உதவ முடியும்.

# பழிவாங்கப்பட்ட ஆசிரியர்கள்

## பரிகாரம் காண நடவடிக்கை

(கண்டி நிருபர்)

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் பழிவாங்குதலுக்கு உட்படுத்தப்பட்ட 6000 ஆசிரியர்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்ட 35,000 பேர், இவர்கள் பற்றி விசாரணை செய்யும் கமிஷனுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

பத்தரமுல்ல இசுறுபாயவில் இடம் பெற்ற இந்த விசாரணை முடிவில் 6000 பேர் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்ததை விசாரணைக்குழு கண்டறிந்து அவர்கள் தொடர்பாக விமோசனம் வழங்க அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியிருந்தது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதையடுத்து கடந்த மாதம் தொடக்கம் கல்விச் சேவைகள் சபையின் ஆணைக்குழுச் செயலாளர் திரு.எஸ்.ஏ. பிரேமரத்ன இறுதி மீள்பரிசோதனைகளை நடாத்தி வருகிறார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க பதினெட்டரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் கல்விச் சேவை உத்தியோகத்தர் தரம், கல்விச்சேவை அதிபர் சேவைத்தரம், ஆசிரியர் தரம் ஆகிய தரவுகளின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், சேவையில் இடைநிறுத்தம் செய்யப்பட்டோரை மீண்டும் அமர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அத்தோடு பதவி உயர்வுகள் வழங்கப்படாமல் இருந்தால் அவற்றை வழங்கவும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# பரவலான திருட்டுக்கள்

யாழ்குடாநாட்டில் பரவலான திருட்டுக்களுக்கு குறைவில்லை. திருடர்கள் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளது. பொலிசார் திருடர்களைப் பிடிக்க போதிய அக்கறை காட்டுவதில்லையாம்.

சமீபத்தில் யாழ் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய சுவர் மணிக்கூடும் திருட்டுப் போய்விட்டது. தேவாலயத்திலேயே திருடர்கள் கைவரிசை.

# பால்தக்கரே ஆதரவு

புலிகள் அமைப்பினருக்கு தனது ஆதரவு என்றும் உண்டு என்று 'சிவசேனை' இயக்கத் தலைவர் பால்தக்கரே தெரிவித்துள்ளார்.

மும்பாய் மாநிலத்தில் சக்திமிக்க பிரமுகராக விளங்கும் பால்தக்கரே இவ்வாறு அறிவித்துள்ளமை இந்திய அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பம்பாய் என்ற பெயரை மும்பாய் என மாற்றியமைத்தமைக்கும் சிவசேனை அமைப்பே காரணமாகும்.


**BRIGHT^ன் SPOKEN ENGLISH**

(தபால் மூலம் கல்வி)

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மிகச் சிறந்த பாடநூல்களுடன் கூடிய பாடத்திட்டம். விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**

S-27, FIRST FLOOR, P.O.BOX- 162

COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX

COLOMBO-11. T.P.: 434770



INTERNET LINKS

STAR LINK COMMUNICATION

ஸ்டார் லிங் கொமினிகேஷன் ஸ்தாபனத்தினர் 21ம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளத் தமது வாடிக்கையாளர்களுக்கு உலகளவில் மின்னல் வேகத்தில் தகவல்களைப் பெற்றுத்தரும் **"இன்ரநெற்"** இனைப் பார்க்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள்.

அவர்களது ஏனைய நவீன சேவைகள்: –

- அதிவேகத்தில் தகவல்களை பரிமாறும் E.MAIL வசதிகள்.
- வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகள் அனைத்திற்கும் யுனிற் முறையில் (ஒவ்வொரு 6 செக்கன்கள் என்ற) அடிப்படையில் மட்டுமே கட்டணம் பெறுதல்.
- மேலும் உங்களுக்கு வேண்டிய இலக்கத்தை நீங்களாகவே சுழற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது ஒவ்வொரு 6 செக்கன்களுக்குமான கட்டணம் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட அவர்களின் திரையில் விழுந்துகொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு பேசுவதோடு, பேசிமுடித்துத் தொடர்பைத் துண்டித்தவுடன் நீங்கள் பேசிய தொகைக்கான ரசீதைக் கம்பியூட்டர் உங்கள் கைகளில் தந்துவிடுகின்றது.
- இவற்றோடு Computer Typing English & Tamil உம் செய்து கொடுக்கப்படும்.

**NO. 85-2/1D, SECOND CROSS STREET, COLOMBO-11.**

**T.P. 074-717144, 328458, 337995**

ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=

தங்க பஸ்பம் கலந்தது 1025/=

வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398

ரெறாசோ ஷிப்ஸ்

(TERRAZZO CHIPS)

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)

★ வெள்ளை சீமெந்து (Asano)

ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு, கொழும்பு – 12.

தொலைபேசி – 431511, 434411



33 வருடமாக பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

**மலையாள மாந்திரீகம்**

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம் காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:–

**P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.**

ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)

உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி

பி.கே. சாமி (J.D.G.A.N.)JP

NO.162, MAY FIELD ROAD KOTAHENA, COLOMBO-13

தொலைபேசி வரிசைகள்:

342463- 344831- 344832- 431137- 0784157

பக்ஸ் இல – 342464

பேஜர் சென்டர் இல- 588407

தொடர்பு கொண்டு இல- 972 இனைக் கேட்கவும்.

வெளி நாட்டில் உள்ளவர்கள்

COMPUTER INTERNET. NO.....

E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,

WWW LGO SLT.LK.

நேரில் சந்திக்க-

காலை 9 முதல் 12 வரை

மாலை 3 முதல் 6.30 வரை

அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.

வெள்ளிக்கிழமை விடுமுறை.

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்

வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்

144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

T.P: 586218, 078-63611

Fax: 503030

விளம்பரப் பகுதி

**பழுதுபார்த்தல்**

T.V, VIDEO DECK, RADIO

போன்ற எலக்ரோனிக் உபகரணங்கள் வெளி நாட்டில் பயிற்சி பெற்றவர்களினால் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் திருத்தப்படும்.

**LIBRA ELECTRONICS**

5, DEVOS AVENUE, BAMBALAPITIYA.

TELE PHONE: 585126

**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P. ஆறுமுகம்** அவர்களை

கீழ்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.

கல்முனை T.M.M பாமஸியில் ஏப்ரல் 5,6, 7, 8 திகதிகளிலும், கொழும்பு அகமட் டூரிஸ்ட் இன்னில் ஏப்ரல் 18 முதல் 30 வரையும் சந்திக்கவும்.

கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யலாம்

கொழும்பு நாட்களில் மட்டும் 078/71101

போன் : 436383, 438390

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா" வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA, 8/2, SRI SIDDARTHA ROAD, KIRILAPONE, COLOMBO-5. TELE PHONE: 823465. (பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# எங்கே போனது எம் ஐ-24

எம்ஜ.24 ரக ஹெலிகொப்டர் 19.03.97 அன்று மாயமாய் மறைந்து போனது.

எம்ஜ.24 ரக ஹெலிகள் மூன்று இலங்கை விமானப்படையிடம் இருந்தன. இவை ரசியாவில் தயாரிக்கப்பட்டவை.

ஒன்றின் விலை 40 இலட்சம் அமெரிக்க டொலர்கள். கிட்டத்தட்ட 22 கோடி ரூபாய்கள்.

குண்டு வீச்சு விமானம் போல செயற்படக்கூடியது எம்ஜ.24. ரொக்கட்டுக்கள், தரைக்கு ஏவக்கூடிய 4 ஏவுகணைகள், மற்றும் 12.7 மில்லிமீட்டர் பாரல் துப்பாக்கின் நான்கு என்பவை பொருத்தப்பட்டிருக்கும். பாரல் துப்பாக்கிகளால் நிமிடம் ஒன்றுக்கு நாலு ஆயிரம் முதல் ஐந்து ஆயிரம் வரையான ரவைகளைச் சுட்டுத்தள்ள முடியும்.

அது மட்டுமல்ல கைக்குண்டுகளை அள்ளி வீசக்கூடிய வசதியும், 500 கிலோ கிராம் கிளாஸ்ரர் குண்டுகளை வீசக்கூடிய வசதியும் இருக்கிறது.

முதலில் ரசியாதான் இதனை தயாரித்தது. தற்போது 'நேட்டோ' நாடுகளும் எம்ஜ.24 ரக ஹெலிகளை மேலும் நவீன தொழில் நுட்பங்களுடன் தயாரித்து சண்டைபோடத் தயாராக வைத்திருக்கின்றன.

இலங்கை விமானப்படையிடம் இருப்பவை ரசியாவின் உற்பத்தி. சற்று தொழில் நுட்ப வசதி குறைவானவை. இவை கொள்வனவு செய்யப்பட்ட விடயத்தில் சர்ச்சைகள் கிளம்பியிருந்தன. இவை காலாவதியான உதிரிப்பாகங்கள் கொண்டவை என்ற சந்தேகமே சர்ச்சைகளுக்கு காரணம்.

எம்ஜ.24 ரக ஹெலிகள் கடினமான வெளிக்கவசம் கொண்டவை. ஆனாலும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளால் சுடப்பட்டால் தாக்குப்பிடிக்க முடியாது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளிடம் இருந்து தப்புவதற்கு ஏற்ற சாதனங்கள் எதுவும் அதில் கிடையாது. விமான எதிர்ப்பு ஏவுகணையை எதிர்க்கும் ஏவுகணை அதில் இருப்பதாகச் சில செய்திகள் தெரிவித்தது உண்மையல்ல.

வானில் இருந்து தரையில் உள்ள இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகள் மட்டுமே அதில் பொருத்தப்பட்டிருக்கும்.

ஏவுகணைகளுடன் மோதும் ஏவுகணைகள் கொண்ட விமானங்கள் நம் நாட்டு விமானப்படையிடம் இதுவரை இல்லை. அது மிக விலை உயர்ந்த சமாச்சாரம். தொழில் நுட்பரீதியிலும் உயர்வானது.

அன்றனோ விமானங்களில் ஹீற் பலூன்கள் இருக்கின்றன. விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஏமாற்றிவிடக் கூடியவையே அவை. வெப்பத்தை மோப்பம் பிடித்துச் செல்லும் ஏவுகணைகள் அன்றனோவில் இருந்து புறப்படும் ஹீற் பலூன்களில் மோதி வெடித்துவிடும். அப்படித்தான் அன்றனோக்கள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளிடம் இருந்து தப்புகின்றன.

எனவே, எம்ஜ.24 ஹெலிக்கொப்டர் புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணையால் சுடப்பட்டு வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

ஆனால், புலிகள் உரிமை கோரவில்லை. முல்லைக் கடலில் ஹெலி வெடித்துச் சிதறி விழுந்ததைக் கண்டதாக மீனவர்கள் சொன்ன செய்தியைத்தான் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

புலிகள் சுட்டு வீழ்த்தியிருந்தால் நிச்சயம் உரிமை கோரியிருப்பர். அதுவும் மர்மமாக இருக்கட்டும் என்று நினைத்திருந்தால் முல்லைக் கடலில் ஹெலி விழுந்தது, என்ற தகவலைச் சொல்லியிருக்க மாட்டார்கள்.

ஆனால், காணாமல் போன ஹெலி புலிகளின் கையில் சிக்கியிருந்தால்மட்டுமே புலிகள் அதனை தெரிவிக்காமல் இருப்பார்கள். அரசின் கவனத்தை திசைதிருப்ப முல்லைக் கடலில் ஹெலி விழுந்ததாகக் கதை ஒன்றையும் அவிழ்த்துவிட்டிருப்பர்.

ஆக, எம்ஜ.24 புலிகளால் சுட்டுவீழ்த்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

இப்போதுள்ள சந்தேகம் ஹெலி புலிகளின் வசம் சென்றுவிட்டதா என்பது மாத்திரம்தான்.

தென்னிலங்கை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் ஹெலி காணாமல் போன சூட்டோடு சூடாக சந்தேகம் கிளப்பத் தொடங்கிவிட்டன.

சந்தேகத்துக்கு காரணம் இல்லாமல் இல்லை. காணாமல் போன ஹெலியில் ரசியாவைச் சேர்ந்த இரு விமானிகள் இருந்திருக்கிறார்கள்.

அவர்கள் ஊதிய அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள். அவர்களுக்கு பணம்தான் பிரதானம். எனவே புலிகள் பண ஆசை காட்டி அவர்களை தம் பக்கம் எடுத்திருக்கலாம்.

அதனால் அந்த இருவரும் ஹெலியில் இருந்தவர்களை மிரட்டிப் பணியவைத்து புலிகளின் வன்னிக் காட்டுக்குள் ஹெலியை இறக்கியிருக்கலாம் என்பதுதான் தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட சந்தேகம்.

பாதுகாப்புத் தரப்பினருக்கும் அந்தச் சந்தேகம் இல்லாமல் இல்லை.

ஹெலி புலிகளிடம் சிக்கியிருந்தால் தலை நகரப் பாதுகாப்புக்கு பெரிய அச்சுறுத்தல்தான்.

புலிகளின் வன்னித்தளத்தில் இருந்து மேற்குக் கரையோரமாக பறந்துவந்து மன்னார், புத்தளம், நீர்கொழும்பு ஊடாக தலை நகருக்குள் ஊடுருவித் தாக்கமுடியும்.

அப்படியும் நடக்கலாம், எதற்கும் விழிப்பாக இருக்கலாம் என்று தலைநகரின் கேந்திர முக்கியத்துவமான நிலைகள், மற்றும் முக்கிய வாசஸ்தலங்களில் ராடர்கள் வானை அலசிக்கொண்டிருக்க, ஏவுகணைகள் தயாராக இருக்கின்றன என்று தகவல்கள் கூறுகின்றன.

உண்மையில் ஹெலி புலிகளிடம்தான் சென்றுள்ளதா? அப்படிச் சென்றிருக்கலாம் என்பதற்கு தெரிவிக்கப்படும் காரணங்கள் சரியானதா? என்று பார்ப்போம்.

காணாமல் போன ஹெலியை ஓட்டிச் சென்றவர் ஃப்ளைட் லெப்டினன்ட் ஜே.என். மலசேகர. அவருடன் விமானிகளும், விமானப் பொறியியலாளராகவும் இருந்த இரண்டு ரசியர்கள் மற்றும் ஹெலியின் பாதுகாப்பு வீரர் ஒருவர் துப்பாக்கியுடன் இருந்தார். இவர்கள் தவிர விடுமுறை காரணமாக வீடு திரும்பிக் கொண்டிருந்த நான்கு விமானப்படையினரும் இருந்தனர்.

ஆக மொத்தம் ஆறுபேர் விமானப்படையைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவரிடம் தான் துப்பாக்கியும் இருந்தது. ஆறு பேரில் ஒருவர் விமானி. எனவே ஐந்துபேரை மடக்கினால்தான் ரசியர்கள் இருவரும் ஹெலியைக் கடத்த முடியும். அது சிரமமான காரியம்.

அடுத்தது காணாமல்போன எம்ஜ.24 ரக ஹெலிக்கொப்டரும் இன்னொரு அதே ரக ஹெலிக்கொப்டரும்தான் ஒன்றாகப் புறப்பட்டன. முதலில் சென்ற ஹெலி ஒரு குறிப்பிட்ட தூரம் முன்னாலே சென்று கொண்டிருந்தது.

இரண்டு ஹெலிகளுக்கும் இடையே பத்து நிமிடத்துக்கு ஒரு தடவை தொடர்புகள் கொள்ளப்பட்டன. அது தவிர தரையில் உள்ள கட்டுப்பாட்டு மையங்களுடன் இரு ஹெலி விமானிகளும் தொடர்பு கொண்டபடியே இருந்தனர்.

எம்ஜ.24 காணாமல் போவதற்கு முன்னர் முல்லைத்தீவுக் கடலின் மேலாக, கரையிலிருந்து ஐந்துமைல் தூரத்தில் பறந்து கொண்டிருந்தது. கடலில் புலிகளின் படகுகளோ, வேறு படகுகளோ காணப்படவில்லை.

கரையிலிருந்து புலிகள் ஏவுகணையால் தாக்கினாலும் எட்ட முடியாத தூரத்தில்தான் இரண்டு ஹெலிகளும் பறந்து கொண்டிருந்தன.

பத்து நிமிடத்துக்கு ஒரு தடவை தொடர்பு கொள்ளும் முறைக்கு ஏற்ப முன்னால் சென்ற ஹெலியின் விமானி தொடர்பு கொண்டிருக்கிறார். பதிலே வரவில்லை.

உடனே தரையில் உள்ள கட்டுப்பாட்டு மையங்களுக்கு செய்தி கொடுத்தபடியே தனது ஹெலியை பின்நோக்கித் திருப்பி சற்றுத் தூரம் தேடியிருக்கிறார். பின்னால் வந்த ஹெலியைக் காணவே இல்லை.

தகவல் அறிந்து, வை 12 விமானமும், எம்ஜ.12 ரக ஹெலிகளும் விரைந்து தேடுதல் நடத்தின. ஹெலி யார் கண்ணிலும் படவேயில்லை.

இதுதான் நடந்த சம்பவம்.

ஆக, மொத்தம் பத்து நிமிடத்துக்குள் நடந்துள்ள சம்பவம்தான்.

பத்து நிமிடத்தின் பின்னர் முதலாவது ஹெலி திரும்பிச் சென்று தேடியிருக்கிறது. புலிகளின் வன்னித் தளம் நோக்கி மற்றைய ஹெலி பறந்து சென்றிருந்தால் தேடிய விமானியின் கண்ணில் பட்டிருக்க வாய்ப்புண்டு.

புலிகளிடம் ஹெலியை கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமானால் காட்டுப் பகுதிக்குத்தான் சென்றிருக்க வேண்டும்.

ரசியாவைச் சேர்ந்த இருவருக்கும் வன்னிக் காட்டுப்பகுதி பரிச்சயமானதல்ல. எனவே துரிதகதியில் ஹெலி இறங்கக்கூடிய இடத்தைக் கண்டறிந்து இறக்கியிருக்க முடியாது.

அது தவிர ஹெலி இறங்கக்கூடிய பகுதி ஒன்று காட்டுப்பகுதியில் இருக்குமானால் வானில் இருந்து பார்க்கும்போது அப் பகுதி தெரியக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படியானால்தான் ஹெலியைத் தரையிறக்கலாம்.

அவ்வாறான பகுதியில் இறக்கப்பட்டிருந்தால் காட்டுப்பகுதிக்கு மேலாகவும் உடனடியாகப் பறந்து தேடிய விமானப்படை விமானங்களின் பார்வையில் நிச்சயம் பட்டிருக்க வேண்டும்.

மற்றொரு விடயம் யாதெனில், சந்தேகம் தெரிவிக்கப்படும் இரண்டு ரசியர்களும் விமானப்படைக்கு உதவியாக வந்திருப்பது இரகசியமானவை. விமானப்படையின் பாதுகாப்பில் உள்ளேயே தங்கியிருப்பவர்கள். அவர்களுடன் புலிகள் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் கிடையாது. கண்டதும் ஹலோ சொல்லிவிட்டு பணத்தை விட்டெறிந்து சாதிக்கும் காரியமல்ல இவை.

தொடர்பு கொள்ளவும், தொடர்பைப் பேணி படிப்படியாக தம் வலையில் அவர்களை வீழ்த்தவும் கால அவகாசம், தொடர் சந்திப்பு வசதிகள் என்பன முக்கியம். அதற்கான வாய்ப்பே இல்லை.

எனவே ரசியர்கள் இருவரும் சந்தேகப் பார்வையிலிருந்து விலக்கப்படவேண்டியவர்கள் ஆகிறார்கள். ஆக, ஹெலி புலிகளின் தளத்தில் இறக்கப்பட்டிருக்கலாம் என்று வெளியான ஊகங்களும், சந்தேகங்களும் அடிப்படை இல்லாதவையாகியுள்ளன.

# புக்காராவின் இறக்கையில் சீறிய குண்டு

-நாரதர்-



விமானங்களும், ஹெலிகளும் விபத்துக்கு உள்ளாவதும் காணாமல் போவதும் தொடரவே செய்யும். ஏனெனில் மேலும் மேலும் விமானப் பாவனை அதிகமாக தேவைப்படுகிறது. வடக்கில் உள்ள முகாம்களுக்கான விநியோகம், யாழ் குடாநாட்டுக்கான உயரதிகாரிகள் மற்றும் படையினரின் பயணங்கள் என்பவை விமானப் போக்குவரத்தையே முக்கியமாகச் சார்ந்துள்ளன.

அதேசமயம் விமானங்களின் தரம், விமானிகளின் அனுபவம், புலிகளின் ஏவுகணை அச்சுறுத்தலால் விமானிகளின் உளவியல் தயக்கங்கள், ஏற்கனவே நடந்த விமான விபத்து செய்திகளின் தாக்கம் போன்ற பல காரணிகளால் மேலும் விபத்துக்கள் தொடரக்கூடும். அவற்றை மர்மச் செயல்களாக சித்தரிப்பதும், சந்தேகங்கள் எழுப்பப்படுவதும் கூடத் தொடரலாம்.

விமானக் குண்டு வீச்சால் பலியானவர்களின் ஆவிகள் வானில் அலைந்துதிரிகின்றன என்றும் ஒரு நம்பிக்கை சார்ந்த கதை பரவியது.

ஊகங்கள், வதந்திகள், சந்தேகங்களுக்கு பஞ்சமிருப்பதில்லை. அவற்றில் சில ருசிகரமாக இருப்பதையும் மறுக்கவியலாது.

★★★

எம்ஜ.24 ரக ஹெலி காணாமல் போனதற்கு சரியாக மூன்றுநாட்கள் முன்பாக 16.03.97 ஞாயிற்றுக்கிழமை புக்காரா விமானம் ஒன்று வானில் வெடித்துச் சிதறியது.

வெடித்துச் சிதறியதால் புலிகள் சுட்டிருக்கலாமோ என்று சந்தேகம் எழுப்பப்பட்டது.

அதுபற்றிய தகவல்களும் தற்போது வெளியாகி உள்ளன.

16.03.97 அன்று இரவு 10.30 மணிக்கு அனுராதபுரம் ஹிங்குராகொட விமானத்தளத்தில் இருந்து குண்டுகளைக் காவிக்கொண்டு புறப்பட்டது புக்காரா. நான்கு 250கிலோ எடையுள்ள குண்டுகளைக் காவிச் சென்றது.

20 எம்.எம்.பீரங்கிகள், ரொக்கட்டுக்கள், இயந்திரத் துப்பாக்கிகள் என்பவை புக்காராவில் இருக்கும் ஆயுதங்கள். இவை அனைத்தும் தானாக இயங்கக்கூடியவை.

புக்காராவைச் செலுத்தியவர் உதேனா ராஜபக்ஷ. மட்டக்களப்புக்கு மேற்கே உள்ள புலிகளின் இலக்குகளை நோக்கி குண்டுகளைப் போடுவதுதான் திட்டம்.

விமானம் புறப்பட்டு தரையில் இருந்து பத்தாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. இலக்கை சென்றடைய மேலும் 30 நிமிடங்களே இருந்தன.

திடீரென்று ஏதோ ஒரு சத்தம். தீப்பொறி கிளம்பியது. புலிகளின் ஏவுகணைதான் வந்து பட்டுவிட்டதோ என்று நினைத்தாரோ என்னவோ, பாதுகாப்பாக குதித்துவிட்டார் விமானி.

புக்காராவின் இறக்கைகளில் பொருத்தப்பட்டிருந்த குண்டொன்றில் ஏற்பட்ட கோளாறுதான் விபத்துக்குக் காரணம் எனத் தெரிகிறது. அக் குண்டு திடீரென்று வெடித்தமையால்தான் இறக்கை கழன்றது.

புக்காராவில் கொண்டுசென்ற குண்டுகள் இங்குதான் செய்யப்பட்டவை. தென் ஆபிரிக்காவில் இருந்து உபகரணங்களை வாங்கி இங்கேயே செய்து முடிக்கிறார்கள். குண்டின் ஃபியூசில் ஏற்பட்ட கோளாறுதான் குண்டுவெடிக்க காரணமாக இருந்தது என்று தகவல் கசிந்திருக்கிறது.

புக்காரா ஒன்றின் விலை 26 இலட்சம் அமெரிக்க டொலர்கள். 1985ல் வாங்கப்பட்டதால் இந்த விலை. தற்போது வாங்குவதானால் அதிகம் கொடுக்க வேண்டும். அர்ஜெண்டினாவிடம் இருந்து 4 புக்காராக்கள் வாங்கப்பட்டன. புலிப்பாய்ச்சல் நடவடிக்கையில் 1995ல் புலிகள் யாழ்ப்பாணத்தில் ஒரு புக்காராவைச் சுட்டுவீழ்த்தினர். தற்போது ஒன்று வெடித்துள்ளது. மிச்சமிருப்பது இரண்டு புக்காராக்கள். அவை இயந்திரக் கோளாறுகள் காரணமாக பாவனைக்கு விடப்படாமல் உள்ளன.

★★★

அரசியல் தீர்வு விடயம் 'புலி வருகுது' கதை மாதிரி இருக்கிறது. எப்படியோ புலி கடைசியாக வந்தால் சரிதான். ஆனால் வருமா?

விஷயம் என்னவெனில் கடந்த வாரம் சில பத்திரிகைகளில் அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக நீதியமைச்சர் வெளியிட்ட கருத்துக்களும், தகவல்களும் வெளியாகி இருந்தன.

அவையெல்லாம் ஏதோ உடன்பாடு காணப்பட்டவைபோல செய்திகள் வெளியாகி இருந்தன.

அப்படியொன்றும் கிடையாது. மேலும் வெட்டிக் கொத்தி கீறிக் கிழித்து ஆராயப்படப்போகும் விடயங்கள்தான் அவை.

அதுமட்டுமல்ல, நிறைவேற்று ஜனாதிபதி விடயத்தில்கூட உடனடியாக மாற்றம் செய்யும் யோசனை பொதுஜன முன்னணியிடம் இல்லை.

கொள்கையளவில் அதனை ஏற்றுக்கொள்வது. ஆனால் பொதுத்தேர்தல்வரை நிறைவேற்று ஜனாதிபதி பதவியை வைத்திருப்பது என்பதுதான் பொதுஜன முன்னணியின் அபிப்பிராயம்.

எல்லாம் உடனடியாக தலைகீழாக மாறப்போவது போன்ற செய்திகள் உங்களைக் குழப்பியிருந்தால் மறந்துவிடுங்கள்.

நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள் வெளிநாட்டுப் பயணம் சென்றுள்ளார் அல்லவா. இனப் பிரச்சனை தீர்வை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று அங்கு சொல்வதற்குத் தோதாகவே பத்திரிகையாளர் மாநாட்டில் சில செய்திகளைக் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

அப்படிக் கூறப்பட்ட அனைத்தும் திட்டமாக மாறும் என்று அர்த்தமல்ல. எல்லாமே யோசனைகள்தான். சில சட்டமாகலாம்; சில ஓரமாகலாம்.

தவறு நீதியமைச்சர் மீதா? அவர் சொன்ன விடயங்களை மிகையாக விளங்கி வெளியான செய்திகள் மீதா?

# அதிரடி அய்யாத்துரை



'சென்றிப் பொயின்ட்', 'செக் பொயின்ட்'. முன்னது காவல் அரணையும், பின்னது சோதனை அரணையும் குறிக்கும். யாழ் குடாநாட்டில் முழத்துக்கு முழம் எண்டு சொல்லக்கூடிய அளவுக்கு சென்றிப் பொயிண்ட்டுக்கள் தான். சைக்கிளில் செல்லுவோர் இரண்டு பொயிண்டுகளிலும் இறங்கி இறங்கித்தான் உருட்டிக்கொண்டு போகவேணும். அரியாலை சென்றிப் பொயிண்டில் காணப்படும் வாசகம் இது: "கண்டிப்பாக இறங்கிச் செல்லவும். இல்லாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!" 'ஏறி இறங்கும் வாழ்க்கையடா' எண்டு பாடுகினமாம் சிலர்.

**இதுவும் ஒரு** செக் பொயிண்ட் பகிடிதான்: செக்பொயிண்ட் ஒன்றில் கால் மேல் கால் போட்டுக்கொண்டு இருப்பாராம் ஒரு பொலிஸ்காரர். சில சமயம் புத்தகமோ, பேப்பரோ படிச்சுக் கொண்டு இருப்பாராம். தனக்கு முன்பாக இறங்கும் ஆட்களை புத்தகம் படிச்சுக்கொண்டே தன் தலையை நிமிர்த்தாமல் 'போகலாம்' எண்டு கை காட்டுவாராம். அப்படித்தான் ஒருநாள் வாகனம் ஒண்டு வந்து நிற்க, அவர் சுவாரசியமாகப் புத்தகம் படிச்சுக்கொண்டு கையைக் காட்டியிருக்கிறார். நிமிர்ந்தே பார்க்கேல்லை. வாகனத்தில் இருந்தவர் இறங்கிப்போய், விட்டாராம் நாலு அறை. வந்த வாகனம் பொலிஸ் ஜீப். அறைந்தவர் உயரதிகாரி.

**வடக்கு-கிழக்கு** மாகாண முன்னாள் அதிகாரக் கட்சியினர் யாழ்ப்பாணத்தில் மன்னிப்புக் கேட்கும் படலத்தில் ஈடுபட்டுள்ளனராம். இந்தியப் படை காலத்தில் நடந்த தங்கள் திருவிளையாடல்களுக்குத் தான் மன்னிப்புக் கேட்கினம். அது மட்டுமில்லைப் பாருங்கோ. முரசின் அரசியல் தொடரில் தங்கள் திருவிளையாடல்களும் வெளிவரும் என்பதால் முரசை திட்டித்தீர்க்கும் திருப்பணியிலும் இறங்கியிருக்கினமாம். திருப்பணி தொடர வாழ்த்துவோமாக. ஹி.ஹி.ஹி.

**நூறு ரூபா** கைமாத்துக் கேட்டார் கொட்டடிச் செண்பகம். கொடுக்க மறுத்தவரை ரெண்டு எழுத்தார் எண்டு பிடிச்சுக் கொடுத்தாராம். இது நடந்தது யாழ்ப்பாணத்திலை. இப்பெல்லாம் கப்பம் கேட்கும் புண்ணியவான்களைக் கண்டால் சனம் கலங்குதாம். கொடுக்க மறுத்தால் பிடிச்சல்லோ கொடுத்துப்போடுவான்கள்.

**மலையக** தனித்துவத் தலைவரின் பேரனார் பதவியை ராஜினாமா செய்தாராம். கட்சி அதனை ஏற்கவில்லையாம். செய்தியைப் படிச்ச எனக்கு ஒரு சந்தேகம். ராஜினாமா செய்ய முன்னரே அது ஏற்கப்படாது எண்டு தெரிஞ்சிருக்குமோ? அரசியலும் ஒரு கலைதான் பாருங்கோ. அந்தக் கலையில் பேரனாரையும் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார் தலைவர்.

**திருவான மலையின்** தங்கமான பிரதிநிதிக்கும், நகரத்தின் சூரியருக்கும் இடையே பாசப்பிணைப்பு பலமடைந்துள்ளதாம். சம்பந்தமானவரின் அபிமானிகள் லோக்கல் எலக்ஷனில் போட்டியிட்டால் சூரியருக்கு முழுச் சப்போர்ட் கொடுக்க நினைக்கிறாராம் தங்கத்தார். சுய இச்சையாகத்தான் போட்டியிட நினைக்கிறாராம் சூரியர்.

**பாலஸ்தீனத் தலைவருக்கு** தலைநகரில் மேலிட உபசரிப்பு நடந்ததாம். ஒரேயொரு தமிழ்க் கட்சி தலைவருக்குத்தான் அழைப்பு விடுக்கப்பட்டதாம். பாலஸ்தீன தலைவரின் 'அலஃபட்டா' இயக்கத்திடம் பயிற்சி பெற்றவர் ஜனநாயகக் கட்சித் தலைவர். அவருக்கு அழைப்பில்லையாம். தான் கூறும் கருத்துக்கு முரண்பட்டு ஏதாவது கதைச்சுப்போடுவார் எண்டு நினைத்துத்தான் அழைப்பு விடுக்கப்படவில்லையாம். "அவரையும் அழைத்திருக்கலாம் மறந்துவிட்டேன்" எண்டு உபசரிப்பில் சொன்னாராம் 'சக்தி'யானவர்.

**கிழக்கில்** பாய்ச்சல் நடந்த பகுதியில் உடைந்த பாலத்தை திருத்திவிட்டார்கள். ஆனாலும் பாவனைக்கு விடாமல் வைத்திருக்கிறார்களாம். ரெண்டு எழுத்தார்மீது சனத்துக்கு வெறுப்பு வரட்டும் எண்டு நினைக்க சனத்தை தொல்லைப்படுத்துவது சரிதானோ?

**தலைநகரின்** பிரபல தமிழ் தினசரியில் இருந்து ஏற்கனவே பிரிந்த ஒரு பகுதியினர் வெளியேறி புதிய பத்திரிகை கொண்டு வருகினம். இப்போது இன்னொரு பகுதியினரும் வெளியேறி 'குரல்' தொடங்கியிருக்கினம்.

**பச்சைக் கட்சியினர்** வெற்றி பெற்ற சபைகளில் தூண்டிலுடன் இறங்கியுள்ளனராம் முன்னணியினர். அதனால் பச்சை சபைகளில் உட்பூசல், கவிழ்ப்புக்கள் போன்ற கெட்ட சகுனங்கள் நடக்கலாமாம்.

**அருமையான ஒரு குட்டிக் கவிதை:**

**வாழ வழி**

"ஜோசியத்தை நம்பினேன்
பார்த்தவர் வாழ்ந்தார்.
லொட்டரியை நம்பினேன்
விற்றவர் வாழ்ந்தார்.
உழைப்பை நம்பினேன்
உண்மையில் நான் வாழ்ந்தேன்!"



படிப்பகம்

www.padippakam.com



அற்புதன்~ எழுதுவது

# 123

# இந்தியாவின் நோக்கம் என்ன? புலிகள் வெளியிட்ட தகவல்களும் பிரதான குற்றச் சாட்டுக்களும்

## தமிழ்நாட்டில் சுதந்திரம்

இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பாக 1987 டிசம்பரில் புலிகள் அமைப்பினரால் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டு மக்களுக்கு தமது நிலைப்பாட்டை விளக்கும் வகையில் சென்னையில் இருந்தே புலிகள் அதனை வெளியிட்டனர்.

இந்தியப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதும் தமிழ்நாட்டில் புலிகள் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்தனர்.

தமிழ்நாட்டில் இருந்தபடியே இந்தியப் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக பிரசாரம் செய்து வந்தனர்.

தமிழக பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் இந்தியப் படையினரின் நடவடிக்கைகள், பாலியல் பலாத்காரங்



வன்னிக்காட்டில் பிரபா-மாத்தையா

கள் தொடர்பான செய்திகள் புலிகளால் வழங்கப்பட்டு வெளியிடப்பட்டன.

தமிழ்நாட்டிலுள்ள சில பத்திரிகைகள் இந்தியப் படையினருக்கு எதிரான புலிகளின் செய்திகளை வெளியிட மறுத்தன.

இந்தியப் படையினரின் அத்துமீறல்களை வெளியிடுவது இந்தியாவுக்கு எதிரான செயல் என்றே அப் பத்திரிகைகள் நினைத்தன.

ஆனால் ஜுனியர் விகடன், நக்கீரன், ராணி, தேவி, போன்ற சஞ்சிகைகள் இந்தியப் படையின் அத்துமீறல்களை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

அதேபோல இந்திய ஆங்கில ஏடுகள் பலவும் இந்தியப் படையின் செயற்பாடுகளை மூடி மறைக்காமல் பிரசுரித்தன.

தமிழ்நாட்டில் இருந்து புலிகளால் சுதந்திரமாகச் செயற்பட முடிந்தமையால் தான் இந்தியப் படையினரின் நடவடிக்கைகளை விரிவான முறையில் அம்பலப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்தது என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரோடு புலிகளுக்கு இருந்த நெருக்கம், தமிழகத்தில் தி.மு.க., தி.க. போன்ற கட்சிகள் புலிகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை நடத்தியமை போன்ற காரணங்களால் இந்திய மத்திய அரசு தமிழ்நாட்டில் புலிகளின் செயற்பாடுகளுக்கு உடனே தடைவிதிக்கவோ, கட்டுப்படுத்தவோ முன்வரவில்லை.

## 'றோ'வின் தொடர்பு

அதே சமயம் இந்திய உளவுப்பிரிவான 'றோ'வும் புலிகளுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பை வைத்திருக்கவே விரும்பியது.

அதனால் சென்னையில் இருந்த கிட்டுவுடன் 'றோ' அதிகாரிகள் அடிக்கடி சந்தித்து பேச்சு நடத்தினார்கள்.

பிரபாகரனுடன் தொடர்புகொள்ள கிட்டுவை விட்டால் வேறு ஆள் கிடையாது. இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் தொடங்கிய பின்னர் புலிகளுடனான தொடர்புகளை 'றோ' இழந்துவிட்டது. எனவே சென்னையில் இருந்த கிட்டுவையும் விட்டால் புலிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய சகல வழிகளும் மூடப்பட்டது போலாகி விடும்.

அதனால்தான் சென்னையில் இருந்த கிட்டுவுக்கோ, புலிகளுக்கோ அதிக நெருக்கடி கொடுக்காமல் அவர்களுடன் உறவை வைத்துக் கொண்டது 'றோ'.

போர் நிறுத்தம் ஒன்றுக்குப் புலிகளை இணங்கச் செய்யவும் 'றோ' அதிகாரிகள் கிட்டுவுடன் பேசிக்கொண்டிருந்தனர்.

"இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு போர் நிறுத்தத்துக்கு முன்வரட்டும். வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தை பெற்றுக்கொள்ளலாம். தேவையான நிதி உதவியும் செய்யலாம்!" என்று 'றோ' அதிகாரிகள் கிட்டுவிடம் கூறிக் கொண்டிருந்தனர்.

'றோ' அதிகாரிகளின் கருத்துக்களால் கிட்டுவின் மனதிலும் சற்றுக் குழப்பம் ஏற்பட்டது. 'பணம் தருவதாகச் சொல்கிறார்கள். மாகாண நிர்வாகமும் எம்மிடம் இருக்கும். இலங்கை அரசுடன் மீண்டும் சண்டையிட வேண்டிய நிலை ஏற்பட்டால் இந்தியா இப்போது தரப்போகும் பணத்தை வைத்து ஆயுதம் வாங்கிக்கொள்ளலாம். எனவே தற்போது சண்டையை நிறுத்தினால் என்ன?' என்ற போக்கில் கிட்டுவும் யோசித்தார்.

'றோ' அதிகாரிகள் தெரிவித்த செய்திகளை கிட்டு பிரபாகரனுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிக் கொண்டிருந்தார்.

ஆனாலும் பிரபாகரனிடம் இருந்து சாதகமான பதில் எதுவும் சென்னையில் இருந்த கிட்டுவுக்கு எட்டவில்லை.

'றோ'வை நமபுவதற்கு பிரபாகரன் தயாராக இல்லை. ராஜீவைச் சந்திப்பதற்காக என்று அழைத்துச் சென்று, புதுடில்லியில் கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பில் தன்னை வைத்திருந்ததையோ, ஒப்பந்தத்தில் கையொப்பம் போடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதையோ பிரபாகரன் மறக்கத் தயாராக இல்லை.

## அதிர்ச்சியான தகவல்கள்

தமிழ்நாட்டில் புலிகள் அமைப்பினரின் பிரசாரங்கள் தீவிரமானதால் கிட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

இந்திய மத்திய அரசை திருப்திப்படுத்த எம்.ஜி.ஆர். மேற்கொண்ட நடவடிக்கையே அதுவாகும். அதேசமயம் கிட்டு வீட்டில் இருந்தபடியே சந்திக்க வேண்டியவர்களைச் சந்திக்கத் தடையிருக்கவில்லை. சென்னையில் இருந்த புலிகள் இயக்க அலுவலகமும் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

'விடுதலைப் புலிகள்' பத்திரிகையும் அங்கிருந்து வெளியாகிக் கொண்டிருந்தது. இந்தியப் படைக்கும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கும் எதிரான பிரசுரங்களும் மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு நேர்த்தியாக வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தன.

1987 டிசம்பர் மாதம் சென்னையில் வெளியான புத்தகம் பற்றி மேலே குறிப்பிட்டிருக்கிறேன் அல்லவா? 'இந்தியாவும் ஈழத் தமிழர் பிரச்சனையும்' என்ற பெயரில் அப் புத்தகம் வெளியானது.

அப் புத்தகத்தில் அதிர்ச்சி தரக்கூடிய சில தகவல்களை புலிகள் வெளியிட்டனர். அவை சர்ச்சைக்குரியவையாக இருந்தன.

புலிகள் தெரிவித்த தகவல்களும் குற்றச் சாட்டுக்களும் இவைதான்:

"1987 ஜனவரியில் சிங்கள இனவாத அரசு யாழ் குடாநாட்டில் பொருளாதார முற்றுகையை ஏற்படுத்தியதுடன், வடக்கிலும், கிழக்கிலும் பெரியளவான இராணுவப் படையெடுப்பையும் மேற்கொண்டது.

வடக்கில் மட்டும் 20 ஆயிரம் துருப்புக்கள்வரை யுத்தத்தில் குதித்தன. எமது கெரில்லா அணிகள் பல்வேறு அரங்குகளில் அரச படையினரை எதிர்த்து வீராவேசத்துடன் போர்புரிந்து வந்தன. ஆயுதங்கள், வெடி மருந்துகள் பற்றாக்குறையுடன் நாம் எதிரியைச் சமாளித்துக் கொண்டிருந்தோம்.

## இந்தியா மறுப்பு

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாம் இந்திய அரசிடம் ஆயுத உதவி கோரினோம். எமது மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகி வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, எமது மக்களைப் பாதுகாக்க உதவி செய்யுமாறு நாம் பாரதத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தோம்.

எமது கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாகக் கூறிக்கொண்ட பாரதம் மௌனமாக இருந்தது. நாம் கோரிய ஆயுதப்பட்டியல் விபரங்கள், எமது வெடி மருந்துப் பற்றாக்குறைகள் போன்றவற்றைச் சேகரித்த 'றோ' அதிகாரி உன்னி கிருஷ்ணன் இலங்கை அரசுக்குச் சமர்ப்பித்தார்.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் சிறீலங்கா இராணுவம் தனது போர் உபாயங்களை வகுத்தது. யுத்தத்தைத் தீவிரப்படுத்தியது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில், களத்தில் நின்று போராடிய எமது இயக்கத்திற்கு ஆயுத உதவியளித்து, எமது மக்களைப் பாதுகாக்கத் தயங்கிய இந்தியா, தமிழ்நாட்டில் செயல் இழந்து கிடந்த இயக்கங்களுக்கு பயிற்சியும், ஆயுதங்களும் வழங்க முன் வந்தது.

இந்த நடவடிக்கையானது எமக்கு இந்தியாமீதிருந்த நம்பிக்கையைத் தகர்த்தது. இதன்மூலம் இந்திய அரசின் நோக்கம் எமக்குத் தெளிவாகியது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பலம்வாய்ந்த இராணுவ சக்தியாக உருவெடுத்து சிறீலங்கா ஆயுதப் படையினரைத் தோற்கடிப்பதை இந்தியா விரும்பவில்லை.

'சிறீலங்காப் படையினர் புலிகளை அழித்து இராணுவரீதியாக பலவீனப்படுத்த வேண்டும். புலிகளால் மக்களைப் பாதுகாக்க முடியாத சூழ்நிலை உருவாகவேண்டும். மக்கள் மத்தியில் புலிகள் மீதிருந்த நம்பிக்கை தளரவேண்டும், அந்தச் சூழ்நிலையில் தமிழர்களின் இரட்சகர் என்ற போர்வையில் நேரடியாக இராணுவரீதியில் தலையிட வேண்டும்.' இப்படித்தான் இந்திய அரசு திட்டமிட்டது.

அதேசமயம் இந்திய அரசு ஜயவர்த்தனாவை மிரட்டியது. "ஏவுகணைகள் உட்பட நவீன ஆயுதங்கள் புலிகளுக்கு வழங்கி சிறீலங்கா படைகளை முறியடிப்போம். பெரிய அழிவுகளை உண்டுபண்ணுவோம். எந்த ஒரு ஏகாதிபத்திய சக்தியிடம் உதவி பெற்றாலும் யுத்தத்தில் வெல்ல முடியாமல் செய்வோம்" என்று மிரட்டியது.

தமிழரின் நலனில் இந்தியா அக்கறை கொண்டிருந்தால் விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவி வழங்கித் தமிழ் மக்களின் அழிவைத் தடுத்திருக்க முடியும். ஆனால் இந்தியா அதனை விரும்பவில்லை.

புலிகளின் வெற்றிக்கு வழிவகுத்துச் கொடுத்தால் தனது தலயீட்டுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று இந்தியா கருதியது.

ஒரு அப்பட்டமான இனப்படுகொலையைத் தடுக்க வேண்டும் என்ற மனிதாபிமான



வரதராஜப்பெருமாள்-திடீர் பாய்ச்சல்

நிலைப்பாட்டைக் கைவிட்டு, தனது பூகோள நலன்களில் மட்டுமே இந்திய அரசு அக்கறை காட்டியது.

## ஒப்பந்தம்

இலங்கை-இந்திய ஒப்பந்தமானது தமிழீழ மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கவில்லை. இலங்கையில் வாழும் பல்லின மக்களின் ஒரு சமூகக் குழுவாகவே தமிழீழ மக்களைக் குறிப்பிடுகிறது.

இந்த ஒப்பந்தமானது தமிழர் தாயகத்தையும், அந்தத் தாயகத்தில் தமிழரின் ஒருமைப்பாட்டு உரிமையையும் அங்கீகரிக்கவில்லை.

தற்காலிகமான வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி குறிப்பிட்டபோதும் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தமிழர் மாநிலத்தைப் பிரிவுபடுத்தும் ஆபத்தான விதிகளையும் கொண்டிருக்கிறது.

## கூட்டணியின் காவடி

மாகாணசபை திட்டத்தில் ஜனாதிபதிக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதையும், அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்து மாகாண சபைகளைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டு இருப்பதையும் ஒரு முக்கிய குறைபாடாக நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அதி முக்கியமாக காணி உரிமை, குடியேற்றம் சம்பந்தப்பட்ட மட்டில் தமிழரின் நில உரிமை பேணப்படவில்லை என்பதையும், அத்துமீறிய சட்டரீதியற்ற சிங்களக் குடியேற்றங்களை அகற்றும் வழிமுறைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் எடுத்துரைத்தோம்.

ஒட்டுமொத்தத்தில் மாகாணசபைத் திட்டம் தமிழரின் உரிமைகளையும், நலன்களையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இந்தத் திட்டத்தை ஏற்கனவே நாம் நிராகரித்துள்ளோம்.

கடந்த சில வருடங்களாக கொழும்புக்கும், டில்லிக்கும் காவடி எடுத்து, இந்த மாகாணசபைத் திட்டம் பற்றி பேச்சு நடத்தி, அத் திட்டத்திற்கு சட்ட வடிவம் கொடுக்க உதவியவர்கள் கூட்டணியினரே. இதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் கூட்டணித் தலைவர்கள் கொழும்பில் பேச்சுக்கள் நடத்தி இருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் அதே கூட்டணியினர் மாகாண சபைத் திட்டத்தில் எவ்வித அதிகாரமும் இல்லை, என்று தற்போது கண்டித்திருக்கிறார்கள்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக ஆதரித்துக் கொண்டு, இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமான மாகாண சபைத் திட்டத்தைக் கண்டிக்கும் கூட்டணித் தலைமையின் துரோகத்தனமான அரசியலை எமது மக்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

கூட்டணித் தலைமையின் தூரநோக்கற்ற சந்தர்ப்பவாத, சுயநல அரசியல் கொள்கைதான் இன்று எமது மக்களின் துர்ப்பாக்கிய நிலைக்குக் காரணம்.

## ஆயுத ஒப்படைப்பு

இந்திய அரசானது எம்மை ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணாகதி அடையச் சொல்லுகிறது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிபந்தனை அற்ற முறையில் ஆதரிக்கச் சொல்கிறது.

நாம் ஆயுதத்தில் காதல் கொண்ட அராஜகவாதிகள் அல்லர். நாம் பலாத்காரத்தை வழிபடும் பயங்கரவாதிகள் அல்லர். நாம் யுத்தவெறிகொண்ட, இரத்தவெறி கொண்ட வன்முறையாளர்கள் அல்லர்.

நாம் சமாதானத்தை விரும்புகிறோம். எமது மக்கள் சமாதானமாக, நிம்மதியாக, சுயகௌரவத்துடன் சுதந்திரமாக வாழ்வதையே விரும்புகிறார்கள்.

ஒடுக்கப்பட்ட எமது மக்களின் உரிமையை மீட்டெடுப்பதற்காகவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம். அந்த இலட்சியத்துக்காகவே நாம் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகிறோம். அந்த இலட்சியத்துக்காக இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட எமது வீரர்கள் உயிரை அர்ப்பணித்துள்ளனர்.

எமது வீரவரலாற்றுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு எம்மை சரணாகதி அடையச் சொல்கிறது இந்திய அரசு.

நாம் பாரத நாட்டுடன் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. போர் புரிய விரும்பவில்லை. நாம் ஆயுதங்களைக் கீழே போட தயாராக இருக்கிறோம். ஆனால் நாம் ஆயுதங்களைக் கையளித்துவிடுவதால் எமது மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு தரப்பட்டுவிடுமா? எமது மக்கள் நிம்மதியாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வழி பிறக்குமா?

நாம் ஆயுதங்களைக் கீழேபோட தயாராக இருக்கிறோம். ஆனால் எமது மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். இந்திய அரசு தனது இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு, புலிகளை வேட்டையாடுவதைக் கைவிட்டு; எமது மக்களுக்கு சுபிட்சமான வாழ்வை, ஒரு நிரந்தரமான தீர்வைக் காண முயற்சி எடுக்க வேண்டும்.. அப்பொழுது நாம் ஆயுதங்களைக் கீழே போடுவோம்.

## அடிபணியோம்

இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்களைக் கண்டு நாம் அஞ்சி அடிபணிந்து போனால் நாம் ஜயவர்த்தனா அரசுக்கு அடிமைகளாகப் போக நேரிடும். இத்தனை காலமாக நாம் இரத்தம் சிந்திப் போராடியதற்கு அர்த்தமில்லாமல் போய் விடும்.

நாம் அடிபணிந்து போனால் அடுத்த பரம்பரை எம்மை மன்னிக்கப்போவதில்லை. நாம் இந்திய இராணுவத்துக்கு அஞ்சவும் கூடாது. எந்த வகையிலும் ஒத்துழைக்கவும் கூடாது.

இந்தியா ஒரு அந்நிய நாடு. இங்கு வந்து எமது மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டு இந்திய இராணுவம் எம்மை அடிமைப் படுத்துவதை நாம் அனுமதிக்க முடியாது.

எமது மக்களுக்கு எதிராகத் தான் செய்யும் அட்டூழியங்களையும், அநியாயங்களையும் இந்திய அரசு உலகின் முன்பாக இருட்டடிப்புச் செய்கிறது. அபாண்டமான பொய்களைக் கூறிவருகிறது.

பொய்மையின் திரைகளைக் கிழித்துக் கொண்டு உண்மை ஒருநாள் வெளிவரத்தான் செய்யும். அப்பொழுது பாரதம் உலக மனச்சாட்சி முன் தலை குனிந்து நிற்கும். அப்போது வரலாறு எம்பக்கம் திரும்பும். அன்றுதான் எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். அன்றுவரை நாம் உண்மைக்காக, நீதிக்காக தொடர்ந்து போராடுவோம்!"

அவ்வாறுதான் புலிகள் அமைப்பினர் தமது நூலில் கூறியிருந்தனர். புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவினால் அந்த நூல் வெளியிடப்பட்டது.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## இயக்கங்களின் உதவி

பொதுமக்களின் நலனில் தமக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்ள இந்தியப் படை அதிகாரிகள் முயற்சி செய்தனர்.

எனினும் எங்காவது ஒரு தாக்குதல் சம்பவம் நடைபெற்றால், அந்த முயற்சிகள் பலன் இல்லாமல் போயின. பதிலடியாக பொதுமக்களைச் சுட்டுத்தள்ளும் தமது படைவீரர்களை வைத்துக்கொண்டு மக்களுடன் சுமுக உறவை ஏற்படுத்துவது எவ்வாறு? அதுதான் இந்தியப் படை அதிகாரிகளின் குழப்பம்.

அது மட்டுமல்லாமல், இந்தியப் படைக்கு எதிரான பிரசாரங்களை முறியடிக்க, வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் தங்கள் பக்கம் இருப்பதாகக் காட்டும் தேவையும் இந்திய அரசுக்கு இருந்தது.

இந்தியப் படை இலங்கை சென்றது தமிழர்களுக்காகத்தான் என்பதை தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கும் சொல்லியாக வேண்டும். இல்லாவிட்டால் தமிழ்நாட்டில் இந்திய மத்திய அரசின் ஆளும் கட்சியான காங்கிரசுக்கு தேர்தலில் பாதகம் ஏற்படும்.

எனவே-இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்பியமை, ஒப்பந்தம் செய்யப்பட்டமை போன்றவற்றை மிகச் சரியான நடவடிக்கை, பலன் தரும் நடவடிக்கை என்று காட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தத் திட்டமிட்டது இந்திய அரசு.

அதற்கு முன்னோடியாக புலிகளுக்கு எதிரான இயக்கங்களில் தனக்கு மிக விசுவாசமான ஓர் இயக்கத்துக்கு முன்னுரிமை கொடுக்க முன்வந்தது.

தன்னை ஒரு இந்திய வம்சாவளித் தமிழர் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் அறிமுகம் செய்து கொண்டவர் வரதராஜப் பெருமாள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துக்குள் சாதாரணப் பிரமுகராகப் புகுந்த வரதர்ராஜப் பெருமாள், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராக மாறுவதற்கு வாய்ப்பாக அமைந்ததும், பெருமாள், இந்தியத் தூதரகம் மூலமாக ஏற்படுத்திக் கொண்ட உறவுகள் தான்.

இவற்றின் பின்னணியில் நடந்த இரகசிய குழிபறிப்புக்கள் பற்றிய சுவாரசியமான சங்கதிகள் பற்றி அடுத்தவாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பிஸ்டல் காட்டிய அரபாத்!

அலசுவது– இராஜதந்திரி



இலங்கையில் அதிகூடுதல் பாதுகாப்புடன் ஓர் இடம் இருக்குமானால், அது ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரிமாளிகையாகவே இருக்கமுடியும். இங்கு ஜனாதிபதியே திகைப்புறும் விதத்தில் பிஸ்டல் துப்பாக்கி ஒன்றை, அவரிடம் வந்த விருந்தாளி ஒருவர் எடுத்துதிக்காட்டியிருந்தார்.

அவ் விருந்தாளிகூட சாதாரணமானவரல்ல, பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்தே அவராவார்.

கடந்த வாரம் 24 மணி நேர விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்த பாலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத்துக்கு அதீத பாதுகாப்புடன் கூடிய அரச மரியாதை வழங்கப்பட்டிருந்தது.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய பாலஸ்தீனத்தலைவர் மிகவும் பாதுகாப்புடன் ஹெலிக்கொப்டர்கள் மூலமாக கொழும்புக்குக் கூட்டிவரப்பட்டிருந்தார்,

உலகில் மிகுந்த பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டுள்ள பிரமுகர்களில் ஒருவரே யாசீர் அரபாத், எனவே இலங்கை அரசு கூட, எவ்வித அசம்பாவிதங்களுக்கும் இடந்தராது ஆகாயமார்க்கமாகவே பாலஸ்தீனத்தலைவரை விமான நிலையத்திலிருந்து கொழும்புக்குக் கூட்டிவந்திருந்தது.

பாதுகாப்பு என்ற ரீதியில் விமானப்படை. ஹெலிக்கொப்டர்கள் அரபாத்தை கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு மாநகருக்கு ஏற்றிவந்திருக்கலாம்.

ஆனால் அண்மையில் இலங்கை விமானப்படையின் விமானங்கள், ஹெலிக்கொப்டர்களுக்கு அடுத்தடுத்து நேர்ந்த அனர்த்தங்கள் பற்றிய தகவல்கள், பி.எல்.ஓ. தலைவரின் வயிற்றில் சில சமயம் புளியைக்கூட கரைத்து விட்டிருக்க முடியும்.

எது எப்படி இருந்தபோதிலும், பாலஸ்தீனத் தலைவரிடமிருந்து அன்பளிப்பாகக் கிடைத்த அழகிய கம்பளப் போர்வை கொடுத்த சந்தோஷம் அகலுமுன்னர், அவர் தமது இடுப்பிலிருந்து உருவி எடுத்துக் காட்டிய பிஸ்டல் துப்பாக்கி ஜனாதிபதிக்கு மிகுந்த வியப்பையே கொடுத்திருந்தது. ஏனெனில்

அரபாத்திடமிருந்து அத்துப்பாக்கியை ஜனாதிபதி சந்திரிகா முற்றிலும் அன்று அலரிமாளிகையில் எதிர்பார்த்திருக்கவில்லை.

புளொட் தலைவர் சித்தார்த்தன், ஜனாதிபதி சந்திரிகா, பி.எல்.ஓ. தலைவர் யாசீர் அரபாத் ஆகியோர் கடந்தவாரம் அலரிமாளிகை இராப்போசன வைபவத்தில் ஒன்றாக இருந்துள்ளனர்.

பலதரப்பட்டவற்றையும் அம்மூவரும் பேசியுள்ளனர். அச்சமயம் யாசீர் அரபாத்திடம், "நீங்கள் இப்போது இடுப்பில் துப்பாக்கி வைத்திருப்பதில்லைப் போலும்!" என்று புளொட் தலைவர் கூறியுள்ளார்.

அப்போது குறுக்கிட்ட ஜனாதிபதி சந்திரிகா, "அவர் இப்போது ஒரு தேசத்தலைவர். எனவே அதனைத் தம்மோடு எப்போதும் அவர் வைத்திருக்க வேண்டியதில்லை. மெய்ப்பாதுகாவலர்கள் இருக்கிறார்கள்," என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா அப்படிக் கூறியதுதான் தாமதம்– பி.எல்.ஓ. தலைவர் யாசீர் அரபாத், தமது சீருடைக்குள் வைத்திருந்த பிஸ்டல் துப்பாக்கியை வெளியே எடுத்துக் காண்பித்தார்.

புளொட் தலைவரும், ஜனாதிபதியும் ஒருவரை ஒருவர் வியப்போடு பார்த்தனர்.

எனவே யாசீர் அரபாத் தற்போது ஒரு தேசத்தலைவரின் அந்தஸ்த்தில் இருக்கலாம். சமாதானத்துக்கான நோபல் பரிசைக்கூடப் பெற்றிருந்திருக்கலாம். பாலஸ்தீன-இஸ்ரேலிய பிரச்சினை தொடர்பாக அவர் ஏறி இறங்காத சர்வதேச அரங்குகளே இல்லை எனவும் கூறலாம்.

இருந்தபோதிலும் அரபாத் இன்றுவரை தமது உயிருக்குப் பாதுகாப்பில்லை என்பதையும், தாம் எதிர்பார்க்கும் சமாதானமோ, அல்லது பாலஸ்தீன மக்களின் விடிவோ எவ்விதத்திலும் கை கூடவில்லை என்பதையே அவர் வைத்திருந்த பிஸ்டல் துப்பாக்கி புலப்படுத்தியிருந்தது.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் மத்திய கிழக்கில் இஸ்ரேலிய-பாலஸ்தீனப் பிரச்சினை சூடுபிடித்திருந்த காலம்.

பாலஸ்தீனர்களும், இஸ்ரேலியர்களும் ஒருவரையொருவர் பயங்கரவாதிகளாகவே அப்போது பார்த்திருந்தனர்.

ஆயினும் பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக உலகில் பெரும்பாலான தேசங்கள் குரல் கொடுத்திருந்தன. இதன் காரணமாக பாலஸ்தீனர்களின் நிலபுலன்களை இஸ்ரேலியர்கள் சுவீகரம் செய்து, அவர்களைத் துரத்தியடித்தபோதெல்லாம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை உலக நாடுகள் பலவும் ஏற்றுக் கொண்டிருந்தன.

1976ம் ஆண்டு இலங்கையில் அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாடு இடம்பெற்றது. அதுவே இலங்கையில் நூறுக்குமதிகமான உலகத் தலைவர்களை ஏககாலத்தில் கூடச் செய்த ஒரு வைபவமாகவும் அமைந்திருந்தது.

அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, கியூபாத் தலைவர் பிடெல் காஸ்ட்ரோ, லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி, அன்றைய யூகோஸ்லாவியத் தலைவர் மார்ஷல் டிட்டோ, அன்றைய எகிப்திய தலைவர் அன்வர் சதாத் உட்பட ஆசிய- ஆபிரிக்க நாடுகள் பலவற்றினதும் தலைவர்கள் கொழும்பில் அணிசேரா உச்சிமகாநாட்டுக்கு வந்திருந்தனர்.

அத்தலைவர்களில் ஒருவராகவே அப்போது பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்தும் இலங்கை வந்திருந்தார். எனவே அரபாத்துக்கும் ஒரு தேசத்தலைவருக்கு நிகரான வரவேற்பையே அன்று இலங்கை அரசு வழங்கியிருந்தது.

அச்சமயம் இலங்கை, இஸ்ரேலுடனான உறவுகளைத் துண்டித்திருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்போதைய நிலைமைகள் வேறு.

ஒரு காலத்தில் கீரியும்-பாம்புமாகவே இருந்த இஸ்ரேலும், பாலஸ்தீனரும் தம்மிடையே சமாதான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளன. அதற்காக இருதரப்புத் தலைவர்களும் நோபல் சமாதானப் பரிசைக்கூடப் பெற்றிருந்தனர்.

ஆனால் நோபல் பரிசைப் பெற்றுத் தந்த அச்சமாதான ஒப்பந்தம் தற்போது 'செல்லாக்காசாகி' வருவதையே பாலஸ்தீனத்திலும், இஸ்ரேலிலும் இடம் பெறும் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பாலஸ்தீனத்தலைவர் கொழும்பில் தங்கியிருந்தபோது, இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் தேவையை வலியுறுத்தியிருந்தார். வேண்டுமானால் இப் பிரச்சினைக்குத் தம்மால் மத்தியஸ்தம் கூடச் செய்ய முடியுமென்று அவர் வெளிப்படையாகவே கூறியிருந்தார்.



மாபெரும் சர்வதேசப் பிரச்சினையாக விளங்கிவருவதே பாலஸ்தீனப் பிரச்சினையாகும்.

எனவே இப் பிரச்சினையின் 'நாயகனாகக்' கருதப்படும் யாசீர் அரபாத் இலங்கை இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளமை எவ்விதத்திலும் அசட்டை செய்துவிடமுடியாது.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் எதுவுமே தேவையில்லை என்று பிடிவாதமாகவே இலங்கை இருந்து வருகின்றது. இலங்கையின் இப்போக்கிற்கு சாட்டை கொடுப்பதாகவும், அதன் நிலைப்பாடு தவறு என்பதையும் சொல்லாமல் சொல்வதாகவுமே பாலஸ்தீனத் தலைவரின் மத்தியஸ்த்த விருப்பம் விளங்குகின்றது.

எந்தவொரு பிரச்சினைக்கும் மத்தியஸ்தம் என்பது இன்றியமையாதது. பாலஸ்தீன-இஸ்ரேலியப் பிரச்சினையில் கூட பல்வேறு நாடுகளும், அமைப்புகளும் ஆர்வங்காட்டின. இறுதியாக அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடனேயே அப்பிரச்சினை அணுகப்பட்டது.

இந்நிலையில் பாலஸ்தீனத் தலைவரது கவனத்தையும் ஈர்த்த நிலையில், இலங்கை இனப்பிரச்சினை ஒரு சர்வதேச தரத்துக்கு வெகுவாக உயர்ந்துள்ளதென்றே கூறமுடியும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக்காண எல்.ரி.ரி.ஈ.யினர் முன்வர வேண்டும் என்று பி.எல்.ஓ. தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

எனவே பாலஸ்தீனத் தலைவரது பாரபட்சமற்ற முறையிலான அரசியல் தீர்வு குறித்த வேண்டுகோள் இலங்கை ஆட்சியாளரதும், எல்.ரி.ரி.ஈ.யினரதும் கண்களைத் திறக்க வேண்டியதாகின்றது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்துள்ளது.

இந்த வெற்றியை சந்திரிகா அரசு யுத்தத்தை நீடிப்பதற்கோ அல்லது தனது சுயநலப் போக்குகளுக்கு வடிகாலமைக்கவோ பயன்படுத்தலாகாது.

அரசினதும், எதிர்க்கட்சியினதும் நிலைப்பாடுகள் எப்படியுமிருக்கலாம். ஆனால் நாட்டு மக்களில் அநேகர் அரசியல் தீர்வின் அவசியத்தை நன்குணர்ந்துள்ளார்கள். எனவே ஆட்சியாளரது அடுத்த கட்ட நடவடிக்கை அரசியல் தீர்வுபற்றிய விடயங்களை விரைவுபடுத்துவதாகவே அமைய வேண்டும்.

இது விடயத்தில் விரிவான பங்களிப்பே அவசியமானதாகின்றது. எல்.ரி.ரி.ஈ. உட்பட அனைத்து அரசியல் சக்திகளும் அரசியல் தீர்வு குறித்த அணுகுமுறைகளில் உள்ளடக்கப்படவேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்; அதனையடுத்து பாலஸ்தீன தலைவர் அரபாத்தினது கொழும்பு விஜயம்; அவர் கூறிச்சென்றவை அனைத்துமே காலமறிந்து நிகழ்ந்தவையாகவே உள்ளன.

இந் நிலையில் காலதாமதங்களுக்கு இடந்தராது உரியனவற்றை உரிய விதத்தில் செய்ய வேண்டியதே ஆட்சியாளரது கடமையாக இருக்கின்றது.

# பரந்தன் சமர்! புலிகள் வெளியிட்ட தகவல்

**ஜனவரி, 9–1997. ஆனையிறவு-பரந்தன் படைமுகாம்கள்மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அப்போது கிடைத்த தகவல்களை எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் நாரதர் விபரித்திருந்தார்.**

**அத்தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தற்போது உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளனர். 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் அத் தாக்குதல் தொடர்பாக தரப்பட்டுள்ள விபரங்கள் இங்கே:**

புவியியல் ரீதியாக யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் இருபுறங்களிலும்– குடாநாட்டு நிலப்பரப்பையும், வன்னி நிலப்பரப்பையும் உள்ளடக்கியதான அமைவிடத்தைக் கொண்டுள்ள ஆனையிறவுத் தளத்தின் வன்னி நிலப்பகுதிமீதும்–

அதன் தொடராக பரந்தன் சந்திவரை நீளும் பரந்தன் தளத்தின்மீதும் புலிகளின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் வலயத்துக்குள் விஜயபாகு றெஜிமெண்டின் 2 அல்லது 3 பட்டாலியன்களும், சிங்க றெஜிமெண்டின் ஒரு பட்டாலியனும் நிலைகொண்டிருந்தன. இவற்றில் விஜயபாகு றெஜிமெண்டின் ஒரு பட்டாலியனாலும், சிங்க றெஜிமெண்டின் ஒரு பட்டாலியனாலும் பாதுகாக்கப்பட்ட மிகப் பின்பகுதிக்குள் 'ஆட்டிலெறி றெஜிமெண்டின்' சுடுகலப் பிரிவுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனையிறவு சந்தையடி முகாமே 'ஆட்டிலெறி' சுடுதளமாகும்.

உயர்ந்த பெரும் மண் அணை அரணுக்கு உள்ளே 122 மில்லிமீட்டர் ஆட்டிலெறிகள் எட்டு ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன.

அவற்றுக்குப் பின்னால், வேறாக 130 மில்லிமீட்டர் ஆட்டிலெறிகள் இரண்டும், 122 மில்லிமீட்டர் ஆட்டிலெறி ஒன்றும் நிறுத்தப்பட்டிருந்தன.

அத்தோடு சுடுவதற்குத் தயார் செய்யப்பட்ட நிலையிலும், தயார் செய்வதற்கு ஆயத்தமான நிலையிலும் ஆயிரக்கணக்கான எறிகணைகள் சுடுதளத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

இதற்கு அடுத்திருந்த பாடசாலை முகாம்- ஆட்டிலெறி சுடுதளத்துக்கான முழுமையான விநியோகத்தைச் செய்யும் வெடிபொருட் களஞ்சியமாகும்.

அடுத்த பெரும் படையெடுப்புக்குத் தேவையான அளவுக்கு எறிகணைகள் அங்கு சேமிக்கப்பட்டிருந்தன. அவைபல பத்தாயிரக்கணக்கானவை என்று நம்பமுடிகின்றது.

மண் அணைகள், முட்கம்பிவேலிகள் எனத் தம்மைச் சுற்றி வழமையான பாதுகாப்பு அம்சங்களுடன் இருந்த இந்த சுடுதள களஞ்சிய முகாம்களுக்குப் பாதுகாப்பளித்து,-

பெரிய உப்பள சுற்றுலா விடுதி முகாம்களிலும், மேற்கே நீரேரி வழியாக வரக்கூடிய தாக்குதலை முறியடிக்க சின்ன உப்பள முகாமிலும், கிழக்கே நிலப்பகுதி ஊடாக வரக்கூடிய தாக்குதலை முறியடிக்க தட்டுவன்கொட்டி அம்மன் கோவிலடியில் இரு மினிமுகாம்களிலும், மேற்கில் ஒரு கிலோமீட்டருக்கு அப்பாலும், கிழக்கில் இரண்டு கிலோமீட்டருக்கு அப்பாலுமுள்ள முன்னணிவரிசைக் காப்பரண்களிலுமாக ஆயிரத்துக்கும் குறையாத துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக ஆழமான- பிரமாண்டமான- இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளை துவம்சம் செய்து நுழைந்த புலிகள் பீரங்கிச் சுடுதளத்தையும், வெடிபொருட் களஞ்சியத்தையும் கைப்பற்றி முழுமையாக நிர்மூலம் செய்தனர்.

இதற்கிடையே- கிளிநொச்சிப் பகுதி இராணுவ நிலைகளை நோக்கியும் 'TF-2' தலைமையகமான தடைமுகாம்மீதும், அங்கு கைப்பற்றிய ஆட்டிலெறிகளாலேயே தாக்கி-

தடைமுகாமிலிருந்த பிரதான வெடி பொருட் களஞ்சியத்தை வெடித்து எரியச் செய்து அழித்தனர்.

மறுபுறத்தே ஆனையிறவுத்தளப்பகுதி படையினருக்கு கிளிநொச்சியில் இருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காக-



உமையாள்புரம் இரசாயனத் தொழிற்சாலை, குமாரபுரம் முகாம்களையும், பிரதான வீதிக்கு மேற்கில் ஒரு கிலோமீட்டர் தூரத்திலும், கிழக்கில் இரண்டு கிலோமீட்டர் தூரத்திலுமுள்ள முன்னணி வரிசை காப்பரண்களையும் கொண்டதாக ஆயிரத்துக்கும் குறையாத துருப்புக்களுடனிருந்த பரந்தன் தளத்தையும் தாக்கிய புலிகள்-

பரந்தன் சந்திப்பகுதியில் ஒரு டாங்கியையும், ஒரு பவள் கவசவண்டியையும் தாக்கியழித்ததுடன், 10வது பிறிகேட் மையச் செயலக உமையாள்புரம் முகாமிலிருந்து 120 எம்.எம்.மோட்டர்கள் மூன்றை முழுமையாகவும், மேலும் இரண்டை சேதப்பட்ட நிலையிலும் கைப்பற்றினர்.

ஒட்டுமொத்தமாக இந்த நடவடிக்கையில் 150 புலிகள் பலியாகினர். படையினர்தரப்பில் 300 பேர்வரையானோர் பலியாகினார்கள். நூற்றுக்கணக்கான ஆயுதங்கள்ளயும், கணிசமான தொகை வெடி பொருட்களையும் புலிகள் கையகப் படுத்தினர்.

அழிக்கப்பட்ட ஆட்டிலெறிப் பீரங்கிகளும், வெடிபொருட்களும் மீட்கப்பட்டிருந்தால் (கைப்பற்றப்பட்டிருந்தால்) போராட்டத்தில் அற்புதங்கள் நிகழ்ந்திருக்கும்.

ஆனால் புவியியல் மற்றும் இராணுவக் காரணங்களால் அவற்றைக் கொண்டுவர முடியாமல் போகலாம் என்பது திட்டமிடலின்போதே உணரப்பட்டதால்தான் அழித்தொழிக்கும் வழிவகையும் செய்யப்பட்டது.

அத்தோடு ஆனையிறவிலிருந்து, அல்லது வேறெங்குமிருந்து ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்த படையெடுப்பைத் தடுப்பதற்காக படையினரின் சுடுசக்தியை இல்லாமல் செய்வதும் புலிகளின் அவசர இலக்கலாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி!

# பூலான் தேவி

38

தருவது
ரசிகன்

**கடந்த வாரம்**

**பூலான் முன்னர் சிறையில் இருந்தபோது அவளுக்காக பிணைப்பணம் கட்டியவர் பூல்சிங். கொள்ளைக் கோஷ்டியில் பூலான் இருப்பதை அறிந்து அவளை அழைத்துச் செல்ல அங்கே வருகிறார் பூல்சிங். அவருடன் செல்ல பூலான் விரும்பவில்லை.**

**இனி.....**

என் தலையில் தொட்டு ஆசிர்வதித்த பூல்சிங் தன்னுடன் புறப்பட்டு வருமாறு அழைத்தபோது, மெல்லத் தலையைத் திருப்பி மல்லாவைக் கவனித்தேன்.

அப்போதும் மல்லா சீட்டாட்டத்தில் தான் கவனமாக இருந்தான். தன் கையிலிருந்த சீட்டுக்களை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

எனக்கு அழுகையாக வந்தது. மல்லாவே தனது வாயால் என்னைப் போகச் சொல்லியிருந்தால்கூட நான் இப்படி மனம் வெதும்பியிருக்க மாட்டேன்.

அங்கு நடக்கும் சம்பவங்களுக்கும் தனக்கும் ஒரு தொடர்புமே இல்லாதமாதிரியும், நான் யாருடன் போனால் தனக்கென்ன என்பதுபோலவும் மல்லா வெகு அலட்சியமாக நடந்துகொள்வதைத்தான் என்னால் தாங்க முடியாமல் இருந்தது.



பூலான்

"என்ன யோசிக்கிறாய்? வா பூலான்!" என்று மறுபடி அழைத்தார் பூல்சிங்.

நான் முடிவு செய்துவிட்டேன்.

என்னைச் சுமையென்று நினைத்துத்தானே மல்லா கை கழுவிவிட நினைக்கிறான். இனியும் நான் இங்கிருந்தால் வெள்ளிக்காசுக்கும் மதிப்பிருக்காது.

பூல்சிங் எனக்கு அப்பா மாதிரித்தானே? போய்விடலாம். எனக்கு யார் இருக்கிறார்கள்? இந்த உலகத்தில் நான் ஒரு தனிப்பிறவி. தனி மனுஷி.. அதிஷ்டம் கெட்ட பிறவி... என்னை எனக்கே பிடிக்கவில்லை. என்மீது எனக்கே வெறுப்பாக இருந்தது.

"என்ன புறப்படலாமா?" என்றார். பதில் சொல்ல நா எழவில்லை. தொண்டைவரை வந்துவிட்ட விம்மலை வலுக்கட்டாயமாக அடக்கிவைத்திருந்தேன். எப்படி வாயைத் திறந்து பேசுவது? தலையை மட்டும் ஆட்டினேன்.

'உன் துணிமணிகள் இல்லையா?" என்று கேட்டார் பூல்சிங். அதற்கும் இல்லையென்று தலையாட்டினேன்.

"சரியம்மா புறப்படு" என்றுவிட்டு முன்னால் சென்றார். என்னால் கால் எடுத்து வைக்க முடியவில்லை. கால்களை யாரோ பிடித்துத் தரையோடு சேர்த்து ஆணியடித்துவிட்டதுபோல இருந்தது.

'சே.. இது என்ன வெட்கம் கெட்டதனமாக இருக்கிறது..! மல்லா என்னை ஒரு புழுவாக நினைத்து அலட்சியம் செய்யும்போது நான் ஏன்... இப்படி.. இப்படி.... தயங்க.. வேண்டும்?' என்று நினைத்தபடி என் கால்களை அசைத்து ஒரு அடிகூட எடுத்துவைத்திருக்க மாட்டேன், பின்னாலிருந்து இடிமுழக்கம் போல மல்லாவின் குரல் கேட்டது.

"நில், இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தால் சுட்டுவிடுவேன்!" என்றான்.

சீட்டாட்டத்தில் இருந்த மல்லா எப்போது எழுந்தான், எம் அருகே எப்போது வந்தான் என்றெல்லாம் தெரியவில்லை.

மல்லா சொன்னதுதான் தாமதம் நான் அசையாமல் அப்படியே நின்றுவிட்டேன்.

மல்லாவை நான் பார்க்கவில்லை. அவனை நேரடியாகப் பார்த்தால் எங்கே என்னையுமறியாமல் அழுதுவிடுவேனோ என்று பயந்தேன்.

"இது என்ன விளையாட்டு விக்கிரம் மல்லா? கன்ஷிராமுடன் பகைக்க நினைக்காதே!" என்றான் பூல்சிங்குடன் வந்திருந்த இருவரில் ஒருவன்.

"டேய் வாயை மூடு! கன்ஷிராம் என்ன கடவுளா? அவனும் கொள்ளைக்காரன். நானும் கொள்ளைக்காரன்." என்றான் மல்லா.

தர்க்கம் வளர்வதை விரும்பாதவராக இருவர் மத்தியிலும் குறுக்கிட்டார் பூல்சிங்.

"இங்கே பார் மல்லா, உன்னை மிரட்டவோ, வலுக்கட்டாயமாக பூலானை இங்கிருந்து அழைத்துச் செல்லவோ நான் இவர்களை அழைத்துவரவில்லை. பூலானையே கேள். அவள் எப்படி விரும்புகிறாளோ அப்படியே செய்து கொள்ளட்டும்!" என்றார் பூல்சிங்.

மல்லா என்னை உற்று நோக்கினான். என் மனதில் என்ன இருக்கிறது என்று என் முகத்தில் அறிய விரும்பினான் போலும்.

"பூலான் நீ எங்களுடன் வருகிறாயா? இங்கேயே இருக்கப்போகிறாயா? சொல்லிவிடு. நான் போய்விடுகிறேன்," என்றார் பூல்சிங்.

என் நிலை இருதலைக்கொள்ளி எறும்பாகிவிட்டது. எந்தக் கைமாறும் கருதாமல் என்னை சிறையிலிருந்து மீட்டவர் பூல்சிங். அதற்காக வாழ்நாள் முழுக்க நன்றிக் கடன் பட்டவள் நான்.

அவர் முகத்தைப் பார்த்து நான் எப்படி மறுப்புத் தெரிவிப்பேன்? 'ஐயோ துர்க்கையம்மா! இந்த இக்கட்டில் இருந்து என்னை எப்படியாவது விடுவித்துவிடு தாயே!' என்று மனதில் மன்றாடினேன்.

என் மனதில் எழுந்த எண்ணங்களையெல்லாம் எப்படித்தான் மல்லா ஊகித்துக் கொண்டானோ தெரியவில்லை. அவனே பூல்சிங்கிடம் என் சார்பாகப் பேசினான்.

"பூலான் உங்கள்மீது மதிப்பு வைத்திருக்கிறாள். என்னிடமே சொல்லியிருக்கிறாள். உங்கள் வார்த்தையை அவள் மீறுவதாகவோ, தட்டுவதாகவோ நினைக்காதீர்கள். இப்போது அவள் உங்களுடன் வரமுடியாத நிலையில் இருக்கிறாள். ஏனென்றால் இந்த விடயத்தில் அவள் தனியாக முடிவு செய்ய முடியாது." என்று நிதானமாகப் பேசினான் மல்லா.

'வேறு யார் முடிவு செய்ய வேண்டும்?" என்று கேட்டார் பூல்சிங்.

சட்டென்று மல்லா சொன்ன பதில் பூல்சிங்கை ஆடச் செய்துவிட்டது.

"நான் முடிவுசெய்ய வேண்டும்! ஏனென்றால் நான் அவள் கணவன்!" என்றான் மல்லா.

பூல்சிங் முகத்தைப் பார்க்கும் தைரியம் இல்லாமல் நான் தலைகுனிந்தபடியே நின்றேன். அங்கே சில நொடிகள் அமைதி நிலவியது. பூல்சிங் இதனை எதிர்பார்க்கவில்லை. அதுதான் மௌனமாகிவிட்டார்.

அங்கு நிலவிய அமைதி என்னை வதைத்தது. எப்போதுடா உள்ளே ஓடிப் போகலாம் என்று தவிப்பாக இருந்தது.

மல்லாதான் அந்த அமைதியைக் கலைத்தான்.

"இந்தாருங்கள் உங்கள் பணம், இதில் முப்பதாயிரம் ரூபாய் இருக்கிறது. நீங்கள் பூலானுக்காக கட்டிய பிணைப் பணம்!" என்றான் மல்லா.

எனக்கு நெஞ்சுக்குள் பால் வார்த்தது போல இருந்தது. மல்லாவை நினைக்க நினைக்க பிரமிப்பாக இருந்தது.

சே.. என் மல்லாவைப் போய் எத்தனை பிழையாக நினைத்துவிட்டேன். எப்படியெல்லாம் மனதுக்குள் வசைபாடினேன். கவலையாக இருந்தது.

"எனது பணம் இருபத்தைந்தாயிரம் ரூபாய்தான்," என்றார் பூல்சிங். மல்லா மீதிப் பணத்தை வாங்க மறுத்துவிட்டான்.

பூல்சிங் புறப்பட முன்னர் என் அருகே வந்தார். நான் நிமிர்ந்து பார்க்கவில்லை. காலடியைவைத்து வைத்து என் அருகே அவர் வந்து நின்றதைப் புரிந்து கொண்டேன்.

என் தலையை ஆதரவாகத் தொட்டு மென்மையான குரலில், "அம்மா பூலான். நீ என் மகள்மாதிரி! நல்லாயிரு அம்மா! உனக்கு அந்த துர்க்கையம்மா ஒரு குறையும் வைக்கமாட்டாள்! எப்போதாவது முடிந்தால் இந்தக் கிழவனை வந்து பாரம்மா. நான் வாரேன் அம்மா! நல்லாயிரு! நல்லாயிரு!" அவர் குரல் நடுங்கியது.

அதற்குமேலும் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்மேல் அப்படியே சரிந்து அழுதேன். காலில் விழுந்து வணங்கினேன். என் கண்ணீர் அவர் கால்களில் பட்டது. என் நன்றிக்காக என் கண்ணீரால் அவர் கால்களை கழுவிவிட்டேன் என்று திருப்தி ஏற்பட்டது.

பூல்சிங் விடைபெற்றுச் சென்றுவிட்டார். மறுபடியும் அவரைச் சந்திக்க முடியாமல் போகலாம் என்ற நினைப்பினால் அழுகை அழுகையாக வந்தது.

மிருகங்கள் மத்தியில் நான் கண்ட மனித தெய்வம் அவர்.

அதோ.. அதோ.. அந்த மனித தெய்வம் போகிறது, போய்க்கொண்டே இருக்கிறது. என் பார்வையில் இருந்து மறையும் வரை கண்களில் திரையிட்ட நீருடன் நின்று பார்த்துக் கொண்டே இருந்தேன்.

இரவுவரை யாருடனும் எதுவும் பேசவில்லை. மல்லாவும் என்னிடம் பேசவரவில்லை. இரவாகி வெகு நேரத்தின் பின்தான் மல்லா உள்ளே வந்தான். வந்ததும் "ஏன் சாப்பிடவில்லை?" என்றுதான் கேட்டான்.

"பசிக்கவில்லை!" என்றேன்.

"சாப்பாடுமீது கோபத்தைக் காட்டாதே! என்மீது கோபம் என்றால் திட்டிவிடு! சாப்பிட்டுவிட்டுதிட்டு. யாரை வேண்டுமானாலும் வருத்தலாம், வயிற்றை மட்டும் வருத்தக் கூடாது!" என்றான்.

நான் பேசாமல் இருந்தேன். அவனே என் சாப்பாட்டுத் தட்டை எடுத்துக் கொண்டு என் முன்பாக அமர்ந்தான்.

"எனக்குப் பேய்ப் ப்சி. வயிறு பயங்கரமாக கோபிக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே சப்பாத்தியைப் பிய்த்து கறியில் தொட்டு என் வாயருகே நீட்டினான்.

அவன் செய்ததைப் பார்க்க எனக்குச் சிரிப்பாக இருந்தது. "உங்களுக்குத்தானே பசி? எனக்கில்லை!" என்றேன் அலட்சியமாக.

மறுகையால் என் காதைப் பிடித்துத் திருகினான். "சாப்பிடடி கழுதை!" என்றான்.

நான் வாயைத் திறந்தேன். குழந்தைக்கு ஊட்டிவிடுவது போல சப்பாத்தியை எனக்கு ஊட்டிவிட்டபடி தானும் சாப்பிட்டான்.

கைகழுவிக்கொண்டு வந்தபோது பின் பக்கம் இருந்து என்னைக் கட்டியணைத்துக் கொண்டான்.

நான் திமிறிக்கொண்டு மல்லாவின் பிடியில் இருந்து விடுபட்டேன்.

மல்லாவின் சட்டைக் கொலரை என் கையால் பற்றி என்னை நோக்கி இழுத்தேன்.

மல்லாவின் கன்னம் இரண்டிலும் வெறி பிடித்தவள்போல மாறி மாறி அறைந்தேன்.

மல்லா தடுக்கவில்லை; மல்லா கோபப்படவில்லை; மல்லா வருத்தப்படவுமில்லை.

அப்படியே சிலைபோல நின்றான்.

என் கண்களையே பார்த்தபடி நின்றான்.

"ஏன் ஏமாற்றினாய்? என்னை ஏன் ஏமாற்றினாய்?" என்று கத்தினேன்.

"சும்மா ஒரு நாடகம்!" என்றான். கண்களால் சிரித்தான்.

"பாவி! மகாபாவி.! நான் எப்படி பயந்துபோனேன் தெரியுமா? எப்படி கலங்கிப்.. பா.வி..பாவி!" என்று அவன் கழுத்தை என் இருகைகளாலும் நெரித்தேன்.

மல்லா இப்போதும் கண்களால் சிரித்தான். கண்களால் மயக்கினான்.

"பாவி.. படுபாவி!" என்று சொல்லிக் கொண்டே அவன் கழுத்தில் இருந்து கைகளை எடுத்தேன்.

மல்லா என் இரு தோள்களையும் பற்றிக் கொண்டு என்னை சுவரோடு தள்ளிச் சாத்தினான். என் உதடுகளை தன் உதடுகளால் பற்றினான்.

உதடுகள், கன்னம், கழுத்து என்று ஆவேசம் தீராதவனாய் முத்தமிட்ட மல்லா முத்தமிட்டபடியே முனகினான்:

"நீ சாதாரண பெண் அல்ல. நீ அவதாரம். நீதான் புத்லிபாய்! நீதான், நீயேதான் புத்லிபாய்" என்று முனகிக்கொண்டே என் நெஞ்சில் முகத்தால் உரசினான்.

"யார் அது புத்தலி பாய்?" என்று அறியும் ஆவலில் மல்லாவின் தலை முடியில் பிடித்துத் தூக்கினேன்.

மல்லா, புத்லி பாயின் கதை சொன்னான். அவன் சொல்லச் சொல்ல எனக்குப் பிரமிப்பாக இருந்தது. எனக்குள் புதிய சக்தி புகுந்துவிட்டதுபோல இருந்தது

-இனி நான்-

பாதி பூலான்-மீதி புத்லி பாய்!

***பூலான் தேவி கதையின் முதல்பாகம் முற்றுகிறது. மறுவாரம் முதல் பூலானின் சாகசங்களுடன் இரண்டாம் பாகம் வரும் வாரம் தொடங்குகிறது!***

**(தொடர்ந்து வரும்)**

## "கண்டனம் ஒரு பாசாங்கு!"



கமல் சித்து

"இந்திய சினிமாக்கள் ஆங்கிலப் படங்களைத் தூக்கிச் சாப்பிடுமளவுக்கு வந்துவிட்டன. குறிப்பாக ஹிந்திப் படங்களில் முத்தக் காட்சிகள் தாராளமாகிவிட்டன. முத்தக்காட்சிகளை தடைசெய்ய வேண்டும்," என்று கண்டனக்குரல்கள் எழுந்துள்ளன.

"முதலில் சில நொடிகள் மட்டுமே கதாநாயகனும், கதாநாயகியும் முத்தமிட்டுக் கொண்டனர். இப்போது நிமிஷக் கணக்காக உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிடும் காட்சிகள் இடம் பெறத் தொடங்கிவிட்டன. இப்படியே போனால் இதன் எல்லை எது? இப்போதே தடை வேண்டும்!" என்று இந்தியாவிலுள்ள ஒரு சமூக சேவையாளர் தணிக்கைக் குழுவுக்கு மனுக் கொடுத்திருக்கிறார்.

"இதெல்லாம் சுத்த பாசாங்குத்தனம். செக்ஸ் மற்றும் காதலுக்கு எதிராக உபதேசம் செய்பவர்கள் எல்லாம் மனதளவில் வக்கிரம் கொண்டவர்கள். அந்த வக்கிரத்தை மறைக்க இப்படியெல்லாம் வெளிக்கு நாடகமாடுகிறார்கள். முத்தக் காட்சிகள் தொடர்பாக இப்படிக் கூக்குரலிடுவதுதான் அதனை ஒரு விவகாரமாக மாற்றுகிறது. ஏதோ கெட்ட காரியம் போல நினைக்க வைக்கிறது. முத்தக் காட்சிகளைக் கண்டு யாருமே இப்போது முகம் சுளிப்பதில்லை. பாசாங்கு செய்பவர்கள் மட்டுமே பதறுவதுபோல நடிக்கிறார்கள்!" என்று சொல்கிறார் ஒரு மனநல மருத்துவ ஆய்வாளர்.

இதற்கிடையே, முத்தக் காட்சிகளில் நடிக்கும் நடிகைகளையும் ஒரு விதமாகப் பேசுகிறார்கள். கண்டனத்திற்கும் கேலிக்கும் உள்ளாக்குகிறார்கள். "நாம் அப்படி என்ன செய்துவிட்டோம்" என்று குமுறுகிறார் நடிகை கமல் சித்து. இவர் தொலைக்காட்சி மூலம் பிரபலமானவர்.

ஜாக்கி ஷெராப்பும், கமல் சித்துவும் ஒரு ஹிந்திப் படத்தில் ஜோடியாக நடிக்கின்றனர் இருவரும் முத்தம் கொடுக்கும் காட்சியும் இடம் பெறுகிறது.

அதுபற்றியும் கமல் சித்து சொல்கிறார்:

"சினிமாவில் பாடல்காட்சிகளில் கதாநாயகிகள் காட்டுகின்ற அங்க அசைவுகளைவிட முத்தக் காட்சிகள் ஒன்றும் மோசமில்லை. படத்தில் ஜாக்கி தந்த முத்தத்தில் சூடு கிடையாது. இருவரது உதடுகளும் லேசாகத் தொட்டுக் கொண்டன. அவ்வளவுதான்...!" என்கிறார்.

"பொதுவாகவே விளம்பரம் கிடைக்கக் கூடிய சில விஷயங்களில் சர்ச்சைகளைக் கிளப்பி ஆதாயம் பெறுவோர் இருக்கிறார்கள். அப்படியான சிலர் தவிர வேறு யாருமே முத்தக் காட்சிகள் பற்றி அலட்டிக்கொள்வதில்லை" என்கிறார்கள் சினிமா உலக ஜாம்பவான்கள்.

## புரூனே சுல்தான் மீது வழக்கு




புரூனே சுல்தானிடம் பணம் இருக்கிறது. பணத்தை எங்கே கொட்டலாம் என்று தெரியாமல் தவிக்குமளவுக்கு மலைபோல் உயர்ந்த பணம்.

புரூனே சுல்தான் பணத்துக்கு அடுத்ததாக திரட்ட ஆசைப்படுவது அழகான பெண்களை.

உலக அழகிகள், பிரபல நடிகைகள் போன்றோருக்கு தன் நெஞ்சத்திலும், விலை உயர்ந்த மஞ்சத்திலும் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்கு இடம் தருவார் சுல்தான்.

தற்போது சுல்தான்மீது வழக்குப் போட்டுள்ளார் ஓர் அழகி. மிஸ் அமெரிக்காவாகத் தெரிவுசெய்யப்பட்ட ஷானன் மார்க்கெட்டிக் என்னும் பெண்தான் சுல்தான்மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்.

புரூனே சுல்தானின் அரண்மனையில் வேலை செய்ய சென்றாராம் அழகி. பொது ஜன தொடர்பு உறவு அதிகாரி வேலையாம். ஆனால் புரூனே சுல்தான் தன்னை வேறு உறவு தொடர்புக்குப் பயன்படுத்திக் கொண்டாராம்.

சுல்தானின் அரண்மனையில் கிட்டத்தட்ட ஆயிரத்தி இருநூறு அறைகள் இருக்கிறதாம். அந்த ஆடம்பர அறைகளில் ஒன்றில் அந்தப்புர நாயகியாக வைக்கப் பட்டாராம் அமெரிக்க அழகி. எல்லாம் முடிந்த பின்னர் 21 ஆயிரம் டொலர்தான் தந்தாராம். அதுதான் கோபம் வந்து விட்டது அழகிக்கு. உடனே வழக்குப் போட்டிருக்கிறார்.

புரூனே சுல்தானைப் பற்றி உலகுக்கே தெரியும் என்பதால் அழகியின் புகார் யாருக்கும் ஆச்சரியமாக அமையவில்லை. "கொஞ்சம் கூட்டித்தாருங்கள்!" என்று சுல்தானிடமே கேட்டிருக்கலாம், என்றுதான் புத்திமதி சொல்கிறார்களாம்.

## ஜொள்ளுத் தாத்தா

இந்தியாவைச் சேர்ந்த ஓவியர் எம்.எஃப் ஹுசைன் ரொம்ப வயதான ஆசாமி. ஆனால் விவகாரமான ஆள்.

இந்தி நடிகை மாதுரி டிக்ஷித்தின் தீவிர இரசிகராக இருந்த ஹுசைன் தாத்தா மாதுரியைப் படமாக வரைந்து தள்ளினார். மாதுரி டிக்ஷித்தின் நடன அசைவுகளில் நயம் கண்டதாகச் சொன்னார் தாத்தா. மாதுரியை நேரில் சந்தித்து தன் அபிப்பிராயங்களை அடுக்கினார். அதைக்கேட்டு மாதுரியே நெளிந்தார் என்றால் பாருங்களேன்.

பின்னர் சரஸ்வதியை நிர்வாண ஓவியமாக வரைந்து இந்தியா எங்கும் பெரும் சர்ச்சையையே கிளப்பினார் மனுசன்.

இப்போது என்ன செய்கிறார் தெரியுமா? அமெரிக்காவுக்குப் போன இடத்தில் மடோனா நடித்த 'எவிடா' படம் பார்த்தாராம் தாத்தா. படம் முழுக்க கவர்ச்சி காட்டி அசத்தியிருக்கிறார் மடோனா. அப்படியே உருகிப் போனாராம் தாத்தா.

மடோனாவின் உடல் மகா அற்புதம். மாபெரும் பொக்கிஷம், என்று பாராட்டியதோடு நிற்காமல் படம் படமாக மடோனாவை வரைந்து தள்ளியிருக்கிறார் இந்த ஜொள்ளுத் தாத்தா. மடோனாவை




நேரில் சந்தித்து பாராட்டவும் போகிறாராம். மடோனா தனது பரிசாக என்ன கொடுக்கப் போகிறாரோ?

## 81 வருஷமாச்சு

விவாகரத்துக்கு பேர்போன நாடு அமெரிக்கா. குறைந்த பட்சம் ஒருவருடகாலம் தம்பதிகள் சேர்ந்து வாழ்வதே அங்கு ஆச்சரியமாக மாறிவருகிறது.

அப்படியாகப்பட்ட அமெரிக்காவில் 81 வருடம் ஒன்றாக வாழ்ந்து சாதனை படைத்திருக்கிறார்கள் ஜியார்ஜ் கூரான்-சேய்னெல் தம்பதி.

அமெரிக்காவிலேயே மிக நீண்டகாலம் இணைந்து வாழ்ந்த தம்பதியினர் இவர்கள் தான். ஜியாஜ் கூரானுக்கு இப்போது நூறு



வயது. இந்தத் தம்பதிக்கு 14 பிள்ளைகள்: 43 பேரக் குழந்தைகள்: 75 கொள்ளுப் பேரக் குழந்தைகள்: 30 எள்ளுப் பேரக் குழந்தைகள் என்று பட்டியல் வெளியிட்டுள்ளது ஒரு சமூக சேவை நிறுவனம். இந்தத் தம்பதியின் 81வது திருமண நாளை தன் சொந்தச் செலவில் கொண்டாடப் போகிறது அந்த நிறுவனம். அடுத்தமாதம் விழா நடக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## நான் பாதி—நீ பாதி



← இரட்டையர்களாகப் பிறப்பவர்களில் ஒட்டிப் பிறப்பவர்கள் சயாமி இரட்டையர் என்று அழைக்கப்படுவர்.

சத்திரசிகிச்சை மூலம் சயாமி இரட்டையர்களை பிரிக்க முடியாமல் போய்விடுவதும் உண்டு. அவ்வாறு பிரிக்கப்பட முடியாமல் ஒட்டியபடியே வாழ்பவர்கள் அபூர்வம். அநேகமானோர் குறைந்த ஆயுளுடன் இறந்துபோய்விடுவர்.

படத்தில் இருக்கிறார்கள் பாருங்கள், இவர்களும் சயாமி இரட்டையர்கள்தான்.

இடுப்புக்கு மேலே இரண்டு உடல்கள். இருவருக்கும் சேர்த்து இரண்டு கால்கள், மூன்றுகைகள். ஒரு சிறுமியின் பெயர் ஜமிடா. தொங்கும் சிறுமியின் பெயர் ஜனிடா. பிரேசில் நாட்டில் உள்ள மோரே என்னும் கிராமத்தில்தான் இவர்கள் பிறந்தனர். இன்னும் சில காலம்தான் உயிரோடு இருப்பார்கள். என்று டாக்டர்கள் கூறியிருக்கிறார்களாம். அந்த சோகம் தெரியாமல் ஒட்டியபடியே சந்தோசமாக இருக்கிறார்கள் இரண்டையர்கள்!

## அதிசயப் பிறவி

→ என்ன இது, என்ன இது, பொம்மையாக இருக்குமோ இதுவும்? என்றா நினைக்கிறீர்கள். இது ஒரு அதிசயப் பறவை.

பாதி ஆப்பிள் போன்ற முகம், கோலிக் குண்டுகள் போன்ற கண்கள், நாலு அடி இறக்கைகள் சகிதம் காணப்படும். அதிசயப் பறவை இது. தமிழ்நாட்டில் வல்லம் என்னும் கிராமம் இருக்கிறது. அங்கு டிரக்டர் சாரதியான சண்முகம் என்பவரது வீட்டில்தான் இந்த அதிசயப் பறவை வளர்கிறது.

இந்தப் பறவை எந்த இனத்தைச் சேர்ந்தது என்பது வனவியல் துறையினருக்கே தெரியவில்லையாம். ஆயினும் ஆபத்தில்லாத பறவை என்பதால் வீட்டில் வளர்க்க அனுமதித்தார்களாம். தமிழக பத்திரிகைகளிலும் இப் பறவையின் படம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.



## தகவல் பெட்டி

## சுடுவதற்கு ஆசை

↓ துப்பாக்கிகள் என்றால் சிறுவர்களுக்கு ஒரு பிரியம்தான். அமெரிக்காவில் 15 வயதுக்கு முன்னரே சிறுவர்களும், சிறுமிகளும் துப்பாக்கியைப் பாவிப்பதில் சூரர்கள் மற்றும் சூரிகள் ஆகிவிடுகிறார்கள்.



தற்பாதுகாப்புக்கு நல்லதுதானே என்பதால் முதலில் கண்டுகொள்ளாமல் இருந்தது அரசாங்கம். வீதிகளிலும், பாடசாலைகளிலும் கைகளால் அடிபடாமல் துப்பாக்கிகளால் மாணவர்கள் சுடுபட்டுக் கொள்ள ஆரம்பித்தனர். வன்முறைகள் பெருகத் தொடங்கின. இப்போது அமெரிக்க அரசு விழித்துக் கொண்டுவிட்டது.

லைசன்ஸ் இல்லாத துப்பாக்கிகளைத் தேடி வேட்டை நடக்கிறது (அட.... அங்கேயுமா?!) அந்தத் துப்பாக்கிகளை கைப்பற்றி நெருப்பு உலைகளில் போட்டு அழிக்கிறார்கள். (இங்கே அழிக்கத் தேவையில்லை. வடக்கு-கிழக்கு சண்டையில் பாவிக்கலாம்) துப்பாக்கிக் கலாசாரம் அமெரிக்காவையும் ஆட்டிப் படைக்கிறது.

↓ படத்தில் படகுச்சவாரி செய்பவர்கள் இருவரும் ரப்பர் படகு செலுத்துவதில் திறமையானவர்கள். இந்தோனேசிய நாட்டைச் சேர்ந்தவர்கள். படகு ஓட்டும் போட்டிகளின்போது இருவருக்கும் இடையே காதல் மலர்ந்து கல்யாணத்தில் முடிந்துள்ளது.

படகில் மலர்ந்த காதல் அல்லவா. அதனால் திருமணத்தையும் படகிலேயே நடத்தினார்கள். தேனிலவும் படகிலேயேதானாம். திருமணம் முடிந்து படகில் ஒரு ரவுண்ட் வரும் காட்சிதான் இது.

படகு படகு ஆசைப்படகு!

சேர நாட்டின் இளம் பெண்களுடன் தோணிகள் ஒட்டி விளையாடக் கனவு கண்டவர் பாரதியார். கனவு பலிக்காமல் போனது பாரதியாரின் துரதிஷ்டம்.

## கல்யாணப் படகு



## ஆடு விளையாடு

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான நம்பிக்கைகள். அந்த நம்பிக்கைகள் மூடத்தனமாகத் தெரிந்தாலும் மக்களை மகிழ்ச்சிப்படுத்த உதவுகின்றன. ஒன்று சேர்ந்து குதூகலிக்கவைக்கின்றன. இதோ ஒரு விநோதமான விழாச் செய்தி.

ஸ்பெயின் நாட்டில் மல்கானோ சிங் புலா போல்வோரோசா (யப்பா என்ன நீளம்) என்னும் கிராமம் இருக்கிறது. அங்கே ஆண்டுதோறும் 'ஆடு குதிப்பு' விழா நடைபெறும்.

அங்குள்ள தேவாலயத்தின் ஜன்னல் வழியாக ஆடு ஒன்றை கீழே தள்ளிவிடுவார் ஒருவர். மணி கட்டப்பட்ட அந்த ஆடு கீழே விழுந்து விடாமல் அங்கு திரண்டுள்ள மக்கள் தங்கள் கைகளில் ஏந்திக் கொள்வார்கள். ஆட்டை தொட்டுத் தடவ மக்கள் இடிபடுவார்கள். ஏன் தெரியுமா, ஆட்டைத் தொட்டால் அதிஷ்ட தேவதையைத் தொட்டமாதிரியாம். எல்லாம் ஒரு நம்பிக்கைதான். நம்பிக்கையில் தானே வாழ்க்கையே இயங்குகிறது.







## மரம் சாந்து போனால்

↑ மரம் சாய்ந்து போனால் அழகான வீடாகலாம் என்று நிருபித்திருக்கிறார்கள். படத்தில் வரிசையாகக் காணப்படும் மூன்று வீடுகளும் முழுக்க முழுக்க மரத்தாலும், மரக் கிளைகளாலும் உருவாக்கப் பட்டவை.

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்பதை தப்பாக புரிந்துகொண்டு வளர்த்த மரங்களை வீட்டுக்காக பயன்படுத்திவிட்டார்களோ என்று நினைக்காதீர்கள். இது ஒரு காட்டுப்புறப் பகுதி. காட்டு மரங்களில் ஆயுள்முடிந்து சாய்ந்த மரங்களைத் தான் இப்படி வீடாக்கி இருக்கிறார்கள். வீடு குளிர்ச்சியாகவும், காற்றோட்டமாகவும் இருக்கிறதாம். சுவிற்ஸர்லாந்தில்தான் இந்த மரவீடுகள் உள்ளன.

நம்நாட்டிலும் மரவீடுகள் இருக்கிறதோ, இல்லையோ யாழ்ப்பாணத்தில் வீட்டுக் கூரை மரங்கள் காவலரண்களாக மாறியுள்ளன. அழகான கதவுகள், கூரை மரங்கள் மூலம் செய்யப்பட்ட வீதிக் காவலரண்கள் யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் இருக்க முடியும். அதுவும் ஒரு சாதனைதானே!


படிப்பகம்

www.padippakam.com

# பிரபல நடிகர்கள் 'ப்ளே பாய்கள்' முன்னாள் காதல் மன்னன் சொல்கிறார்

அந்தக்கால காதல் மன்னன் ஜெமினி கணேசன். இப்போது 77 வயசு. இன்னமும் படங்களில் நடிக்கிறார். உடம்பைக் கவனமாக வைத்திருக்கிறார்.

பல நடிகைகளுடன் இணைத்துப் பேசப்பட்டவர் ஜெமினி. நடிகை சாவித்திரியையும் ஜெமினி மணந்துகொண்டவர். பின்னர் உறவு முறிந்தது. தனது பழைய அந்தரங்கங்களில் சிலவற்றை மறைக்காமல் பளிச்சென்று சொல்கிறார் ஜெமினி. விகடனுக்கு ஜெமினி கொடுத்த பேட்டியில் இருந்து சில சுவாரசியமான பகுதிகள்.

## திறந்த புத்தகம்

"ஏனைய நடிகர்களின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி நான் சொல்ல மாட்டேன். என் கேஸ் எப்படின்னா, நான் பெரிய அசடு. என் வாழ்க்கையைத் திறந்த புத்தகம் மாதிரி வைச்சிருக்கேன்.

மத்த பெரிய நடிகர்கள் எல்லாம்- நான் பேர் சொல்ல விரும்பவில்லை- தங்களுடைய அந்தரங்க விஷயங்களை ரகசியமாக வைச்சிருந்தாங்க. அதனால் அவங்க எல்லாம் யோக்கியம்னு ஜனங்க முடிவு செய்துட்டாங்க.

அது மட்டுமில்லை, சமீபத்தில் யாரோ ஒரு நடிகர் சொல்லியிருக்காராம், "நாங்க அடிக்கடி வெளியூர் போகவேண்டியிருக்கு. அதனால் பதினைஞ்சு நாள் ஒரு மாதம் என்று குடும்பத்தை பிரிந்திருக்க வேண்டி இருக்கிறது. அப்போது கூட நடிக்கிற நடிகைகளின் சகவாசம் தேவைப்படுது, எங்களுக்கு ஒரு அவுட்-லெட் வேண்டாமா? என்று கிசுகிசு மாதிரி அதைப் போட்டிருந்தார்கள்.

என்னுடைய அட்வைஸ் ஒரு நடிகன் தப்புச் செய்யலாம். அது தப்பேயில்லை. இரண்டு என்ன, நிறையப் பெண்களுடன் சகவாசமே வைச்சுக்கலாம். அதையும்கூட தப்புச் சொல்ல மாட்டேன். ஆனால் எந்தப் பிரச்சனை வந்தாலும் தன்னோட மனைவியையும் குழந்தைகளையும் விட்டு போகக்கூடாது.

## "ப்ளே பாய்"

நான் பல பெண்கள் பின்னால் போனேன் என்று சொல்வது தப்பு. உண்மையில் நான் பெண்களால் இழுத்துச் செல்லப்பட்டேன். நானாகப் பிரியப்பட்டுப் போகவில்லை. என் மனைவிக்கு செக்ஸில் பெரியளவு நாட்டமில்லை. எனக்கு செக்ஸில் ஈடுபாடு. அதனாலே சில பெண்கள் எனக்கு வலை விரிக்கும்போது நான் மாட்டிக் கொண்டேன்.

அப்போதைய பிரபல நடிகர்கள் பலபேர் இதுமாதிரி 'ப்ளே பாய்'களாகத்தான் இருந்தாங்க. நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. ஆனா அந்தப் பழியும் பாவமும் எனக்கு மட்டும் நிலைச்சுப் போச்சு.

## ரேகா என் செல்லம்

என் மகள்களில் ரொம்பச் செல்லம் ரேகாதான் (இந்தி நடிகை) காமசூத்ரா படத்தில அவ நடிச்சதிலே எனக்குக் கொஞ்சம் கோபம் உண்டு.

இன்னிக்கு அவளுக்கு 42 வயசு என்று சொன்னா யாரும் நம்பறது கஷ்டம். அவ கெட்டிக்காரி. காமசூத்ராவிலேகூட இயக்குநர் சொன்னபடிதான் நடிச்சிருப்பா.

என்ன எழவோ தெரியேல்லை அது பத்திக் கன்னா பின்னான்னு காதிலே விழுந்தது..." என்று 77 வயதிலும் இளமையாகப் பேட்டி கொடுத்துள்ளார் முன்னாள் காதல் மன்னன்.

# "போனில் என்னைப் பெண்கள்...." அப்பாஸின் நீண்ட புலம்பல்

தமிழக பிரபல சஞ்சிகை ஒன்று அப்பாஸின் புலம்பலை பெரிதாக வெளியிட்டிருக்கிறது. புலம்பலை நீங்களும் கேளுங்கள்.

"நான் தமிழ்நாட்டுப் பெண்களை என் தங்கச்சிகளாகவே நினைக்கிறேன். ஆனால்... (என்ன ஆனால்?)

பதினாறில் இருந்து இருபத்தைந்து வயதுள்ள பெண்களில் சிலர் என்னைப் பார்த்து ஜொள் விடுவதும், போனில் தகாத காரியத்துக்கு அழைப்பதும்...ச்சே.. பேசாமல் இந்த ஃபீல்டைவிட்டே போய்விடுவோமா என்று தோன்றுகிறது.

நான் இறைவனிடம் வேண்டிக்கொள்வதெல்லாம் எந்தப் பெண்ணிடமும் தவறாக நடந்து கொள்ளாத பலவீனமற்ற மனசைக் கொடு என்பதுதான். சில சமயம் நான் அதில் தோற்றுப்போய்விடுவேனோ என்று பயமாக இருக்கிறது." இதுதான் அப்பாஸின் புலம்பல். (அப்பாஸின் ரசிகைகள் கவனத்திற்கு)

# காதல் படிக்கட்டுக்கள்

கரண்-அஸ்வினி இருவரும் ராமன் அப்துல்லா படத்தில் ஜோடியாக நடிப்பவர்கள். ஆனால் விசேஷம் யாதெனில் இருவரும் காதல் படிக்கட்டில் கால் வைத்திருக்கிறார்கள்.

இங்கே பிரசுரமாகியுள்ள படத்தில் கரணின் இதயத்துடிப்பை காதுவைத்து கேட்கிறார் அஸ்வினி. இது படக்காட்சி. உண்மையாகவே கரணின் இதயம் லபக் லபக் என்று துடிக்காமல், அஸ்வினி, அஸ்வினி என்றுதான் துடிக்கிறதாம். படப்பிடிப்பு இல்லாத நேரங்களிலும் ஒருவர்மீது ஒருவர் சாய்ந்துதான் பொழுதைக் கழிக்கிறார்களாம்.

கரண் நல்ல நடிகர். இப்போதுதான் அவரது மார்க்கெட் வண்டி சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது. இதற்கிடையே இன்னொரு வண்டியையும் பூட்டிக்கொண்டு அவதிப்படுவானேன் என்று கேட்கிறார்கள். காதலுக்கு காது உண்டா? அந்த அபிப்பிராயம் எதனையும் கரண் கவனித்ததாகவே தெரியவில்லை. அஸ்வினி போட்ட மந்திரத்தில் கரண் கவிழ்ந்தாரா? அல்லது கரண் போட்ட தூண்டிலில் அஸ்வினி ருசிகரமாக மாட்டிக் கொண்டாரா?

## ரம்பா ரெடியா?

'காமசூத்ரா'என்னும் குடும்பக் கட்டுப்பாட்டு தொடர்பான சாதன விளம்பரத்தில் இந்தி நடிகைகள் சிலர் போஸ் கொடுத்துள்ளனர். தற்போது ரம்பாவையும் கேட்டுள்ளனராம்.

முதலில் முடியவே முடியாது என்று மறுத்தாராம் ரம்பா. பின்னர் சற்று ஊசலாடுகிறாராம். காரணம் வேறொன்றுமில்லை. போஸ் கொடுத்தால் பல லகரங்கள் மழையாகக் கொட்டுமாம்.

## ரஜினி மறுப்பு

ஜெயலலிதாவின் சம்பந்தி என்பதால் சிவாஜி வீட்டாரையும் வறுத்தெடுக்கிறார்கள் வருமானவரித் துறையினர். அடிமேல் அடியாக மற்றொரு சமாச்சாரம். சிவாஜி பிலிம்ஸ் நிறுவனத்துக்கு ஒரு படம் பண்ணித்தர வேண்டும் என்று ரஜினியிடம் கேட்டிருந்தார்களாம். 'ஆம்' என்றும் சொல்லாமல், 'இல்லை' யென்றும் சொல்லாமல் நழுவிக் கொண்டிருந்தாராம் ரஜினி. சமீபத்தில் சிவாஜியின் மகன் ராம்குமாரை அழைத்து, "தற்போது நடிப்பதாக இல்லை" என்றுவிட்டாராம் ரஜினி.





"இதழ் மேல்-இதழ் பாடல்; மடி மேல்-விளையாடல்; இடையில்-சிறு ஊடல்; இதை சொல்லத்தானிந்த ஜாடைகள்...."

# சினிவிசிட்

ஒத்திகை என்ற பெ... செய்யும் இயக்குநர்கள் பற்றி சி...

பிரபலமான நடிகைகளை சி... செய்ய புதிய இயக்குநர்களால்... காட்சி ஒத்திகைகளில் வரம்பு ...

இது ஒருபுறமிருக்க, கமரா... ஜோடிகள் நடிக்கும் பாடல் காட்... பாடல் காட்சிகளை தமது கா... மாற்றி விடுகிறார்களாம். இந்தப் பட்... நடிகைகள் என்று சிலரது பெயர்கள் அடிபடுகிறது... பிரகதி என்று பட்டியல் நீள்கிறது. பிரகதியை மறந்திருந்தால் ... பாவம் ஒரு படம்தான் கைவசம் உண்டாம். உடல் பெருத்துவிட்டதால் ச...

## சந்திரன் ஜொள்

'ஒன்ஸ்மோர்' படப்பிடிப்பில் நடிகர் எஸ்.எஸ்.சந்திரன் சரோஜாதேவியைக் கண்டதும் வழிந்தாராம். "ஸ்வீட் சிக்ஸ்டீன் மாதிரி இருக்கீங்களேம்மா, இப்போதும் நான் உங்களைக் காதலிக்கிறேன்" என்று ஜொள் விட்டாராம். முகத்தைச் சுளித்தாராம் சரோஜாதேவி.

## "ராதா மாதிரியா இருக்கேன்?"

'மாப்பிள்ளைக் கவுண்ட... சுவாதிக்கு ரசிகர்கள் மத்தியில் ... அதிகமான கடிதங்களில் சுவாதி நடிகை ராதா மாதிரி இருப்பதாக குறிப்பிட்டுள்ளா... களாம் ரசிகர்கள்.

"நான் ராதா மாதிரியா இருக்கிறேன்?" என்று எல்லோரிடமும் கேள்வியா... துளைக்கிறார் சுவாதி. (நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?)

'செல்வா' படத்தில் மகா தாராளமாக நடித்தவர் சுவாதி. மாப்பிள்ளை... கவுண்டரில் ரசிகர்களின் மனதைக் கிள்ளும் பாத்திரம்.

படவாய்ப்புக்களைக் கைப்பற்றும் கலையில் வல்லவரான சுவாதியி... தற்போது அரைடஜன் படங்கள் கைவசம் உள்ளன.

## தெலுங்கு நாயகன்

தெலுங்குப் பட உலக கதாநாயகன் ராஜேந்திரபிரசாத் தமிழ்ப் படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்கிறார். படத்தின் பெயர் வாசுகி. ராஜேந்திர பிரசாத்தின் ஜோடி ஊர்வசி. மணிவண்ணன், மலேசியா வாசுதேவன், விசு, கோவை சரளா, எல்.ஆர். ஈஸ்வரி ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசை: இளையராஜா, இயக்கம்: கஸ்தூரிராஜா. முழுக்க முழுக்க நகைச்சுவை ததும்பும் படம்.




## சிவாஜி-கமல் லடாயா?

சிவாஜிக்கும் கமலுக்கும் சின்ன மனத்... தாங்கல். 'ஒன்ஸ்மோர்' படப்பிடிப்பில் பூங்... கொத்துடன் வந்த கமலை சிவாஜி கண்டு கொள்ளவில்லை என்று ஒரு வதந்தி. யாரோ சிண்டுமுடிய கட்டிவிட்டக் கதை அது.

உண்மையில் நடந்தது என்ன தெரியுமா? கமலைக் கண்டதும் கிண்டல் பண்ணினாராம் சிவாஜி. கமல் சின்ன தாடியுடன் வந்தாராம். "என்னப்பா, புதுசு புதுசா முகத்தைக் காட்டுறியே. பொலிஸ் ஸ்டேசனில் வைச்சிருக்கிற போட்டோ மாதிரி விதம் விதமா தெரியுறியே!" என்று கிண்டல் அடித்து விட்டு, கமல் வெட்கப்படுவதை ரசித்தாராம் சிவாஜி.


படிப்பகம்

www.padippakam.com

# மினிசினி

இந்தியில் தயாராகி வரும் 'அவ்வை சண்முகி'யின் பெயர் 'மேடம்'. தமிழில் கமல், மீனா, ஜெமினி ஆகியோர் நடித்த வேடங்களில் இந்தியில் கமல், தபு, அம்ரிஷ்பூரி ஆகியோர் நடிக்கின்றனர். தமிழில் நாசர் நடித்த வேடத்தை இந்தியிலும் அவரே நடிக்கிறார்.

அண்மையில் விபத்தில் அகால மரணமடைந்த பின்னணிப்பாடகர் ஷாகுல் ஹமீத் கடைசியாக ஷங்கர் இயக்கத்தில் உருவாகும் 'ஜீன்ஸ்' படத்தில் ஏ.ஆர்.ரகுமான் இசையில் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

'தேவா' படத்தில் விஜய்க்கு ஜோடியாக அறிமுகமானவர் சுவாதி. 'மாப்பிள்ளைக் கவுண்டர்' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடித்துள்ள இவர் அடுத்து கார்த்திக்கிற்கு ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.

ஜெகபதிபாபு-மீனா-சௌந்தர்யா நடித்து வெற்றிகரமாக ஓடிய 'சிலக்கா பச்சா காபரம்' என்ற தெலுங்குப்படம் தற்போது தமிழில் 'தேடி வந்த தேவதை' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வருகிறது.

இந்த வருடத்தில் 'பாரதி கண்ணம்மா', 'வாய்மையே வெல்லும்' ஆகிய வெற்றிப் படங்களில் நடித்துள்ள பார்த்திபன், அடுத்து கே.சுபாஷ் இயக்கும் 'அபிமன்யு' படத்தில் நடிக்கவுள்ளார். முதலில் அபிமன்யு'வில் அர்ஜுன் நடிப்பதாக இருந்தது.

'கல்கி' படத்தில் அறிமுகமான சுருதி கன்னடத்தில் நடித்த படமொன்று 'அக்கா' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெளியாகியுள்ளது. இதனை அடுத்து இவரது இன்னொரு கன்னடப்படமும் 'துர்க்கா பூஜை' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வருகிறது.

*'பூவே உனக்காக' படத்தில் அஞ்சு அரவிந்தின் காதலனாக நடித்தவர் சக்திகுமார். இவர் தற்போது மலையாளத்தில் சுரேஷ்கோபி-ரோஜா நடிக்கும் 'கங்கோத்ரி' படத்தில் வழக்கறிஞராக நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக நடிப்பவர் 'பூஞ்சோலை' பட நாயகி ரசிகா.

*கவர்ச்சி நடனத்தில் கொடிகட்டிப் பறந்த அனுராதா திருமணத்திற்குப்பின் நடிப்பில் இருந்து ஒதுங்கியிருந்தார். நீண்ட இடைவெளிக்குப் பின் 'சின்னமணி' படத்தில் நடித்தார். இப்போது 'தேடினேன் வந்தது' படத்தில் மந்த்ராவுக்கு அம்மாவாக நடித்து வருகிறார்.

*'வள்ளல்' படத்தைத் தயாரித்துவரும் சத்யராஜின் மனேஜர் ராமநாதன் புதிய படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். இந்தப் படத்தை 'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தை இயக்கிய ஆர்.பாலு இயக்கவுள்ளார்.

* கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்க அப்பாஸ்-பிரபுதேவா நடிக்கும் வி.ஐ.பி.படத்தின் அறிமுக நாயகி சிம்ரான், அந்தப் படம் வெளிவருவதற்கு முன்பே ஆறு புதிய தமிழ்ப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## தேடினார் வந்தது

கோவை சரளா, ஷர்மிலி, ஜோதி மீனா என்று கவுண்டமணியின் விசேஷ கவனிப்பில் வளர்ந்த நடிகைகளின் பட்டியல் இருக்கிறது. வேறு வழியில்லாமல் கவுண்டமணியின் விருப்பங்களுக்கு இசைந்து கொண்டிருந்த நடிகைகள் பின்னர் டாட்டா காட்டிவிட்டு நழுவி விட்டனர்.

கைக்கெட்டியதெல்லாம் கை நழுவிய கவலையில் இருந்த கவுண்டமணியிடம் சிக்கியிருக்கிறார் ஒரு நடிகை. அவரது பெயர் அம்ருதா. 'தேடினேன் வந்தது' படத்தில் நடிக்கும்போது கவுண்டமணியின் இதயத்தை அபேஸ் செய்துவிட்டாராம் அம்ருதா. மள மளவென்று வளர்ந்த நெருக்கத்தின் புண்ணியத்தில் ஐந்து புதிய படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார் அம்ருதா. ஐந்திலும் அம்ருதாவின் ஜோடி கவுண்டமணி. தேடினார் வந்தது.

## மற்றொரு வாரிசு

நடிகர் விஜயகுமாரும், மஞ்சுளாவும் தங்கள் குடும்பத்தில் யாரையும் விட்டுவைக்க மாட்டார்கள் போல இருக்கிறது. குடும்பத்தில் உள்ள அனைவரையுமே வெள்ளித்திரையில் முகம் காட்டச் செய்வது என்று சத்தியம் செய்திருக்கிறார்கள்.

ஏற்கனவே கவிதா, வனிதா, அருண் குமார், பேபி ஸ்ரீதேவி என்று தங்கள் வாரிசுகளை சினிமாவில் நடிக்கவைத்தார்கள். இப்போது மற்றொரு மகளான ப்ரீத்தாவையும் சினிமாவுக்கு கொண்டு வந்து விட்டனர்.

'ருக்மணி கல்யாணம்' என்னும் படத்தில் வினித் ஜோடியாக நடிக்கிறார் ப்ரீத்தா. அசப்பில் வனிதா மாதிரியே இருக்கிறார். ஆனால் மெல்லிய உடல்வாகுடன் காணப்படுகிறார்.

## இயக்குநரின் உருக்கம்

விசித்ரா பற்றிய விவகாரமான செய்திகளுக்கு குறைச்சல் இல்லை. தமிழக பெண் பொலிஸ் அதிகாரியின் மகனுடன் விசித்ரா காய் விட்ட செய்தி வந்தது. அந்த சூட்டோடு தெலுங்குப் பட இயக்குநர் ஒருவருடன் கனிந்துவிட்டார் விசித்ரா.

தெலுங்குப் பட உலகில் விசித்ராவை வெற்றிக்கொடி நாட்டவைப்பதாக உறுதி கூறியிருக்கிறாராம் இயக்குநர். அதனை நம்பி இயக்குநருடன் ராசியாகி சுற்றத் தொடங்கி விட்டாராம் விசித்ரா.

## சரோஜாதேவிக்கு தூது!

'ஒன்ஸ்மோர்' படத்தில் சிவாஜி ஜோடியாக நடிக்கிறார் சரோஜாதேவி. வயதானாலும் கட்டுக்குலையாமல் இருக்கிறார்.

தி.மு.க. வட்டாரத்தில் பிரபலமான ஒரு அமைச்சர் அந்தக் காலத்தில் இருந்தே சரோஜாதேவியின் ரசிகர். முன்னர் ஜொள் விட்டவர் இப்போது அதிகாரம் இருப்பதால் பழைய கனவுகளை நனவாக்கப் பார்த்தாராம்.

சரோஜாதேவிக்கு தனது ஆள்மூலம் அழைப்பு அனுப்பினாராம் அந்தப் புள்ளி. விஷயம் எப்படியோ பெரிய இடத்துக்கு எட்டிவிட்டதாம். கண்டிப்பான உத்தரவு மூலம் தடுத்துவிட்டாராம் தலைவர். தலைவரும் ஒரு கலைஞர்தானே.

தனது கட்சிப் புள்ளிகளில் பலர் அதிகாரம் வந்த கையோடு சினிமா நடிகைகளையும் அதிகாரம் செய்து ஆள முயற்சிப்பதை தடுப்பது எப்படி என்று தெரியாமல் தவிக்கிறார் தலைவர். இவ்வாறு பல புகார்கள் வந்துள்ளதாம்.



கரண்-அஸ்வினி
படம்: ராமன் அப்துல்லா

## இரகசிய ஒத்திகை

பாடல் காட்சிகளுக்கு ல் நடிகைகளிடம் சில்மிஷம் கைகள் குமுறுகிறார்கள். வகாரங்களில் நிர்ப்பந்தம் யாது. அதனால் பாடல் றார்களாம்.

பின்னாலும் காதலிக்கும் ில் மற்றொரு வில்லங்கம். பாடத்தின் காட்சிகளாக ல் முன்னணியில் உள்ள கவி, ஜோதிமீனா, ரஸிகா, பார்த்துக் கொள்ளலாம். இல்லையாம்.

ம் வெளியாகிய பின்னர் வரவேற்பாம்.

'பா'தீப நடிகரின் காட்டில் புயலோடு கூடிய மழை கொட்டுகிறது. அதனால் அவரது அழைப்பை ஏற்க நடிகைகள் பலர் தயார்நிலையாம். சங்கீத நடிகையுடன் காதலைப் புதுப்பித்துள்ளாராம் நடிகர். '....காளை' படத்தில் ஜோடியாக நடிக்கும் நடிகையுடனும் உல்லாச வலம் செல்கிறாராம்.

'பூ' நடிகையும் அவரது காதலரான சுந்தரமான இயக்குநரும் சற்று அடக்கி வாசித்தால் என்ன? அப்படிக் கேட்கிறார்கள் சூப்பர் ஸ்டார் படத்தின் யூனிட்டில் உள்ளவர்கள். திடீர் திடீர் என்று படப்பிடிப்பு அரங்குக்கு வருவாராம் பூ நடிகை. காதலரை அழைத்துக் கொண்டு மேக் அப் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொள்கிறாராம். சூப்பர் ஸ்டார் படப்பிடிப்பில் இருந்தால் மட்டும் சாதுபோல வந்துவிட்டு திரும்பிப் போய்விடுவாராம் பூ நடிகை. என்னதான் காதலர்களாக இருந்தாலும் இப்படியா? என்று முகம் சுளிக்கிறார்கள் யூனிட்டில் உள்ளவர்கள்.

## காதோடு சொல்லுகிறோம்

இளம் நடிகரான 'விஜய'மானவர் இமயத்துடன் இணைந்து நடிப்பதை நினைத்து புல்லரிச்சுப் போய் இருக்கிறாராம். "அதற்காக ஜோடியாக வந்த மும்பாய் நடிகையை நட்சத்திர ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லவேண்டுமா? உற்சாகத்துக்கு ஒரு எல்லை வேண்டாமா?" பொறாமைக்காரர்கள் அப்படித்தான் கேட்பார்கள். நடிகர் ஏன் காதில் போட்டுக் கொள்ளப்போகிறார். ஆகட்டும்டா தம்பி ராஜா.

'நக்ம' நடிகையின் இரண்டாவது வாரிசும் சேவை செய்யப் புகுந்து விட்டார். 'மோதிரக்கையால் குட்டுப் பட்டால்தான் உயரலாம் என்பதால் மோதிரக்கை தேடிக் கொடுக்கும் முயற்சியில் இருக்கிறாராம் நக்ம நடிகை. அவர்தானே வழிகாட்டி.

முகப்பில்

விக்னேஷ்–சங்கவி

யுவராணி



ராமராஜன்-சங்கீதா
படம்: பூமனமே வா

## ரம்பாவின் ஐடியா

ரம்பாவுக்கு ரசிகர்களின் அன்புத் தொல்லை கள் தாங்கமுடியவில்லை. அதனைத் தவிர்க்க ஒரு ஐடியா கண்டுபிடித்திருக்கிறார்.

சமீபத்தில் ஒரு ரசிகர் ரம்பாவைக் கண்டதும், "நடிகர்கள் எல்லோரும் உங்களுக்கு முத்தம் கொடுக்கிறார்களே. ரசிகர்களுக்கு அந்தப் பாக்கியம் இல்லையா?" என்று கேட்டாராம்.

உடனே ரம்பா என்ன சொன்னார் தெரியுமா? "தாராளமாகக் கொடுக்கலாமே, நான் மாட்டேன் என்றா சொல்லப்போகிறேன்" என்று கேட்படியே தனது ஹேன்ட் பாக்கிலிருந்து தன் புகைப்படம் ஒன்றை எடுத்துக் கொடுத்து விட்டுப் போய்க் கொண்டே இருந்தாராம். ஐடியா எப்படி?

## விமானப்பயணம்

பெப்ரவரி 15ம் திகதி ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு விமானத்தில் வந்தனர் அஜித்குமாரும், ஹீராவும். சகபயணிகள் பாடுதான் தர்மசங்கடம். முக்கியமான காதல் காட்சிக்கான ஒத்திகையில் (?) படு சீரியஸாக இருந்தனராம் இருவரும். பக்கத்து சீட் பயணிகள் நெளிந்து கொண்டிருந்தனராம்.

## 'இண்டிபெண்டன்ஸ் டே'

ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை அடைந்தால் போதுமா, அரசியல் அழிவில் இருந்து விடுதலை அடைய வேண்டாமா? புதிய படமான 'இன்டிபென்டன்ஸ் டே' படத்தின் கதை அதுதான்.

'தாயகம்' பட இயக்குநர் ஏ.ஆர்.ரமேஷ் இயக்கும் புதிய படம்தான் 'இன்டிபென்டன்ஸ் டே'. அருண்குமார், ரோஜா, ரஞ்சிதா, ஆனந்தராஜ் ஆகியோர் நடிக்கின்றனர். இசை: தேவா.

சுதந்திர தினம் என்று தமிழில் பெயர் சூட்டினால் அசத்தலாக இருக்காதாம். அதுதான் ஆங்கிலத்தில் பெயர் சூட்டியுள்ளனராம்.



பிரபு-சுவாதி
படம்: மாப்பிள்ளைக் கவுண்டர்



படிப்பகம்

www.padippakam.com

# நம்மையறிந்தால் நாம் நம்மையறிந்தால்....!



பத்துப்பேர் மத்தியில் பளிச் சென்று நம்மை எப்படிக் காட்டிக் கொள்வது? 'பானு எப்படி இருக்கிறா பார்த்தியா?', 'நாம இந்த சாறிக்குப் பதிலாக பச்சைக் கலரில் கட்டிக்கொண்டு வந்திருக்கலாமோ?' என்று முகத்தில் புன்னகையும், மனதில் குழப்பமுமாக அநேக பெண்கள் உலா வருவதுண்டு.

சகோதரிகளே! கூட்டத்தில் 'பளிச்' சென்று தெரியுமாறு நம்மை நாமே மேலும் மெருகுபடுத்திக் கொள்வது பெரிய இமாலய சாதனை அல்ல. சிறிது நேரமும், சிறிது கவனமும் தான் தேவை. அதுவே மிகப் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தும்.

முதலில் நம்மைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய ப்ளஸ் பொயிண்ட்கள் என்ன, மைனஸ் பொயிண்ட்கள் என்னவென்று பட்டியலிட்டு, ஒரு நல்ல அழகு நிலையத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு ப்ளஸ் பொயிண்ட்களைக் கூட்டி மைனஸ் பொயிண்ட்களைக் குறைத்தாலே மிகப்பெரிய தன்னம்பிக்கை ஏற்படும். அதுவே தனியான ஒரு அழகைத் தரும்.

## முதலில் உங்கள் உடல்

1. உங்கள் முகத்தின் சருமம் வரண்டதா? எண்ணெய்ப் பசை உள்ளதா?
2. புருவம் மொசுமொசுவென்று உள்ளதா?
3. முகத்தின் மெருகு, கலர் குன்றியுள்ளதா? சரியான கவனிப்பற்று உள்ளதா?
4. முடி சரியான கவனிப்பின்றி, பளபளப்புக் குன்றி, நுனி வெடித்துள்ளதா?
5. பின்னங்கைகள் புள்ளிகளும், முழங்கை சொரசொரப்புமாக உள்ளதா?
6. இடுப்பு டயர் மாதிரி, அங்கும் இங்கும் சதை தொங்கி உள்ளதா?
7. நகங்கள் பளபளப்பின்றி, உடைந்துள்ளனவா?

இத்தனையையும் பார்த்து முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளாதீர்கள். இதனை உணவுக்கட்டுப்பாட்டினாலும், உடற்பயிற்சியினாலும், ஒரு நல்ல அழகு நிலையம் செல்வதன் மூலமும் சரிசெய்து விடலாம்.

## அடுத்து சரியான முறையில் நிற்பது

1. முழு நீளக் கண்ணாடி முன்பு சரியான முறையில் நிற்கவும்.
2. கண்களை மூடிக்கொண்டு உங்கள் உடம்பைத் தலையுடன் இணைந்த ஒரு பலூனாக நினைத்துக் கொள்ளுங்கள்.
3. உங்கள் முழுக்கவனத்தையும் பலூனில் வைக்கவும்.
4. மெல்ல பலூனை மேலாக உயர்த்தவும். மெல்ல உங்கள் முதுகுத் தண்டை நீட்டி உங்கள் மார்பும், இடுப்பும் உயரச் செய்யுங்கள்.
5. உங்கள் கைகளும், தோள்களும் இலகுவாக பொம்மலாட்ட பொம்மை போல் இருக்க வேண்டும்.
6. கண்களைத் திறக்கவும்.

இப்படிச் செய்து பாருங்கள். உங்கள் இடுப்பும், உடம்பும் இளைத்து, சிறிது உயரமாகத் தோன்றும். இதை எவ்வளவு தரம் வேண்டுமானாலும் செய்யலாம். இது எளிமையான பயிற்சியும்கூட இது அநேகம் பேருக்குத் தெரியாது.

நாம் சுறுசுறுப்பாகவோ, சோர்வாகவோ, இளமையாகவோ, முழுமையாகவோ இருப்பதெல்லாம் இரண்டாம் பட்சம்தான். முதலில் சரியான தோற்றம் அவசியம்.

# அம்மா வாசனை



பிறந்த குழந்தைகளின் பார்வை, சில அங்குலங்களுக்கு அப்பால் நகருவதே இல்லை; ஆனால் அவற்றின் மூக்குகள்?

பிறக்கும் போதே முகர்ந்து அறிகின்ற உணர்வை அதிகம் வளர்த்துக் கொண்டிருப்பவை. அவற்றிற்கு அம்மாக்களின் வாசனை உடனே தெரியும்.

'த லான் செட்' என்னும் மருத்துவ இதழ் இது பற்றி ஓர் ஆய்வு நடத்தியது.

பிரசவம் முடிந்தவுடனே, குழந்தைகளைக் கழுவி எடுத்து வந்து அவரவர் தாய்மார் அருகே குழந்தைகளைப் பாலூட்டுவதற்கு விடுகிறபடி, முப்பது தாய்மார்களிடம் விட்டார்கள். அதற்கும் முன்னதாக இந்த முப்பது பேரின் ஒற்றை மார்புகளையும் கழுவிச் சுத்தப்படுத்தினார்கள்.

குழந்தைகளின் பிஞ்சு உதடுகள் திறந்தன. ஆனால் கழுவப்பட்ட மார்பருகே அணைக்கப்படும்போதே குழந்தைகள் தலைகளை நகர்த்திக் கொண்டன. முப்பது குழந்தைகளில் 22 குழந்தைகள் கழுவாத மார்புகளிலேயே பால் குடிக்க விரும்பின. காரணம்– அம்மாவின் வாசனையை ஒவ்வொரு குழந்தையும் அதிகம் தெரிந்து கொண்டிருப்பதுதான்– என்கிறது அந்த மருத்துவ மாத இதழ்.

# தண்ணீர் – தண்ணீர்



உயிர் வாழ்வதற்கு காற்று அவசியம் என்று சொல்வதைப் போல தண்ணீரும் மிக மிக அவசியம்.

ஆனால் தண்ணீரின் அவசியத்தை பலரும் சரியாக உணர்வதில்லை.

ஒரு நாளைக்கு ஒருவர் குறைந்தது எட்டு டம்ளர் தண்ணீராவது பருகியே ஆக வேண்டும். தாகம் எடுக்கவில்லையே என்று தண்ணீர் குடிக்காமல் இருப்பதும் தவறுதான். பொதுவாக தேவையான அளவு சுத்தமான தண்ணீர் குடிப்பவர்களுக்கு அவ்வளவாக நோய்கள் வருவதில்லை.

தண்ணீர் அளவு குறைந்தால் சிறுநீர் அடைப்பு, சிறுநீர் வெளிவரும் போது எரிச்சல், சிறுநீரகக் கோளாறுகள் போன்ற நோய்கள் வர வாய்ப்புண்டு.

உடலின் வெப்பநிலையை சரியாக வைத்திருக்க தண்ணீர் அவசியமாகின்றது. உடல் உழைப்பு அதிகமுள்ளவர்கள் மற்றவர்களைவிட அதிகமான நீர் பருகவேண்டும். இல்லையெனில் தசை நார்கள் பழுதடைய நேரலாம். சிறிது அளவிலாவது தலைவலி தோன்றலாம்.

தண்ணீரைப் பற்றி தவறான கருத்துக்கள் பல நம்மிடையே நிலவுகின்றன.

### உணவுடன் நீர் அருந்தக்கூடாது

இது தவறான கருத்து. இதனால் ஜீரண சக்தி குறையும் என்பதும் பொய். நீர் அருந்துவதால் ஜீரணத்திற்கான என்ஸைம் சக்தி இழந்து விடுகின்றன என்பதும் கற்பனையே. உணவுடன் தண்ணீர் அருந்தினால் ஜீரணமாகாத உணவுப் பொருட்களும் இரத்தத்துடன் கலந்து விடும் என்போரும் உண்டு. ஜீரணத்திற்கு நீர் மிக மிக அவசியம்.

### நீர் அருந்தினால் தொப்பை விழும்

உண்மை அதற்கு எதிரானது. உணவில் உப்புச் சத்து அதிகமாக இருந்தால் தண்ணீரை உடல் அதிகமாக ஈர்த்துக் கொள்ளலாம். உண்மையில் உள்ள கொழுப்புச் சத்து கரையும்போது ஏற்படும் விஷதார்த்தங்களை உடலில் இருந்து அகற்றுவதே தண்ணீர்தான். எனவே உடல் பருமனாக உள்ளவர்கள் நிறையத் தண்ணீர் அருந்துவது தான் சரி.

### தண்ணீருக்குப் பதில் 'கூல்ட்ரிங்ஸ்'

திரவப் பொருட்கள் எல்லாம் தண்ணீர் தானே என்ற நினைப்பில் தேனீர், கோப்பி, கூல்ட்ரிங்ஸ், மதுவகைகள் போன்றவைகள் குடிப்பது தவறு. சிறுநீரகங்களைப் பாதிக்கும் சீனி, கொஃபீன், அல்கஹோல் போன்ற பொருட்கள் உடலில் உள்ள தண்ணீரை அகற்றிவிடும் என்பதே உண்மை.

### உடற்பயிற்சி வேளையில் நீர் அருந்தக்கூடாது.

இதுவும் ஆதாரமற்ற தகவல்தான். தண்ணீர் அருந்துவதுதான் நல்லது. ஆனால் இனிப்புக் கலந்த நீரைத் தவிர்ப்பது நல்லது.

### தண்ணீர் குடிப்பதால் தடிமன் வரும்

இல்லை. ஒருபோதும் இல்லை. தடிமன் உள்ள நாட்களில் நிறைய தண்ணீர் குடிப்பது அவசியம் என்பதுதான் டாக்டர்கள் பரிந்துரைப்பது.

எனவே ஒன்றை மனதில் இருத்திக் கொள்ளுங்கள். காலை, மாலை, பகல், இரவு எனப்பகிர்ந்து கொண்டு நிச்சயமாகத் தண்ணீர் அருந்தியே தீரவேண்டும் என்று வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

அருந்தும் நீர் சுத்தமானதாக இருப்பது அதைவிட அவசியம்.

# பொறு மனமே



மன அழுத்தம் 'வெயிட்' அழுத்திய பிரஷர் குக்கர் போல பல நேரமும் (பாதிக் கப்படுகிறவர்களை) திணறச் செய்யும்.

கத்த வேண்டும் போல் இருக்கும். துக்கம் வெடிக்கும். எரிச்சலும், கோபமும் எக்கச்சக்கமாக வரும். இதனால் இரத்தம் சூடேறும். ஒருவகை வெறிகூட வந்துவிடும். 'ஸ்ட்ரெஸ்' (STRESS) என்பது இதுதான். இதனைக் கட்டுப்படுத்துவது முக்கியம். அதற்கான ஐந்து வழிகளை அந்நேரம் உடனே கடைப்பிடித்து 'றிலாக்ஸ்' (RELAX) ஆகலாம் என்கிறார்கள் மனநல வல்லுநர்கள்.

அவைகள் இதோ:

- உங்களுக்குள்ளேயே சிரித்துக் கொள்ளுதல்.
- தாடையையும், உதடுகளையும் மென்மையாக அழுத்தி விடுதல்.
- மெதுவாகவும், ஆழமாகவும் சுவாசித்தல்.
- 'றிலாக்ஸ்', 'றிலாக்ஸ்' என்று தங்களுக்குள்ளேயே ஒவ்வொரு முறை மூச்சை வெளியேற்றும் போதும் சொல்லிக் கொள்ளுதல்.
- தலையையும், தோள்களையும் முன்னுக்கு நகர்த்தி முதுகுத் தண்டை விரியும்படி செய்தல்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## ஏறாவூர் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

திருமதி U.K.சுபைதா உம்மா,
65 A, பிரதான வீதி, ஏறாவூர்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# வாய் திறந்தால் போச்...!



அழகான ஆண்களையும், பெண்களையும் கூட அசிங்கப்பட வைத்து விடுகின்றது வாய்நாற்றம். வயது வித்தியாசமின்றி இந்த மோசமான வாடை வாயில் இருந்து வீசுகின்றது. அதற்குக் காரணம் பல்லின் இடையில் மஞ்சள் நிறத்தில் படிந்திருக்கும் 'பிளகியூ' என்பதாகும். இவை உடலில் இருந்து தோன்றும் பல வகை பக்டீரியாக்களின் அணுக்களால் ஏற்படுகின்றது. சாப்பிடும்போது துகள்கள் பல்லின் இடையில் சிக்கிக் கொள்கின்றன. அவை இராசாயன மாற்றங்களால் மஞ்சள் நிற படிமமாகி விடுகின்றன.

இனிப்புப் பொருட்களை அதிகமாகச் சாப்பிடுவதே இதற்கு ஏதுவாக அமைகின்றது. மது அருந்துபவர்கள், புகை பிடிப்பவர்களுக்கு இந்தப் பாதிப்பு அதிகம் இருக்கும். இந்த வாய் நாற்ற விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் நீரிழிவு நோய், ஈரல் பாதிப்பு, சுவாச உறுப்பு நோய்கள் ஏற்பட்டிருந்தாலும் தொடர்ந்து வாய்நாற்றம் இருக்கும்.

வாய் நாற்றத்தைப் போக்குவது மிகவும் எளிதான விஷயம். தினமும் காலையும், இரவும் பல் துலக்க வேண்டும். பல்லின் அழகுப்பகுதிகளிலும், இடைப்பகுதிகளிலும் அதிகமாக 'பிரஷ்' பண்ண வேண்டும்.

நாக்கையும் நன்றாகச் சுத்தப்படுத்தி ஏதாவது ஒரு 'மவுத்வோஷ்' (பார்மசிகளில் கிடைக்கும்) மூலம் வாய் கொப்பளிக்க வேண்டும். அடிக்கடி உணவு சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் அப்போது சுரக்கும் உமிழ்நீரே உடலில் உள்ள பல பகுதிகளைச் சுத்தம் செய்கின்றது. அவ்வாறு உமிழ்நீர் அதிகமாகச் சுரக்காமல் இருக்கும்போது மஞ்சள் படிமம் வேகமாக உருவாகிவிடும்.

சாப்பிட்டு முடிந்ததும் ஒரு சில கராம்புகளை எடுத்து வாயில் போட்டுமென்று சுவைப்பது பல்லுக்கு நல்லது. அதே நேரத்தில், ஆறு மாதத்திற்கு ஒரு முறை பல் டாக்டரைச் சந்தித்துப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BK

பெயர்:...............................

முகவரி:...............................

...............................

கையொப்பம்:...............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12-04-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது

சுகந்தினி

## தந்தூரி சிக்கன்

**தேவையானவை:**

| | |
|---|---|
| கோழி | - 1 |
| மிளகாய்த்தூள் | - 50 கிராம் |
| மல்லித்தூள் | - 20 கிராம் |
| சீரகம் | - 1/2 தேக்கரண்டி |
| கடுகு | - 1/2 தேக்கரண்டி |
| இஞ்சி | - 1 துண்டு |
| பூண்டு | - 10 பல்லு |
| ஏலக்காய் | - 3 |
| தயிர் | - 1 கப் |
| எலுமிச்சம்பழம் | - 1 |
| மாஜரீன் | - 20 கிராம் |
| எண்ணெய் | - அளவாக |
| உப்பு | - அளவாக |

**செய்முறை:**

கோழி இறைச்சியை பெரிய, பெரிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பூண்டு, இஞ்சி, ஏலக்காய், சீரகம் ஆகியவற்றை விழுதாக அரைக்கவும். அரைத்த மசாலாவையும், உப்பையும் தயிரில் கலந்து கொள்ளவும். அத்துடன் எலுமிச்சம்பழத்தை அரிந்து பிழியவும். அவற்றில் இறைச்சித்துண்டுகளைப் போட்டு எட்டு மணி நேரம் ஊறவைக்கவும்.

பின்னர் தோசைக் கல்லை அடுப்பில் வைத்து சூடேறியதும் அதில், ஊற வைத்த இறைச்சித்துண்டுகளைப் பரவலாகப் போடவும். பிறகு மாஜரீன், எண்ணெய் இரண்டையும் அதில் விடவும். நன்றாகப் பொரிய வேண்டும். பிறகு துண்டுகளை மாத்திரம் தனியே எடுத்து அலங்கரிக்கவும். தந்தூரி சிக்கன் ரெடி.

# பரிசு பெற்றவர்கள்

முரசின் பட்டுச் சேலைப்பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் இருவர் இவர்கள்தான்:

செல்வி க.ஆர்த்திகா,
39, ஸ்ரபற் வீதி, இராகலை,
கல்கரன் ஓயா.





ரி.எச். நிஹாரா
முதலாம் வட்டாரம், நிலாவெளி, திருகோணமலை.

# தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப்போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 05

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அறிவிக்குமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

## நாளைகள் எனக்குள்ளன...!

காலத்தின் தீர்ப்புகள்- எனைக்
கட்டாயப்படுத்தி
ஏற்றுக் கொள்ளச் செய்த
ஏராளம் காயங்களில்-எனது
கண்ணீரைத் தடவிக்
குணப்படுத்தும் வேளையிது!
-o-
எத்தனையோ முறை
எல்லோரிடமும்
கெஞ்சிக் கேட்கிறேன்;
விழி நீரால் இந்த
வசனங்களை
வரைந்து கேட்கிறேன்;
ஆறிவரும் காயங்களை
மறுபடியும் கீற வேண்டாம்!
-o-
அவன் ஒரு கண்ணீர்,
அவன் ஒரு காயம்,
அவன் ஒரு கல்லறை;
நான் எதற்காகக்
கண்ணீரால் வெந்து,
காயங்களால் நொந்து,
கல்லறையொன்றுக்காகக்
காத்திருக்க வேண்டும்?
-o-
என் வாழ்வைவிட்டு
விலகிப் போனது
வசந்தமல்ல- ஒப்பாரி!
சுருதி பிசகியது
சோகங்களேயன்றி
ராகங்களல்ல!
-o-
வசந்தம் காலடியிலிருக்க
ஒப்பாரிகள் எனக்கெதற்கு?
ஆலாபனைகள்
எனக்காக உள்ளபோது,
நோவினைத் தருமொன்றினை
நான் எதற்காக
நித்தமும் மீட்ட வேண்டும்?
-o-
என் நெஞ்சில்
நெருப்பு வைத்துவிட்டு
என் வழியில்
புதைகுழி வெட்டிவிட்டு,
என் நேற்றுக்களை
நோகச் செய்துவிட்டு
அவன் செத்துப் போய்விட்டான்!
-o-
ஒரு நச்சமரம்
பிடுங்கப்பட்டதனால்
எனது சோலைவனம்
எப்படிப்
பாலைவனமாகும்?
-o-
உலகில் நான் வெற்றிபெற
அநேக எதிர்பார்ப்புகள்
உள்ளபோது,
கரைந்து போய்விட்ட
கனவொன்றுக்காகக்
கண்ணீர்விட மாட்டேன்!
-o-
எனக்காக
நாளைகள் உள்ளன;
உலகில் ஏராளம்
இதயங்கள் உள்ளன!
எதற்காக நான்
ஊமைக் காயங்களின்
உலகில் தனிமைப்பட்டு
அவனுக்காக அழவேண்டும்?
-o-
இன்னொரு இதயத்திற்கு
நெருப்பு வைத்துவிட்டு
வாழ்வதுதான்
வாழ்க்கையென்று
அவன் தீர்மானித்ததற்காக
ஆழ்ந்த அனுதாபங்களைத்தான்
என்னால் கூறமுடியும்!
-o-

செல்வி பஹீமா ஜஹான்-மெல்சிரிபுர.

## காதலிக்கும்) கவிதை

என் மறதி
உன் ஞாபகங்களுக்கு
வரக்கூடாது.
o-o-o
திடீரென
நான்கண்ட கனவு
உன்னைக் காதலித்ததால்
இரவுகள் இரகசியமாகிவிட்டன.
o-o-o
திரும்பிப் பார்ப்பதற்காக
ஒரு
ஒத்திகை,
ஆனால்;
நீதான் வேண்டாமென்றாய்!
o-o-o
எனவே,
காதலி
என் எண்ணத்தையாவது
உன் மனதினில் வைத்துவிடு,
ஒரு
சுமையாக இருந்து கொள்ளட்டும்.
o-o-o
விடிவும்,
இருளும்,
சேர்ந்து நாளாகி
நம் காதலை
ஏற்றுக்கொள்ளட்டும்.
o-o-o
என்
ஆயுள்
இன்றுவரை
நீண்டு கொள்கிறது;
உன்
காதலைப் பெறுவதற்கு!
o-o-o
ஒரு கவிதையால்
உன்னை எழுதி
வைத்துக் கொள்கிறேன்;
மீண்டும் மீண்டும்
உன்னோடு பேசுவதாக
நினைத்து...!
o-o-o
இனி....
நமக்கு
பகல் அதிகமாக வேண்டாம்;
ஒரு நாள் போதும்...
நாம்
கவிதையாவதற்கு!
o-o-o

கிழக்கு நிலா-பொத்துவில்.

தேன் கிண்ணம்


நேரு-கமலா


பெரோஸ் காந்தி-இந்திரா


சஞ்சய் காந்தி-மேனகா

## சுய அறிமுகம்

நான்
மனிதனில்லை-
என்னை
வைத்திருக்காத
மனிதருமில்லை!
-*-
ஜனனப் பிரதேசமும்
வசிப்பு வீடும்
வடக்கு-
கிழக்கு.
-*-
எனது வேடங்களை
பொறுத்து
பொக்கற்றிலும்
புத்தகத்திலும்
புடவையிலும்
பாதுகாக்கப்படுகின்றேன்.
-*-
நான்
தொலைந்தால்,
தொலைத்தவர்கள்
தொலைந்தார்கள்!
-*-
24 மணி நேரத்தில்
நான் அதிக தடவை
உச்சரிக்கப்படுவதால்,
நானும்
ஒரு
'வி.ஐ.பி.'
-*-
முன்னர்
ட்ரெயினில் இருந்து
இறங்குவோர்,
என்னை
மணந்தார்கள்;
இப்போதோ..
அதில் ஏறவே-என்னை
பதிவுத்திருமணம்
செய்ய வேண்டும்.!
-*-
இங்கே
இதயம் இல்லாமல்
கூட இயங்கலாம்;
ஆனால்-என்
'இருப்பு' இல்லாது
ஒன்றும் செல்லாது.
-*-
'ஐ.சி' க்கும்
எனக்கும் அண்மையில்
இரட்டை சாதனையாளர்
விருது-
அறிவிக்கப்பட்டது.
-*-
நான்
இல்லாத
சோதனைகளில்
எல்லோரும்
'பெயில்'
தான்!
-*-
"சரி... வரட்டா?
நேரமாகுது.
என்ன? என்பேரா?
என்னை தெரியாதா?
'பாஸ்!' 'பாஸ்!'
-*-

பாலகமலன், வவுனியூர்.

## ஆதிக்கம்

வேட்ட வாளிக் கூடு போல
புத்துமண் சுவருகட்டி
மேல-
இருக்கு மேய்ந்த
நரைத்த வீடு...
அதுதான்
எங்கள் தங்குதளம்!
••
நான், உம்மா, உம்மம்மா
பிறந்த தெல்லாம்
இதுலதானாம்!
••
இப்போது
சிதைக்கப்பட்டு விட்ட
இந்த வீட்டின் நிலத்தில்
உம்மாவின் கை ரேகையும்
எனது-
குழந்தைப்பருவக் காலடியும்
இன்னுமிருக்கு...!
••
நான் குயில்களோடு கூவி
தர்க்கித்திருக்கிறேன்-இந்த வீட்டின்
முற்றத்து ஆல மரத்தில்...
••
சின்ன வயதில்
துள்ளித் திரிகையில்
குயில்களுக்கு நான் விரோதி;
இன்று அது எனக்கு
துரோகியாகிவிட்டது.!
••
அந்த விதை வெடித்து
மரம் வளர
நிழல் வளர்வதாய்
நினைத்திருந்தோம்!
••
எங்கள் தங்குதளம்
புனித பூமியாகிட்டு;
நாங்கள்தான்
களைகளாய்
புடுங்கி வீசப்பட்டுவிட்டோம்!
••
இப்போதெல்லாம்
பூவரசை முளைத்தாலே
பயமாக இருக்கிறது!

மீராவோடை-எஸ். நஸீம்.

## உஷ்ணக் குளிர்

பிரம்மன் விட்ட
வியர்வைத்துளியில்
பௌர்ணமி ஒன்றில்
பிறந்தவள்- நீ!
*
உன்னோடு
ஆணிவேர் விட்டு
உரசிக் கொள்ளத்தான்
ஆசை!
-o-
நீ-
விக்கித்தால்
என் உணர்வுகள்
வெடித்துப் போகும்
என்பதால்..... இன்னும்
மௌனமாக.....!
*
பருவம்தான்
உன் மனசை எட்டிப்பார்க்க
எத்தனை முறை-
தள்ளி இருக்கும்....?
-o-
வாழ்க்கையின் விடிவெள்ளி
நீ என்றால்...,
விதைக்கப்பட்டது
அறுவடை
செய்யப்படவில்லையா?
-o-
வாழ்க்கைக்காக
உன்னோடு பரீட்சை
எழுதக்கூடாதா?
*
இல்லை என்று
போய்க் கொண்டிருந்தால்,
உனக்கும்
கால் வலிக்கும்!
*
நீ உஷ்ணமா...?
குளிரா...?
உஷ்ணக்குளிரா?
*

யெம்.யே.தஸ்ரீப்,
அக்கரைப்பற்று.


ராஜீவ் காந்தி-சோனியா

## பெரிய இடத்து திருமணம்

இந்திய அரசியலில் தனிமுத்திரை பதித்தது நேரு குடும்பம். இப்போதும் ராஜீவ் மனைவி சோனியாவை அரசியலுக்கு அழைக்கிறார்கள். ராஜீவின் பிள்ளைகள் ராகுல், பிரியங்கா இருவருக்கும்கூட இந்திய அரசியல் இன்முகம் காட்டுகிறது.

அந்தளவுக்கு நேரு குடும்பம் இந்திய அரசியலில் வேர்விட்டிருக்கிறது. புகழ்பெற்ற நேரு குடும்ப திருமணக் காட்சிகளின் அபூர்வ புகைப்படங்கள் இவை.

இந்தநாள் திருமணம் பக்கம் 18ல்

## இந்த வாரம் உங்கள் பலன்

(06.04.1997 தொடக்கம் 12.04.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், சனி, கேது. |
| மேடம் | - வெள்ளி, புதன். |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |

★ சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், வீண் தொல்லை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, காரியத்தடை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், தொழில் சிறப்பு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மேன்மை, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண் குரோதம், பலவித நஷ்டம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பெரியோர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| சனி- அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியசித்தி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த பேறு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- மனமகிழ்ச்சி, பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், பணக் கஷ்டம். | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பெரியோர் நன்மை. | பி.ப. | 2 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, தொழில் உயர்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கடன் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- காரியசித்தி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| சனி- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- காரிய சித்தி, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- கடின உழைப்பு; காரிய சித்தி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- இனசன விரோதம், பலவித பேறு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- காரிய சித்தி, தொழில் பேறு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | பி.ப. | 1 | மணி |
| புதன் - வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, கடின உழைப்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, கடன்தொல்லை நீங்கும். | பி.ப. | 4 | மணி |
| செவ்வாய்- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| சனி- பலவித பேறு, தொழில் சிறப்பு. | மு.ப. | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த பேறு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- கடன்தொல்லை நீங்கும், பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், காரியசித்தி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- காரியத்தடை, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் பகை. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- பெரியோர் பகை, மனஅமைதி குன்றும். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பண வரவுதடை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- காரியசித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, அந்நியர் சகவாசம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, செல்வாக்கு மேன்மை. | பி.ப. | 1 | மணி |
| சனி- கடன் தொல்லை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1


படிப்பகம்

www.padippakam.com





## வண்ணத்துப் பூச்சி

வண்ண வண்ண மலர்களையே
வண்ணத்துப்பூச்சி- நீயும்
வட்டமிட்டுப் பறப்பதுமேன்
வண்ணத்துப்பூச்சி?

உண்பதற்குத் தேனைத்தேடி
வண்ணத்துப் பூச்சி-தினம்
ஓய்வில்லாமல் பறக்கிறாயோ
வண்ணத்துப் பூச்சி?

கிண்ணத்திலே தேன் தருவேன்
வண்ணத்துப்பூச்சி- என்
கிட்டத்திலே நீ வருவாய்
வண்ணத்துப் பூச்சி!

துன்பமெதும் நான் விளையேன்
வண்ணத்துப் பூச்சி-என்றும்
தோழமையாய் நாமிருப்போம்
வண்ணத்துப்பூச்சி!

ஆர். துரை.

மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடுவீரே!
உழுது நன்செய் பயிரிடுவீரே!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## என்ன செய்தாய்?

பரமசித்தர் என்னும் குரு, தன்னிடம் கல்வி பயிலும் ஐந்து மாணவர்களை அழைத்து,

"மாணவர்களே! இன்று உங்களுக்கு ஒரு வித்தியாசமான போட்டி ஒன்றை வைக்கப்போகிறேன். அதாவது நீங்கள் எல்லாரும் நகருக்குச் சென்று பிறருக்கு உபயோககரமான செயலைச் செய்துவிட்டு வரவேண்டும். நீங்கள் ஐவரும் எப்படித் திறமையைக் காட்டுகிறீர்கள் என்று பார்ப்போம்" என்று கூறி ஐவரையும் அனுப்பி வைத்தார்.

சில நாட்கள் கழித்து ஐந்து மாணவர்களும் ஒருவர் பின் ஒருவராக குருவிடம் வந்து சேர்ந்தனர்.

முதலாமவன் குருவிடம், "குருவே! நான் நகரில் நுழைந்தவுடன் ஒரு பெண்ணின் நகையை திருடன் ஒருவன் திருடிக் கொண்டு ஓடினான். நான் அந்தத் திருடனைத் துரத்திப்பிடித்து நகையை மீட்டு, அவனைக் காவலர்களிடம் ஒப்படைத்தேன்," என்றான் பெருமையுடன்.

பின்னர் இரண்டாமவன், ஒரு வயதானவர் தண்ணீர் இன்றித் தவித்ததாகவும் பின்னர் அவருக்கு வெகுதூரத்தில் இருந்து தண்ணீர் எடுத்துக் கொடுத்ததாகவும் கூறினான்.

ஒரு பிச்சைக்காரன் மூன்று நாட்கள் உணவின்றி இருந்ததாகவும், பசியாக இருந்த அவனுக்கு உணவளித்ததாகவும் மூன்றாமவன் கூறினான்.

பின்னர் நான்காமவன் தான் சென்ற வழியில் சில தங்கக் காசுகளைக் கண்டெடுத்ததாகவும், அவற்றை விற்று ஏழை எளியவர்களுக்கு தர்மம் செய்ததாகவும் கூறினான்.

பிறகு குரு ஐந்தாமவனைப் பார்த்து, "நீ என்ன செய்தாய்?" என்று கேட்டார். உடனே அவன்,

"குருவே! நான் செல்லும் வழியில் ஒருவன் தற்கொலை செய்ய முயன்றான். நான் அவனைத் தடுத்து விஷயத்தைக் கேட்டேன். தனக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை என்றும் அதனால் வாழ்க்கை வெறுத்து விட்டதால் தற்கொலை செய்யப் போகிறேன் என்று சொன்னான்.

அப்போது நான் அருகில் இருந்த கிளி ஜோதிடனை அவனுக்குக் காட்டினேன். அவன் ஊமை. ஜோதிடம் பார்க்க வந்தவரிடம் அவன் சைகை மூலம், கிளியிடம், சீட்டை எடுக்கச் சொல்லி அந்தச் சீட்டில் உள்ள எண்ணுக்குரிய பலனை, ஏட்டில் இருப்பதைப் பார்த்துப் படிக்கச் சொன்னான். ஜோசியம் பார்க்க வந்தவர் அதைப் படித்து விட்டு அவனுக்குப் பணம் கொடுத்தார்.

தற்கொலை செய்யச் சென்றவனிடம் நான், "வாய் பேசமுடியாமல் இருந்தும் அவன் உழைக்கிறான். ஆனால் உனக்கு என்ன குறை? இந்த வேலைதான் வேண்டும் என்றில்லாமல் எந்த வேலை கிடைத்தாலும் நன்றாக உழை. நீ முன்னேறுவாய். வாழ்வில் வெறுப்பு இருக்காது," என்று சொல்லி அனுப்பினேன். அவன் சந்தோஷமாய்ச் சென்றான்!" என்றான் ஐந்தாமவன்.

மிக்வும் மகிழ்ச்சியடைந்த குரு, மற்ற மாணவர்களைப் பார்த்து,

"நீங்கள் நால்வரும் செய்த செயலிலும் பார்க்க இவன் செய்த செயல் மிகவும் கடினம். ஆனால் இவன் மிக எளிதாகச் செய்துவிட்டான். இந்தப் போட்டியில் வென்றும் விட்டான்" என்றார் குரு.



## வாரம் ஒரு நாடு

## டோகோ



**தலைநகர்**- லோம்
**பரப்பு**- 56,785 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை**- 41 இலட்சம்
**மொழி**- ஃபிரெஞ்சு (ஆட்சிமொழி), பழங்குடி மொழிகள்
**எழுத்தறிவு**- 45%
**சமயம்**- பழங்குடி, கிறிஸ்தவம், இஸ்லாம்
**நாணயம்**- ஃபிராங்க்
**தனி நபர் வருமானம்**- 330டொலர்.

**அமைவிடம்:**

டோகோ குடியரசு முன்னர் டோகோலாந்து எனப்பட்டது. இது ஆபிரிக்காவின் மேற்குக் கடலோரத்தில் அமைந்துள்ளது. கினியா வளைகுடாவில் இருந்து தொடங்கி புர்கினோ ஃபாசோவுக்கு வடக்காக அமைந்துள்ள குறுகிய நிலப்பகுதியே இந்நாடு.

**வரலாறு:**

ஃபிரான்ஸிடமிருந்து 1960ல் சுதந்திரம் பெற்றது. ஒரே கட்சி ஆட்சி. அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**பொருளாதாரம்:**

கோப்பி, கொக்கோ, பருத்தி போன்றவை முக்கிய விளைபொருட்கள். ஃபொஸ்பேட் அதிகளவில் கிடைக்கிறது. பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## விஞ்ஞானிகள் கவலை?

வடதுருவம் எனப்படும் அன்ரார்ட்டிக்கா எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒரு சமாதானப் பிராந்தியம் என்றும் அங்கே எந்தவொரு தனிப்பட்ட நாடும் ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்றும் 35 வருடங்களுக்கு முன்னர் ஓர் ஒப்பந்தம் (ANTARTICA TREATY) நிறைவேற்றப்பட்டது.



இதில் 32 நாடுகள் கையெழுத்திட்டன. இவற்றில் 18 நாடுகள் அங்கே ஆய்வு நிலையங்களை நிறுவி பெரும் பொருட்செலவில் ஆராய்ச்சி செய்து வருகின்றன. அந்த ஆய்வுகளின் உண்மையான நோக்கம் என்ன தெரியுமா?

அங்குள்ள அடர்த்தியான பனிப் பாறைகளின் அடியில் மிகப்பெரும் அளவிலான எண்ணெய் வளமும், தங்கமும் இருக்கலாம் என்னும் நம்பிக்கைதான். இதனால் அந்த 18 நாடுகளும் பெரும் பொருட்செலவில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

அங்கே எண்ணெய் வளம் அல்லது தங்கம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் இதனைக் காரணமாக வைத்தே உலக நாடுகளிடையே சண்டைகள் மூழக்கூடும் என்று விஞ்ஞானிகள் கவலை கொண்டுள்ளனர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.04.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 187
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 185

பரிசுக்குரியவர்:
ஆர். சதீஷ்குமார்,
புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு-10.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ்.எச்.செய்னுல் அல்தாப், ரோயல் கல்லூரி, கொழும்பு. | த.ராஜாஜீ, ஸ்ரீமுத்துமாரி அம்மன் தமிழ் மகாவித்தியாலயம், கம்பளை. |
| கே.அர்ச்சனா, வைரவப்புளியங்குளம், வவுனியா. | எவ்.முகமட் ரிசாட், சாஹிரா கல்லூரி, மருதானை, கொழும்பு-10. |
| ச.தயாளன், ப/பாரதி மகாவித்தியாலயம், பதுளை. | செல்வன் வை.கு.விஜயவர்மன், சர்வதேச பாடசாலை, விச்சேலி, கொழும்பு-7. |
| எம்.ஜே.நளிம், கருமையாள் குளம் வீதி, புத்தளம். | அனீஸ் மொஹமட், தமிழ் மகா வித்தியாலயம், ஹல்தும்முல்லை |
| சி.நவராஜ், 18, தரவளை பஜார், டிக்கோயா. | தேஜா நவரட்ணராஜா, நூ/அயரபி த.வி.நோர்வூட். |

## ஜோர்ஜ் பேர்னாட் ஷா

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த எழுத்தாளர் வரிசையில் ஜோர்ஜ் பேர்னாட் ஷா பிரதான இடத்தைப் பெறுகிறார். சிறந்த சிந்தனையாளராகவும் கருதப்படுகிறார். புகழ்பெற்ற நாடகங்களை எழுதிய ஷேக்ஸ்பியரைத் தொடர்ந்து அதே வரிசையில் புதுமையான 50 நாடகங்களை ஆங்கில இலக்கிய உலகுக்கு வழங்கியவர் ஷா.

சமகால நிகழ்வுகள், சமுதாய உணர்வுகள், அரசியல் மற்றும் மத சம்பந்தமான சம்பவங்களை ஒட்டியே ஷாவினுடைய நாடகங்கள் அமைந்துள்ளன. உலகின் பல மொழிகளிலும் இவருடைய நாடகங்கள் மொழிபெயர்க்கப்பட்டபோதும், அவருடைய தாய் மொழியான ஆங்கிலத்திலுள்ள நடையைப் போன்று சிறப்பாக வேறுமொழி நடைகள் அமையவில்லை என்றே இலக்கிய இரசிகர்கள் கருதுகிறார்கள்.

பேர்னாட் ஷாவின் ஒரு நாடகத்தில் எமது நாட்டு முக்கிய பிரமுகர் ஒருவரும் சித்தரிக்கப்பட்டுள்ளார் என்பது எம்மில் பலருக்குத் தெரியாது. 'ஒண் த ரொக்ஸ்' (ON THE ROCKS) என்ற நாடகத்தில் 'மஹாராஜா ஒஃ ஜஃப்னாபட்டம்' ('யாழ்ப்பாணப் பட்டினத்தின் மஹாராஜா') என்பதுதான் அந்தப் பாத்திரம். சேர் பொன் இராமநாதன் அவர்களையே இப்பாத்திரப் படைப்பில் புகுத்தியுள்ளார் ஷா. பிரிடிஷ் பிரதம மந்திரியின் உத்தியோக வாசஸ்தலமான லண்டன்-இல 10, டவுணிங் வீதி இல்லத்தில், பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளின் (வெள்ளையரல்லாத) மக்களின் பிரச்சனைகளை ஒட்டிய மாநாடொன்றில் யாழ்ப்பாண பட்டண மஹாராஜா கலந்து, பலகருத்துக்களைக் கூறுவதாக அப்பாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

பேர்னாட் ஷா அயர்லாந்திலுள்ள டப்ளின் நகரில் 1856 ஜூலை 26ல் பிறந்தார். சாதாரண



எழுதுவினைஞராக தொழிலை ஏற்றார். தனது 34வது வயதில்தான் இவருடைய முதல் நாடகமான 'மனைவியை இழந்தவர்களின் இல்லங்கள்' (WIDOWERS' HOUSES) என்ற நாடகத்தை எழுதினார். மேடைகளில் இந்நாடகம் நல்ல வரவேற்பைப் பெற்றது. 1925ம் ஆண்டு ஷாவுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது. இவர் மாமிசம் புசிக்க மாட்டார்; மதுபானம், புகைத்தல் பழக்கம் எதுவும் இவரிடம் கிடையாது. பிற்காலத்தில் இங்கிலாந்தைவிட்டு அமெரிக்கா சென்று குடியேறினார். 1950ம் ஆண்டில்-94வது வயதில் பேர்னாட் ஷா காலமானார்.

## கடல் சாமந்தி

கடலில் வாழும் விலங்குகளில் மிக விந்தையானவை பல உள்ளன. சிலவற்றை விலங்குகள் என்றே சொல்ல முடியாது. அவை சிறு செடிகளைப் போலவும், பூக்களைப் போலவும் காணப்படும். கடல் சாமந்தியும் இத்தகைய விலங்குகளில் ஒன்று.



கடல் சாமந்தி பார்ப்பதற்கு ஒரு பூவைப் போலவே இருக்கும். இவை வெள்ளை, பச்சை, நீலம், சிவப்பு, செம் மஞ்சள் ஆகிய பல வண்ணங்களில் காணப்படும். மித வெப்ப மண்டலத்திலுள்ள கடல்களில் கரையோரமாக இவை உயிர்வாழ்கின்றன. கடற்பாறைகளின் மீதும், மரத்துண்டுகளின் மீதும், நத்தைகளிலும் கடல்சாமந்தி ஒட்டிக் கொண்டிருக்கும்.

கடல் சாமந்தியின் உடம்பு மூன்று பகுதிகளாகப் பிரிந்திருக்கும். அடிப்பகுதி பாறைகளின் மீது ஒட்டியிருக்கும். இதன் மேல் உள்ள பகுதியே இவற்றின் வாய் ஆகும். இதன் உட்புறத்தில் தடித்த மயிர்த்தொகுதிகள் சுற்றி உள்ளன. இவற்றுக்குப் பற்றுக் கொம்புகள் என்று பெயர். இவை அடுக்கடுக்காக வட்டமாக வளர்ந்திருக்கும்.

பற்றுக் கொம்புகளில் நஞ்சு உள்ளது. கடல் சாமந்தியின் வாயில் ஏதேனும் மீன் மாட்டிக்கொண்டால் இப்பற்றுக் கொம்புகள் அதைக் கொட்டும். நஞ்சு ஏறி மீன் மயங்கிவிடும். உடனே பற்றுக் கொம்புகள் வாய்க்குள் மீனைத் தள்ளி தாமும் சுருங்கிவிடும். இவ்விதம் மீனை உண்டு, அதன் முட்களை தன் வாயின் வழியே வெளியேற்றி விடும்.

## விடுகதைகளும் விடைகளும்

1. குலுக்கு மினுக்குக்காரி:
கொஞ்சும் மணத்துக்காரி:
மங்கையர் தலையில் ஏறி
மகிழ்ந்திருக்கும் வெள்ளைக்காரி!
அது என்ன?

2. தெய்வ சன்னதி வாசமுண்டு;
தெருவில் சத்தம் கேட்பதுண்டு;
நடுக்கடலில் பிறப்பதுண்டு;
நல்லது கெட்டது சொல்வதுண்டு!
அது என்ன?

3. அடிதடிச் சண்டை போல் சத்தம் வரும்;
அரும்பரும்பாய் முத்துதிரும்;
அதிகமானால் எல்லாம் அடித்துச் செல்லும்!
அது என்ன?

4. இரவு பகல் விழித்திருக்கும்;
எப்போதும் ஒலித்திருக்கும்!
அது என்ன?

5. அகலமான பச்சிலை;
அருமருந்து மூலிகை;
உயர் மரத்துக்காய் சேர்த்து
உயர்ந்த வெள்ளை சேர்த்தால்,
கருஞ்சிவப்பு நிறமாகும்!
கண்டு சொல்வீர்!
என்ன அது?

6. கடற்கரையில் பாத்தி கட்டி
கடல் நீரைப் பாய்ச்சி விட்டால்
காயும் வெய்யில் நீர்குடிக்க
கனிந்து பூக்கும் வெள்ளைப்பூ
அது என்ன?

### விடைகள்

1. மல்லிகைப்பூ 2. சங்கு
3. அலை 4. கடிகாரம்
5. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு 6. உப்பு

தொகுப்பு: செல்வி ஏ.நஸ்ரின்



படிப்பகம்

www.padippakam.com

**ரா**ஜரத்னம் என்கிற பெயரிலேயே மயங்குகிறாள் ஒரு மாது. ரத்னா கொஞ்சம் பெண்; கொஞ்சம் ஆண்- அர்த்தநாரி, காலேஜ் டிராமாவில் பெண் வேஷம் போட்டிருக்கிறாராம். ஜிப்ஸி, "என் உயரத்துக்கும் வளர்த்திக்கும் ஏற்ப இரண்டு டென்னிஸ் பந்துகளுடன் முதல் காட்சியில் தோன்றினேன். தாங்க முடியாத விஸில். பிரின்ஸிபால் வந்து சென்ஸார் பண்ணிவிட்டார். இரண்டாம் காட்சியில் பூப்பந்துகள்."

**கொளுத்தும் கோடை வெயிலுக்கு இதமான – இளமையான ஜில் ஜில் தொடர் இது! சுஜாதாவின் தொடர்களில் பரபரப்பான தொடர் இது!**

-4-

சந்தேகம்... சந்தேகத்துக்கு ஆதாரம் கிடையாது. கருத்தும் Instinct (இயல் புணர்வு)-ம் சொல்கிறது. பாத்ரூமுக்குள் என்னை அறியாமல் என் உடம்பு கூசுகிறது. பாடியவாறு உடம்பில் சோப் தேய்த்துக் கொண்டே இருக்கிறேன். திடீர் என்று மயிர்க்கால்களில் எல்லாம் உணர்கிறேன். யாரோ என்னைப் பார்க்கிறார்கள். எங்கிருந்து? எப்படி? பாத்ரூம் கதவுக்குச் சாவி ஓட்டை எதுவும் கிடையாது. மேலே வெண்டிலெட்டர் ஜன்னல் கண்ணாடிகள் எல்லாம் பால் வெள்ளை. இருந்தும்.... இருந்தும்....

-5-

அம்மாவிடமிருந்து கடிதம். 'பிரிய முள்ள யத்து' என்ற வார்த்தைகளைப் பார்த்ததுமே ஸில்லியாக அழுகை வந்தது. யத்து என்ற செல்லப் பெயரைக் கேட்டு எத்தனை நாளாகிவிட்டது! (அப்பா 'எத்தூ' என்று ஊகாரம் சேர்த்துக் கொள்ளுவார். சாரங் 'எத்ஸ்' என்பான், விஜி 'எத்தம்மா' என்பாள். அம்மாதான் 'யத்து' என்று சரியான வல்லின அழுத்தத்தில் கூப்பிடுவாள்) என்னிடமிருந்து கடிதமே இல்லையாம். அடிப்பாவி, எத்தனை லெட்டர் எழுதியிருக்கிறேன்? எல்லாவற்றையும் யார் சாப்பிட்டார்கள்.....? பசுமாடு கன்று போட்டுவிட்டதாம்- அம்மாவைப் பொறுத்தவரை பெண்களே கன்று போலத்தான். விஜிக்கு இப்போது நான்காவது மாசமாம். என் கல்யாணத்திற்குப் பிற்பாடு உடனே அழைத்துக் கொண்டு சென்று விட்டார்களாம். விஜிக்குப் பரவாயில்லை. மச்சினர்கள் எல்லாரும் தாங்கு தாங்கு என்று தாங்குவார்கள். எனக்கும் ஏதும் விசேஷம் உண்டா? இரண்டு மாசத்திலா அம்மா! என்ன விளையாடுகிறாயா? Pressure Cooker are a heart. நான் அனுப்பி வைத்த மாகாளிக் கிழங்கு அரிசி அப்பளம், மாங்காய் எல்லாம், வந்து சேர்ந்திருக்கும் என எண்ணுகிறேன்.

மாகாளியா! அப்பளமா! மாங்காயா! சரஸுவைக் கேட்டேன். "ஏதோ ஒருநாள் பார்ஸல் வந்தது. யாரோ காரியஸ்தன் கொண்டு வந்து கொடுத்தான். இந்த வீட்டிலே இல்லாத வடுமாங்காயா என்ன?"

எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

-6-

சந்தேகம் நம்பர் இரண்டு. அந்த லெட்டர் பிரிக்கப்பட்டு, படிக்கப்பட்டு, ஒட்டப்பட்டிருக்கிறது. ஒட்டின ஓரத்தைப் பார்த்தால் தெரிகிறது. எனவே இங்கிருந்து போகிற லெட்டரும் சென்ஸார் ஆகிறது என்பதை எதிர்பார்க்கலாம்.

எனவே என் அடுத்த கடிதத்தை இப்படி ஆரம்பிக்கப்போகிறேன்!

"அன்புள்ள அம்மாவுக்கு, நான் இந்த கடிதத்தை எழுதுகிற தேதி இது.... கடிதம் உனக்கு வந்து சேருகிற தேதியை எனக்கு எழுதவும். கடிதம் வந்து சேரவில்லை என்றாலும் உடனே தெரியப்படுத்தவும்."

'Gayatri the Brilliant' (காயத்ரி கெட்டிக்காரி)

-7-

பாத்ரூம் மர்மம் அவிழ்ந்துவிட்டது. பாத்ரூம் பக்கத்தில் ஒரு சின்ன இடம் இருக்கிறது. அழுக்குக்கூடை, கண்டா, முண்டா சாமான்களுக்காக. நான் பாத்ரூமுக்குள் நுழைந்து ஷவரைத் திறந்து விட்டுச் சளபுள என்று சப்தமிட்டு விட்டுப் பாடிவிட்டு- ஒரு திருகாணி கழற்றவில்லை மெல்ல வெளியே வந்து கதவைச் சாத்திவிட்டு அந்த இடத்தில் வந்து ஒளிந்து கொண்டு விட்டேன். இரண்டே நிமிஷத்தில் யார் வருகிறார்கள்?

சரஸு!

மெல்ல வந்து கதவை நெருங்கி அதன் நடு மையத்தில் விரலால் தேடுகிறாள். அவள் தொட்டதில் கதவு திறந்து கொள்கிறது. திடுக்கிடுகிறாள்.

கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொள்கிறேன். "காயத்ரி! காயத்ரி! உள்ளே இருக்கிறாயா?" என்று கேட்டுவிட்டு வேகமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறுகிறாள்.

கதவின் நடு மையத்தில் கூர்ந்து பார்த்தால்...ஒரே ஓர் இடத்தில் சின்னச் சதுரமாகக் கோடு தெரிகிறது. அதை விரலால் தொட்டால் அந்த அளவுக்குக் கட்டை பெயர்ந்து கையோடு வருகிறது. ஒரு துவாரம் தெரிகிறது. சின்னத் துவாரம். இங்கிருந்து பார்ப்பவர்களை அங்கிருந்து பார்க்க முடியாது. This house is full of surprises. (வியப்பூட்டுவதாக உள்ளது இந்த வீடு) ரத்னாவிடம் காட்டவேண்டும்.

-8-

சாமிநாத அய்யர் பரிமாற நானும் சரஸுவும் மௌனமாகச் சாப்பிடுகிறோம்.

"அய்யர்" என்கிறேன்.

"என்னம்மா?"

"தச்சன் யாரையாவது வரச் சொல்லுங்க."

"சரியம்மா."

"பாத்ரூம் கதவிலே ஓட்டை இருக்கிறது. அடைக்கணும்."

"சரியம்மா, வரச் சொல்கிறேன். முத்து கிட்டே சொல்கிறேன்."

"ஓட்டை வழியாக ஜனங்கள் வேடிக்கை பார்க்கிறது, அய்யர்!"

சரஸுவிடம் மாறுதல் இல்லை. "அப்படியா?"

சாமிநாத அய்யர் ஒரு ஜடம். விளக்கெண்ணெய் விழுங்கி. சமையல் நன்றாக இருக்கிறது என்றாலும், காலடியில் பாம்பு என்றாலும் ஒரே எக்ஸ்பிரஷன்தான்.

"சில பேருக்கு இதில் எல்லாம் ஓர் ஆசை அய்யர்!"

சரஸு என்னை நிமிர்ந்து பார்த்துச் சிரித்து: "பச்சடி சாப்பிடு. நன்றாக இருக்கிறது."

-9-

ரத்னாவிடம் ராத்திரி எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன். "என்னை அடிக்கடி தொடுகிறாள். பாத்ரூமில் எட்டிப் பார்க்கிறாள். எனக்கு வரும் கடிதத்தைப் படிக்கிறாள். நான் எழுதும் கடிதத்தைப் படிக்கிறாள்." நான் கொஞ்சம் பயந்து கொண்டேதான் இதைச் சொன்னேன். ரத்னா நிதானமாகக் கேட்டுவிட்டு. அந்தப் பொல்லாத புன்னகையுடன் என் தலையைத் தடவிக் கொடுத்து, "காயத்ரி! You silly fool. நீ ஓர் அழகான முட்டாள்." என்கிறார். என்னைப் பிடித்து இழுத்து என்னை மார்போடு அணைத்துக்கொள்ள முயற்சி பண்ணுகிறார். ஒரே தள்ளு! "காயத்ரி! யோசித்துப் பார். உனக்கு நிறைய Imagination (கற்பனை) இருக்கிறது. ஆனால் அது வக்கிரமாக சைடு அடிக்கிறது. பாத்ரூம் கதவில் அந்த ஓட்டையை நான்தான் வைத்தேன். பத்திரத்திற்காக. உள்ளே கெய்சர், அது, இது என்று எலக்ட்ரிக்கல் சாமான்கள் நிறைய இருக்கின்றன. ஏதாவது உள்ளே விபத்து நிகழ்வதால், ஒன்று கிடக்க ஒன்று நடந்து விட்டால் உள்ளே பார்க்க- கூப்பிடவே அந்த துவாரம்! இது எனக்கும் சரஸுக்கும் மட்டும்தான் தெரியும். உன்னிடம் சொல்ல வேண்டும் என்றிருந்தேன். உன் லெட்டர்களை ஒருவரும் பிரித்துப் பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு அதற்கெல்லாம் அவகாசம் கிடையாது. உங்கள் வீட்டிலேயே பழைய கவர் ஏதாவது இருந்திருக்கும். அது சரியாக ஒட்டவில்லை என்று சோற்றுப் பசை போட்டு ஒட்டியிருப்பார்கள். அதைப்போய் நீ சரஸுவோ யாரோ பிரித்துப் படித்து ஒட்டியிருக்கிறார்கள் என்று நினைத்திருக்கிறாய்! உன் அம்மாவுக்கு வேண்டுமானால் எழுதிக்கேள். உனக்குச் சந்தேகம் இருந்தால் நீ எழுதும் லெட்டர்களை உன் கைப்படத் தபால் பெட்டியில் போடு. யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. Don't imagine things. (எதையும் கற்பனை பண்ணாதே) நாங்கள் எல்லாம் கொஞ்சம் பெரிய இடம். இந்த மாதிரி கூட எண்ணிப் பார்க்க மாட்டோம். சரஸு உன்னைத் தொட்டால் அது வாஞ்சையினால், வாத்ஸல்யத்தினால் இருக்கும். இப்போது சமாதானமாயிற்றா?"

அப்போது ரத்னா செய்த காரியம் என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது. (கொஞ்சம் விசனமும் கூட) "சரஸு சரஸு" என்று அவளையே கூப்பிடுகிறார். அவள் நைட் கவுன் சகிதம் கிளம்பி வருகிறாள்.

"காயத்ரி என்னமோ சந்தேகப்படுகிறாள். அவள் லெட்டரை நீ படிக்கிறாயாம். பாத்ரூமில் எட்டிப் பார்க்கிறாயாம். ஃபன்னியாக இல்லை?" சரஸு என்னை இரக்கத்துடன் பார்த்து. "காயத்ரி, சின்னவள். புதிதாக கல்யாணமானவள். அப்பா, அம்மாவை விட்டுத் தனியாக வந்த ஒரு பெண்ணின் மனது பெண்ணுக்குத்தான் தெரியும். காயத்ரி குழந்தை. அவளுக்கு என்ன தெரியும்? காயத்ரி மேல் எனக்குக் கோபம் இல்லை." etc etc all. crot பொன் மொழிகள். இரண்டு பேரும் சேர்ந்து என்னை அற்பமாகப் பண்ணிவிட்டார்கள். ஒரு வாரம். Sulk (ஊடல்) பண்ணப் போகிறேன்.

பின்னிரவில் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தவளைப் பலாத்காரமாகப் பிடித்து இழுத்தார். "I am not in a mood" (நான் இப்போது தயாரான நிலையில் இல்லை) என்றேன். கேட்கவில்லை. நான் எதிர்த்தேன். "ரத்னா, நான் ஊருக்குப் போக வேண்டும்!" என்றேன்.

"என்ன? வந்து மூன்று மாதம்கூட ஆகவில்லை!"

"இரண்டு நாள் இருந்துவிட்டு வந்து விடுகிறேன், ஒரு மாறுதலுக்கு."

"காலை அதைப்பற்றிப் பேசலாம்?"

"இல்லே. இப்பவே பேசலாம்."

"ஓகே. இரண்டு நாள்தானே எப்ப போகணும்?"

"பிராமிஸ்! பிராமிஸ் பிராமிஸ் பண்ணினால்தான்!"

"டிக்கெட்டை வாங்கிக் கையில் கொடுத்தால் தான் மேலே கை வைக்கவிடுவாய் போலிருக்கிறதே?"

"ஆமாம்." என்றேன்.

ஒரு வாரம். டிக்கெட் வரவில்லை. ஒரு வாரம் நான் சரஸுவுடன் பேசவே இல்லை. என்னைப் பார்த்துச் சிரிப்பாள். நான் பதிலுக்குச் சிரிக்க மாட்டேன். அய்யர் வழியாக அல்லது அந்தப் பெண் வழியாகத்தான் பேச்சு எல்லாம். Gayatri the Stubborn. (காயத்ரி பிடிவாதக்காரி) இந்த நோட்டுப் புத்தகத்தைத் திருப்பிப் பார்த்தால், சரஸுவைப் பற்றித்தான் நிறைய எழுதியிருக்கிறேன். தேவையில்லை அவளை முழுதும் நிராகரித்துவிடப் போகிறேன். அவள் யார்? நான் யார்? அவள் இந்த வீட்டில் ஒண்ட வந்தவள். நான் இந்த வீட்டு எஜமானி. அவள் கைம்பெண்! 'வீட்டை விட்டுப் போடி' என்று சொல்ல எத்தனை நேரமாகும்?

அம்மாவுக்குப் பெரிசாக ஒரு லெட்டர் எழுதினேன். சரஸுவைப் பற்றி எல்லா விவரங்களும் கொடுத்து எழுதிக் கிழித்தெறிந்தேன். அம்மா ஏதாவது பிசகாக எடுத்துக் கொள்வாள். இந்த சரஸுவைத் தனியாகச் சமாளிக்க எனக்குத் தெரியவில்லையா என்ன? 'சரஸு', ஜாக்கிரதை! காயத்ரியை உனக்குத் தெரியாது. ஊருக்குப் போக வேண்டும் என்கிற ஆசை மறைந்துவிட்டது.

-10-

மறுபடி சரஸு. இந்தத் தடவை சீரியஸ். பேனாவிற்கு மை போட பாட்டிலைத் தேடினேன். இந்திராவைக் கூப்பிட்டேன். பதில் இல்லை. எல்லோரும் எங்கே ஒழிந்துவிட்டார்கள்? மாடிக்குப் போனேன். சரஸுவின் ரூம் பூட்டியிருந்தது. ரூம் வாசலில் ஒரே ஒரு நகை கிடந்தது. சின்னக் காதோலை அது கல் பதித்தது. இது எங்கே இங்கே கிடக்கிறது என்று யோசித்தேன். பக்கத்து ரூமில் சத்தம் கேட்டது.

**சென்றவாரம்**

**பழைய புத்தகக் கடையில் தற்செயலாய் ஒரு நோட்டுப் புத்தகத்தைப் பார்க்கிறார் அந்த எழுத்தாளர். கையெழுத்தில் தன் சொந்தக் கதையை அதில் எழுதியிருக்கிறாள் ஒரு பெண். கதையை படித்து விட்டு தன்னைக் காண அவசியம் வரவும் என எழுதியிருக்கிறாள்; அவள் பெயர் காயத்ரி. ரத்னா என்பவனை திருமணம் செய்கிறாள், ரத்னாவின் சில குணங்கள் புதிராக உள்ளன. ரத்னாவுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறாள்.**

**இனி....**

**அங்கம் 03**

# காயத்ரி

**நவீன எழுத்துலக வேந்தன் — சுஜாதா**



**மூன்று...**

இம்மாதிரி ஒன்று இரண்டு மூன்று என்று அத்தியாயம் பாகுபாடெல்லாம் காயத்ரி செய்தது அல்ல. அந்த நோட்டுப் புத்தகம் தொடர்ந்தேர்ச்சியாக எழுதி இருக்கிறது. அதை நான் பாகுபடுத்தி நம்பர் போட்டுத் தந்திருக்கிறேன்.

காயத்ரியின் புத்தகத்தை இதோ கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அவளைப் பார்க்க பஸ்ஸில் சென்று கொண்டிருக்கிறேன். மறுபடி படித்துக் கொண்டே வருகிறேன். எத்தனை தடவை படித்திருப்பேன்! இருந்தும் இந்தப் பெண்ணின் வினோத வாக்கியங்களின் சுவாரசியம் குறையவில்லை. பக்கத்தில் மல்லிகைப்பூ வாசனை வருகிறது.... பஸ் டிராஃபிக் விளக்குக்காகத் தயங்கி நிற்கிறது. பறை கொட்டி ஜோடித்து உட்கார வைத்த பிண ஊர்வலம் ஒன்றும் பச்சை விளக்குக்காகக் காத்திருக்கிறது. பஸ்ஸே வேடிக்கை பார்க்கிறது. நான் மட்டும் காயத்ரியைப் படித்துக் கொண்டிருக்கிறேன். காயத்ரியைச் சந்திக்கப்போகிறேன். காப்பாற்றப் போகிறேன்....எப்படி என்பது தெரியவில்லை? இதயம் மூன்று செண்டிமீட்டர் வட்டத்திற்குப் பந்தாக உள் நாக்கின் அருகில் வந்து அடைக்கிறது-ஏன்?

நீங்கள் காயத்ரியை முழுவதும் படிக்கவில்லை அல்லவா?

-1-

ரூமுக்குள் அய்யரின் கறுப்புப் பெண் (இந்திரா?) படுக்கையின் மையத்தில் உட்கார்ந்திருக்கிறாள். அய்யர் ஒரு சிகரெட் பிடித்துக் கொண்டு ஓரத்தில் நின்று கொண்டு அசுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருக்க சரஸு தன் நகைகள் எல்லாவற்றையும் கறுப்பிக்கு ஒன்றொன்றாக அணிவித்துக் கொண்டிருக்கிறாள். காட்சி Surrealisic (அடி மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையான) ஆக இருக்கிறது. சப்பணம் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். காதில் பச்சைக் கல்லில் லோலாக்கு மூக்கில் இரண்டு பக்கமும் வைரம். கழுத்தில் இரட்டை வடம் சங்கிலி. காசு மாலை மற்றும் எத்தனை நகைகள்! பணக்கார வீட்டுப் பெண் பரத நாட்டிய அரங்கேற்றம் மாதிரி வங்கி, நாகொத்து, ஓலை, இழை, மோதிரம், கங்கணம்... வஸ்திரங்கள் எதுவும் அணிந்திருக்கவில்லை.

அய்யர் சிகரெட் பிடித்துக்கொண்டு ஒரே சீராகப் பார்த்துக் கொண்டிருக்க-


"சரஸு தொடாதே, சரஸு தொடாதே! குறுகுறு என்கிறது."

"எழுந்து நில்லடி" என்றாள் சரஸு. குரலில் அதட்டலுடன்.


"வேண்டாம் சரஸு வெட்கமாக இருக்கிறது." என்றாள்.

**(தொடர்ந்து வரும்)**

**அரங்கம்**



பெயர்: ஜி.கோபால்.
வயது: 28
முகவரி: ஸ்ரான்டன் குறூப், ஈஸ்ட்டேர்ன் டிவிஷன், ஹட்டன்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.




பெயர்: ஏ.சபூர்.
வயது: 19
முகவரி: பீ.கே.வீதி, மாவடி ஓழுங்கை, ஏறாவூர்-4.
பொழுதுபோக்கு: வானொலி, நண்பர் தொடர்பு.



பெயர்: ஏ.ஜெயராஜ்.
வயது: 25
முகவரி: 141#03-1060, TIONGBABRU ROAD, SINGAPORE-150141.
பொழுதுபோக்கு: புகைப்படம் பிடித்தல், முத்திரை சேகரித்தல்.



பெயர்: வி.பிரசன்னா.
வயது: 18
முகவரி: 119, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ்.சம்சுதீன்.
வயது: 25
முகவரி: 122, டாகாபிட்டிய வீதி, மல்லவபிட்டிய, குருநாகல்.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எம்.ஸவாஹிர்.
வயது: 24
முகவரி: P.O.BOX - 50236, RIYADH-11523, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: பி.சஹைர்.
வயது: 19
முகவரி: 245, நீர்கொழும்பு வீதி, இகரகொட்டாரமுல்லை.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: ஆர்.குமார்.
வயது: 23
முகவரி: AFFOLTERN STR-10, 8050 ZURICH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: றொமால் பெர்னாண்டோ.
வயது: 22
முகவரி: 128/8, கொட்டு கொடெல்ல வீதி, கண்டி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ்.சண்முகநாதன்.
வயது: 20
முகவரி: தலவாக்கொல்லை மேற்பிரிவு, தலவாக்கொல்லை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.நைஸர்.
வயது: 19
முகவரி: 26, புதிய வீடு, மனம்பொட, உக்குவளை.
பொழுது போக்கு: வானொலி.

பெயர்: எம்.தாவூத்.
வயது: 20
முகவரி: பதுறியா நகர், மீராவோடை-5, வாழைச்சேனை.
பொழுது போக்கு: கரப்பந்து, நண்பர் தொடர்பு.



படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தின் புதுமை எழுத்தாளர் பிரபஞ்சன் படைத்த சிறந்த கதைகளில் ஒரு முத்து இது! பெண் என்பவள் வெறும் ஜடமல்ல உணர்ச்சிகள் உள்ள மனுஷி என்பதை உணர்வுபூர்வமாக— அற்புதமான நடையில் தரும் படைப்பு இது!

# கனவு மெய்ப்பட வேண்டும்



பிரபஞ்சன்

புதுமைத் தொடர் அத்தியாயம் 05

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஒருநாள் இரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான்.

பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்து சேர்கிறாள். கணேஷனும் தேடி வருகிறான்.

கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள். உயிர்த் தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. **இனி.....**

முதுகில், பட்டை பட்டையாக அடிபட்ட தழும்பு, தடிப்பாக, கோடு போட்டது மாதிரி இருந்தது.

"என்னடி இது...?"

முதுகைக் காட்டிக் கொண்டு சட்டையை அணிந்து கொண்டிருந்தவள், "எது?" என்றாள்.

"முதுகில் இது, என்ன தழும்பு?"

"ப்ச்... அதுவா? இல்லறம் என்கிற சண்டையில், நான் பெற்ற வீரத்தழும்பு."

"உஸ்... விளையாடாதே, என்ன அது சொல்?"

அணிந்து பட்டனையும் போட்டுக் கொண்டு திரும்பினவள், சொன்னாள்: "அவருக்குக் கோபம் வரும்போது, உருட்டுக் கட்டையால் அடிப்பார். அந்தத் தழும்புதான் அது. உருட்டுக் கட்டை தெரியுமா! பொலிஸ்காரன் கையில் இருக்கிற லத்தி மாதிரி! அதைவிடக் கொஞ்சம் சிறிது. முதுகில் மட்டும்தான் நீ பார்த்தாய். என் உடம்பு பூராவும் இந்தத் தழும்பு. இந்தத் தழும்பு இருக்கிறதே, மார்பில், தொடையில், எல்லா இடத்திலும்..."

பல நிமிஷங்களுக்குப் பிறகு கல்பனா சொன்னாள்:

"தேடித் தேடி இப்படி ஒருத்தனை எப்படியடி பிடித்தாய்?" என்றாள், ஆழ்ந்த வருத்தத்தோடு.

"பிடிப்பது என்ன... இவன் தான் எனக்குன்னு எழுதிவைக்கப்பட்டிருந்ததே, அதை மாற்றி எப்படி எழுதுவது?"

முதலில் அவர்கள் வங்கிக்குச் சென்றார்கள். ஐயாயிரம் ரூபாய் எடுத்துக் கொண்டாள் கல்பனா.

"இத்தனை ரூபாய் எதுக்குடி?"

"சும்மா இரு. தேவைப்படும்."

"இன்னும் கையில் ரெண்டு வளையலும், தாலியும் இருக்கிறது. வளையல், இரண்டு பவுன் தாலியையும் சேர்த்தால், இப்போதைய விலைக்குப் பதினையாயிரம் கிடைக்கும். எல்லாவற்றையும் விற்றுத் திருப்பி அடைத்து விடுகிறேன்."

"சும்மா இருடின்னா. முட்டாள் தனமாப் பேசாதே. தாலியை எதுக்கு விக்கறது? அப்படியே வச்சிருந்து உன் மகளுக்குப் போடு. வளையலையும் கழற்றாதே. ஏதாவது அத்தியாவசியமான செலவுக்கு உனக்கு அது உதவும். எனக்குத் திருப்பிக் கொடுப்பதைப் பற்றி நீ யோசிக்க வேண்டாம். நான் உனக்குக் கொடுப்பது கடன் அல்ல. என்னிடம் இருக்கு, அதனால் கொடுக்கிறேன். உன்னிடமும் இருந்து, எனக்குத் தேவைப் பட்டால், நீ கொடுக்க மாட்டாயா, என்ன? கடன் என்று இன்னொரு முறை நினைக்காதே."

சுமதி தன் கையை, கல்பனாவின் கையுடன் இணைத்துக் கொண்டாள்.

"என்ன கேட்டாய் கல்பனா? போயும் போயும் இவனை எங்கே பிடித்தாய் என்றா? இந்த ஜனக் கூட்டத்தில் தானேடி பிடித்தேன். நல்லவர்க்கும் கயவர்க்கும் உருவமாத்திரத்தில் என்ன வேற்றுமையை இயற்கை வைத்துள்ளது? அப்பா அடிக்கடி சொல்வாரே, 'மக்களே போல்வர் கயவர்' என்று, அதுவல்லவா பலித்து விட்டது! நல்லவர்களைப் போல் அல்லவா கயவர்களும் இருக்கிறார்கள். நல்லெண்ணெய்க்கும், தேங்காய் எண்ணெய்க்கும் சான்றளித்து, முத்திரை குத்த ஐ.எஸ்.ஐ. நிறுவனம் உள்ளதே, அது போன்று நல்லவர்களை தெரிந்தெடுத்துச் சொல்ல ஒரு நிறுவனம் இருந்தால், எத்தனை பெண்கள் நல்ல வாழ்வு பெற்று உயர்ந்திருப்பார்கள்?

அடி! கல்பனா! நீ அறியாததா? அன்று, கல்வித் துறையில், நான் பணியாற்றிய போது, ஏதோ ஒரு கல்லூரியில் நிகழ்ந்த முத்தமிழ் விழாவுக்குத் தலைமை ஏற்று பரிசளிக்கும் பொறுப்பை நான் ஏற்று, அந்தக் கல்லூரிக்குள் அடி எடுத்து வைக்கும் நேரம், எனக்கென்று ஒரு கூண்டைச் செய்து வைத்துக்கொண்டு ஒருவன் காத்திருப்பான் என்று நான் அறிவேனா?

"தணிகாசலம் வாத்தியார் மகள்தானே நீங்கள்?" என்று கணேசன், அடுத்து ஏற்பட்ட ஒரு சந்திப்பின்போது கேட்டதும், நான் திடுக்கிட்டுப் போனேன் கல்பனா. அவர் என் அப்பாவின் மாணவர்களில் ஒருவர் என்று அப்புறம் தெரிந்தது. அப்பா கூட அவரைப் பற்றிச் சொன்னார்: "கணேசன் தானேம்மா? எனக்கு நன்றாகத் தெரியும். கிராமத்துப் பையன். ஒருமுறை, பள்ளிக் கூடத்தில் இருந்து நின்று போய், அப்பாவுக்குத் துணையாகக் கூலி வேலை செய்யப் போய் விட்ட அவனை, அவன் அப்பாவிடம் போய்ப் பேசி, மன்றாடி அழைத்து வந்து மீண்டும் பள்ளிக் கூடத்தில் சேர்த்திருக்கிறேன். அவன், என்ன பேராசிரியராகவா இருக்கிறான்? ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது கேட்கவே. மீண்டும் நீ அவனைப் பார்த்தாயானால், நான் மிகவும் கேட்டதாகச் சொல். என் வாழ்த்தைச் சொன்னதாகச் சொல்."

கல்பனா! எப்படிச் சொல்ல?

ஆணின் சமீபம் என்பது எனக்கு அரிதானதாய் இருந்தது. உடம்பு என்கிற ஒன்று கூடக்கூட வரும்போது அதை நான் தான் தவிர்ப்பது எங்ஙனம்? மாலையானால், கணேசன் என் அலுவலகம் வருவது என்பது வாடிக்கையானது. 'மாலை மலரும் இந்நோய்' என்று அப்பா திருக்குறள் சொல்லிக் கொடுத்தாரே, அது எவ்வளவு உண்மை! மனசைக் குழப்பிக் கொண்டு உறக்கத்தைக் கெடுத்துக் கொண்டு, நான் ஒரு முடிவுக்கும் வந்துவிட்டேன். எனக்கு ஒரு விடை கிடைத்தது. அதை கணேசனிடம் சொல்ல அவரை எதிர்பார்த்தேன்.

அன்று தொடங்கி நான்கு நாட்கள் அவர் வரவில்லை: செய்தி மட்டுமே வந்தது. ஏதோ ஒரு தனியார் மருத்துவமனையில் கணேசன் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்கிற செய்திதான் அது!

* * *

ஊருக்குள்ளே பெரிய துணிக்கடைக்கு அவர்கள் சென்றார்கள்.

"வாங்கம்மா? எங்கே கொஞ்சம் நாளாய் கடைப்பக்கமே உங்களைக் காணலை," என்று கும்பிட்டபடி கல்பனாவை வரவேற்றார் கடைக்காரர்.

"அதுதான் வந்துட்டேனே! அரிசி பருப்பு வாங்குகிற கடைமாதிரி அடிக்கடி வந்து இங்கே துணி வாங்க முடியுமா சொல்லுங்கள்!" என்றாள் கல்பனா, அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

"அது உள்ளது" என்றவர், அவர்களைப் புடவைகள் வைத்திருக்கும் பக்கமாய் அழைத்துச் சென்றார்.

"அம்மாவுக்குத் துணி எடுத்துப் போடுடா" என்றார் அங்கிருந்த ஓர் இளைஞனிடம்.

துணிகள்தான் எத்தனை வகைகள்? எத்தனை வண்ணங்கள்? எத்தனை திறுசுகள்? உடலை மறைப்பது என்பதற்குத் துணை செய்ய வந்த ஆடை, நாகரிகச் சின்னமாக, அழகின் எடுத்துக்காட்டாக, கவர்ச்சிக்குக் கருவியாக, எப்படியெல்லாம் பரிணாமம் பெற்றுவிட்டது!

"அம்மாவுக்கு ஏற்றாற் போலத்தானே அவங்களுக்கும்?"

"ஆமா" என்றவள், தானே சுமதிக்காகத் தெரிவு செய்யத் தொடங்கினாள். கல்பனாவுக்கு அழுத்தமான வர்ணங்களில் ஆடை அணிவது பிடிப்பதில்லை. அவள் மாநிறத்தவள். ஆகவே, சற்றே வெளிர் நிற ஆடைகளே தனக்கு உகந்தது என்பாள். தவிரவும், உடம்பு தெரிகிற மெல்லிய புடவை அணிவதும் அவளுக்குப் பிடிப்பதில்லை.

ஆடை உடலையும் மறைத்து, அழகுக்கு அழகும் செய்வதே அல்லவா?

சுமதியோ கோதுமை நிறத்தவள். அந் நிறம் கொண்ட பெண்கள் அழுத்தமான வண்ணங்களில் அணியலாம். கல்பனா ஆறு புடவைகள் எடுத்துவைத்தாள். வீட்டுக்குள் கட்டிக் கொள்வதற்கு மூன்று. அவைகளுக்கேற்ற ஜாக்கெட் துணிகள், மற்றும் தேவையான உள்ளாடைகள், இரவு கவுன் ஒன்று. "போதும்டி, போதும்டி" என்று சுமதி கெஞ்சக் கெஞ்ச, கல்பனா துணிகளை எடுத்து அடுக்கினாள். அப்புறம், பல் துலக்கும் பிரஷ், பற்பசை, சுமதிக்கென்று அவள் எப்பவும் விரும்பிப் பயன்படுத்தும் சந்தனச் சோப்பு; பவுடர்.

"கண்மையை மறந்துட்டோமே..." என்று திடீரென்று நினைத்துக் கொண்டு ஒரு ஷாப்புக்குள் நுழைந்தார்கள். கண்மை, நெற்றிப் பொட்டு, தலை வாரிக் கட்ட ரப்பர் பேண்ட், கைக்குட்டை....

மனிதத் தேவைகள்தான் எத்தனை?

"ஏண்டி சுமி, லிப்ஸ்டிக்கை மறந்துட்டமே."

"போடி இவளே. எனக்கு உதட்டுச் சாயம் ஒன்று தான் குறை."

வீட்டிக்கு வந்து, உறைகளைப் பிரித்து, புடவைகளைத் தன் பீரோவுக்குள் அடுக்கத் தொடங்கினாள் கல்பனா.

"சுமி.. இது உன்னுடைய பீரோ. எப்போது வேண்டுமானாலும் இதைத் திறந்து நீ பயன்படுத்திக் கொள்ளலாம்."

"கல்பு... ஒரு விஷயம்."

"என்ன தயக்கம். சும்மா சொல்லு..."

"இந்தப் புதுப் புடவைகளில் ஒன்றை, நான் ஒருவருக்குக் கொடுக்க நீ அனுமதிக்கணும்...."

"இதெல்லாம் உனக்குத் தாண்டி. நீ யாருக்கு வேணும்னாலும் கொடு. நான் என்ன கேட்கப்போறேன்?"

"நான் நிர்வாணமாக நின்றபோது, எனக்கு ஆடைகொடுத்து உதவிச்சே, அந்தப் பங்கஜம் மாமி, அதுக்கு ஒரு புதுப் புடவையும் ரவிக்கையும் அனுப்பி வைக்கப் போறேன்..."

சுமதியிடம் கல்பனா நெருக்கமாக, வந்து, அவள் மோவாயைப் பற்றி, "உன் நல்ல மனசுக்கு, இந்த மாதிரி கஷ்டமெல்லாம் வரக்கூடாதடி; இனி உனக்கு ஒரு குறையும் வராது" என்றாள்.

வளர்ந்த நிலா, ஆகாயத்தில் நாற்காலி போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த இரவு நேரம். மொட்டை மாடியில் இருவரும் படுக்கையைப் போட்டுக் கொண்டு படுத்திருந்தார்கள்.

"கல்பு. தூங்கிட்டையா?"

"இல்லே."

"எனக்குத் தூக்கம் வரல்லை."

"புரியுது.. எதையும் மனசுக்குள்ளே வச்சுப் புழுங்காதே. இனி நடக்கிறது எல்லாம் சரியா நடக்கும்னு நம்பு."

"கல்பனா.!"

"என்னடி?"

"இந்த மாதிரி விச்ராந்தியா, ஆகாயத்தைப் பார்த்துக்கிட்டு, நிலாவைப் பார்த்துக்கிட்டு நட்சத்திரங்களைப் பார்த்துக்கிட்டு, படுத்து எத்தனை வருஷமாவுது...? அப்பப்பா...! எப்போ படுக்கையில் விழுந்தாலும், ஒரு பயம் வயிற்றைக் கலக்குகிற அச்சம். எப்போ அந்த முரட்டுக்கை என் மேலே விழப்போகுதுன்னு அஞ்சி அஞ்சிக் காத்திருக்கிற தவிப்பு! விழுந்தால் ஏதோ கள்ளக் காதலர்கள் சோரம்போற மாதிரி, அவசரம் அவசரமா கதவை உடைச்சுக்கிட்டு உள்ளே நுழைகிற அவசரம். கரப்பான் பூச்சியை அடிச்சு, வெளியேதூக்கிப் போட்டுட்டு, அப்பாடான்னு உட்காருகிற சல்லித்தனமான களைப்பு. அன்பா ஒரு வார்த்தை உண்டா? ஆதரவா ஒரு தொடுதல் உண்டா? மனசைப் போய் தொட்டு வருடற மாதிரி ஒரு முத்தம் தான் உண்டா? ஒரு கற்பழிப்பு மாதிரிதான் கணேசன் என்கிட்டே நடந்துக்கிட்டார். நித்தம் நித்தம் கணவனே செய்கிற கற்பழிப்பு... அப்படிச் சொல்லக்கூடாது. பலாத்காரம். அது, கல்யாணத்துக்கு முந்தி நடந்தா என்ன? பிந்தி நடந்தா என்ன? மனசுக்குள்ளே ஊற்று சுரக்காமே, கல்லைப் பிளக்கிற முரட்டுத் தனத்துக்குப் புருஷன் பெண்டாட்டி உறவுன்னா பெயர்?"

ஏதோ ஒரு பெயர் தெரியாத பறவை, இருட்டில் கத்திக்கொண்டு அவர்களின் மேல் பறந்து சென்றது.

சுமதியின் இதயம் துடித்தது... வேகம் உற்றது. உடனே கணேசனைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. அவசரச் சொந்த வேலை இருப்பதாகச் சகாவிடம் சொல்லி விட்டு, மருத்துவமனைக்கு விரைந்தாள்.

மிகப் பெரிய, புகழ்கொண்ட மருத்துவமனை அது. தனி அறையில் கணேசன் இருந்தான். உறுமிக் கொண்டிருந்த குளிர் இயந்திரம் தவிர, வெகு நிசப்தத்தில் இருந்தது அந்த அறை. இந்த மாதிரி இடங்களுக்கே உரிய, மருந்து வாசனை இல்லாத மருத்துவ மனையாய் இருந்தது சுமதிக்குப் பிடித்திருந்தது.

கணேசன் பாதி உடம்பாய் இளைத்துப் போயிருந்தான்.

**(தொடர்ந்து வரும்)**

# உள்ளம் உணர்ந்த போது.....

ஷர்மிளா இஸ்மாயில்

"ஆமா! அதை நான் உன்கிட்ட சொல்லி நீ சந்தேகப்பட்டு... ஏன் அவஸ்த்தை?"

"அது யாரு?" குரலில் ஆர்வமா, அங்கலாய்ப்பா, அவஸ்த்தையா, எரிச்சலா எனப் புரியாத வகையில் கேட்டாள் ஸஹானா. ரகு நிமிர்ந்து, சிரித்தான்.

"எனக்கு நீண்ட நாளா பழக்கமான பொண்ணு. பெயர் கண்மணி." ஸஹானா முகம் சுழித்தாள். "பழக்கம்னா... எப்படி பழக்கம்? அதுவும் உங்களை தட்டிப் பேசிச் சிரிக்கற அளவுக்கு.. நீங்களும் ரொம்பத்தான் வழிஞ்சீங்க... எனக்குப் பிடிக்கல- கொஞ்சங்கூட..."

ரகுவின் சிரிப்பு மறைந்தது. முகம் சீரியஸானது. "என்ன இது ஸஹானா? சின்னப் பிள்ளை மாதிரி. அது அவவின் சுபாவம். யாரோடயும் நல்லா, கதைச்சு சிரிப்பா. அது மாதிரித்தான் என்னோடும். நீ வேறு இத தப்பா எடுத்துக் கொண்டியே? என்னை நீ புரிஞ்சிக்கிட்டது இவ்வளவுதானா?" கேட்டான். கேள்வியில் அடிபட்ட மனதின் வேதனையிருந்தது.

ஸஹானா கடுப்பானாள். "ஆமா, ஆமா. அவ கலகலன்னு வழிஞ்சி வழிஞ்சி பேசிச் சிரிப்பா, பழகுவா நான் மட்டும் 'உம்'முனு உம்மனா மூஞ்சி. அப்படித் தானே? என்ன இருந்தாலும் நீங்களும் அந்த ஆண் வர்க்கம் தானே! பொம்பளைங்க கொஞ்சம் சிரிச்சப் பேசிட்டாப் போச்சி. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நல்லா கொஞ்சிக் குலாவ வேண்டியது தான். என் கண்முன்னாலேயே இப்படி! கண் காணாத இடத்துல எப்படியோ?"

ரகுவுக்கு கோபம் வந்தது. "இங்க பாரு ஸஹானா. இப்ப எதுக்கு என்னைப் போட்டு வாட்டுறே? அவள்தானே தொட்டுப் பேசினாள். நானா தொட்டுப் பேசினேன்? என்னையும் சபல புத்தி வர்க்கத்துல சேர்த்துட்ட இல்ல? பரவாயில்லை. என்னைக்காவது உண்மையப் புரிஞ்சுக்காமப் போய்டுவியா? பரவாயில்ல." ஸஹானா பேசவில்லை.

வீட்டுக்கு வந்ததும் 'படா'ரென அறைக் கதவைச் சாத்திக் கொண்டு படுத்துவிட்டான் ரகு. அத்தனை கோபம் அவன் மனதில். 'என்னைப் போய் சந்தேகித்துவிட்டாளே! எத்தனை சந்தர்ப்பங்கள்: எத்தனை வாய்ப்புகள்; தானாக வந்து மேலில்விழும் பெண்கள்; பணத்துக்காக வரும் பாவைகள்; அழகினைக் கண்டு அழைக்காமல் வந்த ஆரணங்குகள். ஒதுக்கினேனே! எல்லாரையுமே ஒதுக்கி, மனதால் கூட இவளுக்கு துரோகம் நினைக்காத என்னை சந்தேகித்து விட்டாளே!' ஒரு நிமிஷம்- அந்த ஒரு நிமிஷத்தில் அவனுக்கு வாழ்க்கையே வெறுத்துப்போனது.

அடுத்து வந்த நாட்களில் ஸஹானா- ரகுவின் முரண்பாடுகள் முகம் காட்டவில்லை. மனதில் வருத்தம். வெளிக் காட்டாது மறைத்து வைத்தான் ரகு. மனதில் புள்ளியிட்ட சந்தேகம் நாள் தோறும் தொடரவிடாது மறந்து போனாள் ஸஹானா.



"இன்னைக்கு கண்மணியைக் கண்டேன் டவுனில். உங்களை ரொம்ப விசாரிச்சதா சொல்லச் சொன்னா." எங்கோ பார்த்தபடி சொன்னாள் ஸஹானா. ரகு பேசவில்லை. "போன வாரம் அவளோட அக்காக்கு கல்யாணமாமே. என்னையும் சேர்த்து வரச்சொல்லி உங்ககிட்ட சொன்னாளாமே. ஏன் நீங்க என்கிட்ட சொல்லலை?..." குரோதமாய்க் கேட்டாள்.

"ஆமா. அதை நான் உன்கிட்ட சொல்லி.. நீ சந்தேகப்பட்டு.. எதுக்கு அவஸ்த்தை..? அதுமட்டுமல்ல சொன்னதும் நீ வந்திடத் தான் போற..? அது தான்." ஸஹானா கோபித்தாள். "ஓ.. இனி நானும் சேர்ந்து வந்தா உங்களுக்கு அந்த கண்மணியோட பேசிச்சிரிக்க, அசடு வழிய சந்தர்ப்பம் கிடைக்காதில்ல? அதுதான், அதே தான்!" கையிலிருந்த பத்திரிகையை வீசிவிட்டு எழுந்தாள். அவள் முகத்தில் கோபச் சிவப்பு.

"இந்தப் புத்தகங்கள் எல்லாம் எங்கால? வாங்கினியா?" ஒரு மாலைப் பொழுதில் மேசையில் கிடந்த நாவல்களை புரட்டியபடி ரகு கேட்டான். "வாங்கல.. பக்கத்து வீட்டு ஜீவன் தந்தது. ரொம்ப நல்ல புக்ஸ். சுஜாதா, ரமணி சந்திரன், அனுராதா ரமணன்..." ஸஹானா சொல்ல ரகு வெட்டினான். "ஜீவன் தந்தானா?" அவன் கண்கள் பளபளத்தன.

"எதுக்காக ஜீவன் உனக்கு புக்ஸ் கொண்டு வந்து தரணும்? எவ்வளவு காலமா இப்படி... பழக்கம் தொடருது? அவனோட பார்வையும் பேச்சும் எனக்கு சுத்தமா பிடிக்காதுன்னு உனக்குத் தெரியுமில்ல? எதுக்காக அவன் கிட்ட நீ புக்ஸ் வாங்கணும்? எனக்குப் பிடிக்கல இது... கொஞ்சங்கூட." குரலில் கோபம் கொப்பளித்தது. அவளுக்கு கண்ணீர் வந்தது. 'சந்தேகிக்கிறாரா?' இதயத்தின் ஆழத்தில் உருவான வேதனை கண்களில் வழிந்தது.

"எ.. என்னைச் சந்தேகிக்கிறீங்களா?" அவள் குரல் தளும்பியது. "கண்மணியை வெச்சி நீ என்னை கன்னா பின்னான்னு சந்தேகிச்சு ஏதோவெல்லாம் பேசலாம். நான் மட்டும் உன்னை சந்தேகப் படக் கூடாதா? உனக்கொரு நீதி எனக்கொரு நீதியா?" அவன் ஆறுதலாகக் கேட்க அவள் தன் தவறை உணர ஆரம்பித்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

# உறவுகள்

பானு

டெலிஃபோன் மணி அடிக்கும் சத்தத்தைக் கேட்டதும் துள்ளி எழுந்தாள் சுபா. இதயம் இரக்கமில்லாமல் இடி இடிப்பதைப் போல் துடித்தது. "சுபாவிற்கு கோல்" என்று அந்த லொட்ஜ் உரிமையாளர் கத்தினார். சுபா நடுங்கும் விரல்களால் ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ.."

"ஹலோ சுபா, வாறகிழமை என்ரை சினேகிதன் ஒருத்தன் கொழும்புக்கு வாறான். அவனோடை கனடா வாறதுக்குரிய ஒழுங்கைச் செய்யும்!" என்று உறுதியாக உரிமையுடன் கூறினான் ஜெயா.

**"அம்மாவை லொட்ஜில் விட்டுப்போட்டு நீர் இஞ்சை வாற ஒழுங்கைப் பாரும்...!"**

"இல்லை ஜெயா, அம்மாவை இந்த நிலைமையில விட்டுட்டு..." மேலே கதைக்கமுடியாமல் மிகுதியை விழுங்கினாள்.

"என்ன சுபா... இப்ப ஒரு மாதமா இதே பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கிறீர்! உடனடியா உம்மடை அக்காவை வரச்சொல்லும்!"

"உடனடியா கனடாவிலிருந்து வரலாம். ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து வரமுடியாது. இப்ப இடம் பெயர்ந்து எங்கை இருக்கினம் என்றே தெரியாது. இப்பதான் அங்கையிருந்து கடிதங்கள் வரத்தொடங்கியிருக்கு. அவையள் எங்கையிருக்கினம் என்று ஒரு கடிதம் வந்தவுடன் அங்கை அம்மாவை அனுப்பிவிட்டு..."

"காணும் சுபா. இதைக்கேட்டுக்கேட்டு என்ரை காது புளிச்சுப்போட்டுது. அம்மாவை உந்த லொட்ஜில் விட்டுட்டு நீர் வாறகிழமை வருவதற்குரிய ஒழுங்கைப் பாரும்!" என்றான் அலட்சியமாக.

"அம்மா படுத்த படுக்கையாய் இருக்க, எப்பிடி விட்டுட்டு வர? இங்கை தெரிந்த ஆட்களும் இல்லை. நீங்கள் கொஞ்சமும் யோசிக்காமல் கதைக்கிறியள்." அவளது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

"நான் யோசிச்சுத்தான் கதைக்கிறன். வாறகிழமை என்ரை சினேகிதனுடன் வாறதெண்டால் வாரும். இல்லையென்றால் அம்மாவோடையே இரும். நாளைக்கு ஃபோன்பண்ணுறன் நல்ல முடிவாய் எடும்!" என்று காட்டுக்கத்தல் கத்திவிட்டு ஃபோனை வைத்துவிட்டான்.

சுபா அப்படியே சிலையாக நின்றாள். அறைக்குள்ளிருந்து கனகம் இருமும் சத்தம் கேட்டதும் சுயநினைவிற்கு வந்தவளாய் ரிசீவரை வைத்துவிட்டு அறையை நோக்கி ஓடினாள். அங்கே கனகம் எழும்பி உட்காரமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். சுபா ஓடிப்போய் அவர் முதுகுப்பக்கம் தலையணையை வைத்து கட்டிலில் அமரவைத்தாள்.

"சுபா. நீ செய்யிறது கொஞ்சம்கூட நல்லாயில்லை. இனி நீ அந்த தம்பி சொல்லுறபடி தான் நடக்கவேணும். நான் யாழ்ப்பாணம் போகும் மட்டும் பக்கத்து அறையில இருக்கிற பார்வதி பார்ப்பாள். என்ரை வாழ்க்கை முடிகிற நேரம். ஆனால் உன்ரை வாழ்க்கை இனிமேல் தான் தொடங்கப்போகுது. நீ என்னைப்பார்க்காமல்..." மீண்டும் இருமத் தொடங்கினாள்.

"அம்மா நீங்கள் கொஞ்சநேரம் பேசாமல் படுங்கோ." என்று அவரைப் படுக்க வைத்தாள். எலும்பும் தோலுமாய் இருந்த அம்மாவின் உருவத்தை அவளால் நம்பவே முடியவில்லை. தாயின் போர்வையை எடுத்துப் போர்த்தி விட்டு படுக்கப்போனாள்.

நித்திரையின்றி புரண்டு புரண்டு படுத்தாள். இடைக்கிடை அம்மா அனுங்குவது கேட்டது. 'அம்மாவை இந்த நிலமையில் விட்டுவிட்டுப் போக எப்படி மனம் வரும்? எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு எங்களை வளர்த்தவர்' என்று எண்ணி மனமுடைந்தாள்.

சுபா பெரிய பகட்டான பணக்காரக் குடும்பத்தில் பிறக்கவில்லை. அப்பா ஒரு சாதாரண தொழிலாளி. அவரின் சம்பளத்தில் அவர்களை சிறப்பாக வளர்த்தவள். இன்று பல இலட்சம் கிடைத்தாலும் நாளும் பொழுதும் நச்சரிக்கிற பெண்கள் பலரைக்கண்டதுண்டு. ஆனால் கனகமோ ஆயிரம் ரூபாயுடனே அழகாய் குடும்பத்தை அன்பாய் நடத்தியவர். எத்தனையோ நாட்கள் தண்ணீரால் தன்ரை வயிற்றை நிரப்பி வாழ்ந்திருக்கிறாள். தன்னுடைய பிள்ளைகளுக்காக தன்னையே உருக்கியவள். சுபாவிற்கு கனடாவில் திருமணம் பேசி அவளை கனடாவிற்கு அனுப்புவதற்காக கொழும்பு வந்த இடத்தில் வரக்கூடாத பல வருத்தங்கள் வந்து அவளை



வாட்டி விட்டது. அவளது கஷ்டகாலம், யாழ்ப்பாணம் போக முடியாமல் அங்கை பிரச்சனை தொடங்கி விட்டது. கடந்தகால நினைவுகளுடன் உறங்கிப்போனாள் சுபா.

ஜன்னலினூடாக தூரத்தெரிந்த அந்தக் கடற்கரையை வெறித்துக்கொண்டிருந்தாள் சுபா. அழகிய அந்த நீலவானம் போல் அமைதியாய் இருந்த அவளது உள்ளம் இப்போது குமுறி எழும் அலைகள் போல அமைதியின்றி ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தது.

டெலிஃபோன் மணிச்சத்தமும் அதைத்தொடர்ந்து வந்த லொட்ஜ் உரிமையாளரின் கத்தலும், விண்கூவிக் கொண்டு வந்து விழும் செல் சத்தம்போல காதில் விழுந்தது. ரிசீவரை நடுங்கும் கரத்தால் மெதுவாக எடுத்தாள்.

"ஹலோ சுபா! நான் நேற்றுச் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கும் என்று நினைக்கிறேன். நல்ல முடிவொன்றை எடுத்திருப்பீர் என்று நம்புறன். என்ன பேச்சையே காணோம்?" என்றான், அவளுக்கு கதைக்க சந்தர்ப்பம் வழங்காமலேயே.

"நல்ல முடிவாத்தான் எடுத்திருக்கிறன். நாளைக்கு உருவாகப் போகும் ஒரு உறவிற்காக பிறப்பிலிருந்தே பின்னிப்பிணைந்த உறவை நடுத்தெருவில் விட நான் தயாரில்லை!" என்று கூறிவிட்டு கல்லாக நின்றாள். ஆனால் அவள் இதயம் இரகசியமாக இரத்தக்கண்ணீர் வடித்தது.

எதிர்முனையில் என்றுமில்லாதவாறு மௌனம்.

# வீதியிலே திருமணம்

கல்வியூர்ச் சந்திரன் - கோட்டைக்கல்லாறு

**சிறுவீதியால் வந்து பிரதான வீதியில் ஏறிக்கொண்டிருந்தார்கள் ராஜிதனும் — வாசுகியும். அவர்கள் வருகையை எதிர்பார்த்து.... ஆலயத்துக்குள் ஒளித்திருந்தனர் அவர்கள்.**

ஊரைவைத்து பலமுறை சுற்றியும் அவர்களுக்கு எவரும் கண்ணில் பட்டதாகத் தெரியவில்லை.

சுற்றிவளைப்பை மேற்கொள்ள வந்தாறுமூலையிலிருந்து பலர் வந்திருந்தார்கள்.

ஊர்ச்சனங்களுக்குப் புதிய இளைஞர்களைக் கண்டதும், 'திரும்பவும் இயக்கத்துக்கு வீடுவீடாகப் புள்ள புடிக்க வந்திருக்கிறாப்போல,' என்ற நினைப்பு வந்துவிட்டது. அதேநேரம் தங்கள் ஊரையும் சேர்ந்த பல்கலைக்கழக மாணவனொருவன் வந்தவர்களுடன் நிற்பதைக் கண்டதும் ஒருவாறு அச்சம் குறைந்திருந்தது.

பல்கலைக்கழக வளாகத்தையும்விட்டு இப்போது பிரேமதாச பாணியில் நிர்வாகம் பரவலாக்கப்பட்டதுபோல பகிடிவதையும் கிராமங்களுக்கும் பரவலாக்கப்பட்டு விட்டதையறிந்த பல்கலைக்கழக அனுமதிபெற்ற அவ்வூர் மாணவர்கள் நால்வரும், அவர்கள் சுற்றிவளைப்புக்கு தப்புவதற்கு தலைமறைவாகிவிட்டனர்.

வந்தவர்களில் குள்ளமாகவும் தாடிவைத்தும் இருந்த ஒருவன், "மச்சான் நேரமாகுது கடைசி பஸ்ஸும் வந்திடும் நாம புறப்படுவம். நாளைக்குப் பாப்பம்," என்று சொன்னான். அவன் கூறிய தோரணையை உணர்ந்த மற்றவர்கள் அவ்விடத்தை விட்டு நகர்ந்தனர்.

நாளைய தினம் மட்டக்களப்பில் இடம்பெறவிருக்கும் புதிய பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கான ஆங்கில போதனை வகுப்புக்களுக்குச் செல்வதற்காக பிரத்தியேக அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக ஆங்கில ஆசிரியர் ஒருவரைச் சந்தித்துவிட்டு அம்பாறையில் ஆலயத்துக்கு அருகிலுள்ள சிறுவீதியால் வந்து பிரதான வீதியில் ஏறிக்கொண்டிருந்தார்கள் ராஜிதனும் வாசுகியும்.

அவர்கள் வருகையை முன்னறிந்து ஆலயத்துக்குள் ஒளித்திருந்தார்கள் அந்த முதிய மாணவர்கள்.

ஆலயத்துக்கு எதிரே வந்த ராஜிதனையும் வாசுகியையும் அந்தக் குறுமுனிபோல் இருந்தவன் முதலில் ஓடிச்சென்று இடைமறித்தான்.

மற்றவர்கள் முறையே கைகளில் மாலை, பூக்கள், திருநீறு என்பனவற்றுடன் ஒவ்வொருத்தராக வீதிக்கு ஓடிவந்தார்கள்.

"ஏய்...இஞ்சவாடி..." என்று அந்தக் குறுமுனி, வாசுகியை கோயில் மதிலுக்குப் பக்கத்தில் போய் நிற்குமாறு கையால் சைகை காட்டினான். வந்திருப்பவர்கள் படையினருமல்ல, இயக்கங்களுமல்ல- பல்கலைக் கழக முதிய மாணவர்கள் என்பதை அவள் அறிந்திருந்ததால், நடுங்கியவாறே போய் ஒரு ஓரத்தில் நின்றாள் அவள்.



"மச்சான் இவன் அசல் பூசாரி மாதிரி இருக்கான். என்றான் ஒருவன். "பூசாரி என்னடா, இன்னும் கொஞ்சம் மேக்கப் போடவேணுமடா!" என்றான் மற்றவன்.

"பூசாரி ஆக்கவேணுமெண்டு நாம முதல்ல யோசிச்சம். இப்ப இப்படிச் செய்தா எப்படி மச்சான்?" என்றான் அந்தக் குள்ளமுனி. "எப்படி?" என்றான் மற்றவன்.

ஒருவருக்கொருவர் காதுக்குள் சேதி பரிமாறிக் கொண்டார்கள். பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவர்களாய்...

"வாழ்த்துகிறோம் திருவளர்ச் செல்வன் ராஜிதன் அவர்களே! அதோ உங்கள் திருவளர்ச்செல்வி அவர்கள் காத்திருக்கிறார்," என்று கூறிவிட்டு அவன் கழுத்தில் ஒரு பூமாலையை அணிவித்தார்கள்.

திருநீறை நெற்றியில் பூசிவிட்டார்கள். சில பூக்களை அவன் கையில் கொடுத்து வாசுகியின் முன்னே சென்று அவளுக்குத் தூவச் சொன்னார்கள்.

ராஜிதன் அவள் முன்னே சென்று பூவைத் தூவத் தயங்கினான். "டேய் தூவுடா மாப்பிள்ளை!" என்று முறைத்துக் கத்தினான் அந்தக் குள்ளமுனி.

ஊரவர்கள் ஒவ்வொருத்தராக அவ்விடத்தில் கூடத் தொடங்கிவிட்டார்கள்.

"இதோ பாருங்க! இவங்க பல்கலைக்கழகம் போறவங்க. சமூகக் கூச்சம், பய உணர்வு, எல்லாம் நீங்கி ஒரு தெம்பு, மிடுக்கு ஏற்படுத்துறதுக்காக இப்படியெல்லாம் நடக்கிறது வழக்கம்," என்று கூறிவிட்டு ஒரு சிறு கயிற்றுத்துண்டை இருவரது கைகளிலும் கொடுத்து அதைப்பிடித்தபடியே ஒருவர் பின்னால் ஒருவர் சென்று கோயிலை வலம் வருமாறு சொன்னார்கள்.

இருவரும் தயங்கினார்கள்.

"செல்லுங்கள் புதுமணத் தம்பதியே! ஊரே திரண்டு தங்களை வாழ்த்த வந்திருக்கிறது; நாமும் வாழ்த்துகிறோம்!" என்றான் ஒருவன்.

இருவரும் ஊரவர்கள் முன்னால் அழுதவாறே கோயிலை வலம் வந்துகொண்டிருந்தார்கள்.

"பொருத்தம் பார்க்கத் தேவையில்லை, பெற்றோரும் தேவையில்லை, தரகர்களும் தேவையில்லை. ஏ.எல்.நல்லா பாஸ் பண்ணிட்டா யூனிவெர்சிட்டித் தம்பிமாரே போதும்!" என்றார் ஊரவர் ஒருவர் நக்கலாக.

மாலையையும் கழற்றவிடவில்லை அவர்கள். ராஜிதனும் வாசுகியும் இப்போது மௌனமாக தங்கள் வீடுகளுக்குப் போகும்போது...

மௌனத்தை உடைத்தவாறு...."இதோபார் இது விளையாட்டுக் கல்யாணம் மாதிரி, ஒரு கனவுபோல இருக்கோணும். நாம படிக்கிற காலந்தொட்டே, தப்பாக கெட்ட எண்ணத்தோட பழகவேயில்லை. என் தாய், என்மூணு தங்கைகளும் என்னையே நம்பியிருக்காங்க. அவங்கள நான் வாழவைக்கணும்!" என்றான் ராஜிதன்.

வாசுகி அழுதேவிட்டாள். "ஊரறிய கோயிலுக்கு முன்னால நடந்த இத நா....நா...ன்... எப்படி? இனி வீட்டிலே நான் எப்படி....? உங்களுக்குத்தர சீதனம் எங்கிட்ட இல்லத்தான்! ஆனா நடந்த கல்யாணம் நடந்ததுதான்!" என்றாள் வாசுகி.

அவள் முகத்தில் தெரிந்தது சந்தோஷமா, சங்கடமா என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான் ராஜிதன்.

பகிடிவதையால் மேளமில்லாமல், பந்திபோடாமல் ஒரு திருமணங்கூட- அதுவும் ஆலயத்திலே நடாத்திக் காட்டலாம் என்ற எக்காளத்திலே பஸ்சிலே ஏறிக் கொண்டார்கள் அந்த முதிய மாணவர்கள்.

# காரணம்

யாழ்-மு.கலை

"என்னங்க, தரகர் சதாசிவம் பத்துமணிக்கு வாறன் என்று சொன்னவர். இன்னும் ஆளைக் காணேல்லை. போய் அவரை ஒருக்காச் சந்தித்துக்கொண்டு வாங்கோவன்!" என மனைவி கமலம் சொன்னது, பொன்னம்பலத்தின் காதில் விழவில்லை.

அவர் அன்றைய நாளிதழ் செய்திகளை மேய்ந்து கொண்டிருந்தார்.

"நான் விசரி மாதிரிச் சொல்லிக் கொண்டிருக்கிறன், நீங்கள் பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கிறியள். பெண்ணைப் பெத்த பொறுப்பிருந்தால் இப்படிப் பொறுப்பில்லாமல் இருப்பியளே?" என மீண்டும் எரிச்சலுடன் கமலம் சொன்னாள்.

"யார்....? நான் பொறுப்பில்லாத ஆளா? பொறுப்பில்லாம இருந்தால் பார்த்த ஏழுவரனும் சரிவராமல் போயும் இன்னும் பிள்ளைக்கு வரன் தேடிக் கொண்டிருப்பேனோ?" என நாளிதழிலிருந்து முகத்தைத் திருப்பிச் சொன்னார்.

**"சீதனம் குறைவு எண்டதுக்காக மாப்பிள்ளையின் படிப்பு பிள்ளையின்ர அளவுக்கு இல்லாவிட்டால்....."**



"அதுக்கில்லை, இப்ப நேரம் பதினொன்றாகிவிட்டது. ஆனால் சதாசிவம் பத்துமணிக்கு வாறனெண்டு சொன்னவர். எங்கடை அலுவலுக்கு நாங்கள் தானே தேடிப்போகவேணும்?" என எரிச்சல் தணிந்த குரலில் கமலம் சொன்னாள்.

"எங்களாலை கொடுக்கக்கூடிய சீதனத்தைப் பற்றி அவருக்குத் தெரியும். அதுக்குத்தக்கமாதிரி சம்பந்தம் வந்தால்தான் வாறனெண்டு சொன்னவர். இல்லாட்டில் இண்டைக்கு வரமாட்டார்," என கமலத்தின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, மீண்டும் நாளிதழில் செய்திகளை மேயத் தொடங்கினார்.

பொன்னம்பலம் இதுவரை பார்த்த வரன்கள் எல்லாம் சீதனத்தினால் பொருத்தமின்றிக் கை நழுவிப் போனது.

"ஆண்பிள்ளைகளைப் பெற்ற திமிரிலை கலியாணத்தை ஒரு வியாபாரமாக்கிறியள். என்னை மாதிரி ஒரு பொம்பிளைப் பிள்ளையப் பெற்றிருந்தால் அதுக்குக் கல்யாணஞ் செய்து வைக்கப்படும் பாட்டை நீங்களும் உணர்ந்திருப்பீர்கள்," என ஒவ்வொரு சம்பந்தமும் கை நழுவிப் போனபோது மாப்பிள்ளை வீட்டாரிடம் சொல்ல வேண்டும் போல் கமலத்திற்குத் தோன்றும். ஆனால் மனதிற்குள் நினைத்துக்கொள்வதுடன் நிறுத்திக் கொள்வாள்.

"கமலம்...கமலம்..... இங்கை வாருமன்!" என்ற பொன்னம்பலத்தின் குரல் கேட்டு வெளியே வந்தாள் கமலம்.

சதாசிவம் முகத்தில் வடிந்து கொண்டிருந்த வியர்வைத் துளிகளை தனது துவாய்த் துண்டால் துடைத்துக்கொண்டிருந்தார்.

"என்ன சதாசிவம், ஏதாவது நல்ல செய்தியோடை வந்திருக்கிறியளோ?" என்றவாறே கமலம் அருகில் வந்து அமர்ந்துகொண்டாள்.

"நல்ல செய்தி இருந்தால்தானே வாறனெண்டு சொன்னனான்," என்ற சதாசிவம் "உங்களாலை கொடுக்கக்கூடிய சீதனத்துக்கு ஒரு சம்பந்தத்தைப் பிடித்திருக்கிறன். இதைவிட்டால் வேறை நல்ல சம்பந்தத்தைத் தேடுவது கஷ்டமாகத்தான் இருக்கும்;" எனத் தொடர்ந்து சொன்னார் சதாசிவம்.

தங்களாலை கொடுக்கக்கூடிய சீதனத்துக்குப் பொருத்தமாக சம்பந்தம் கிடைத்த சந்தோஷத்தில் ஆவலை அடக்கமுடியாத கமலம், "பெடியன் என்ன வேலை செய்யுது?" என்றாள்.

"பெடியன் ரவுணிலை பலசரக்குக்கடை வைச்சு நல்லா உழைக்குது. குடிவெறி இல்லாத அருமையான பெடியன். அப்பிடி ஒரு பெடியனை மாப்பிள்ளையா நீங்கள் அடையிறதுக்குக் கொடுத்து வைச்சிருக்க வேணும்!" என சதாசிவம் மாப்பிள்ளை பற்றி புகழ்ந்து கொண்டிருந்தார். அவரது புகழ்ச்சி நூறுவீதம் உண்மையாகத் தான் இருந்தது.

எதிர்பார்த்த சீதனத்திற்குள் நல்ல உழைப்பாளி மாப்பிள்ளை கிடைக்கும் போது சந்தோஷப்படாதவர்கள் இருக்காமல் போகமாட்டார்கள்.

அவர்களது உரையாடல்கள் சந்தோஷம் கலந்ததாக மாப்பிள்ளை பற்றியும், மாப்பிள்ளை குடும்பத்தைப் பற்றியும் நகர்ந்து கொண்டிருந்தது. உரையாடலின் இடையில்,-

"பெடியன் எதுவரைக்கும் படிச்சிருக்குது?" என கமலம் கேட்டாள்.

"பெடியன் ஓ.எல்.வரை படிச்சிருக்குதாம். ஆனால் ஓ.எல். சோதனை எடுக்கேல்லை" என சதாசிவம் சொன்னதும் இதுவரை கமலத்தின் முகத்தில் மின்னிக் கொண்டிருந்த சந்தோஷ மின்னல்கள் மாயமாக மறைந்து போயின.

"அப்ப இந்தச் சம்பந்தமும் சரிவராது," என்று கமலம் சொன்னதும் அதிர்ந்து போன சதாசிவம், "நீங்கள் கொடுக்கிற சீதனத்துக்குத்தானே இந்தச் சம்பந்தத்தைப் பேசி முடித்திருக்கிறன். பிறகு ஏன் இப்படிச் சொல்லுகிறாய் கமலம்?" ஆச்சரியத்துடன் கேட்டார்.

"சீதனம் குறைவு எண்டாப்போலை மாப்பிள்ளையின்ர படிப்புப் பிள்ளையின்ரை அளவுக்கு இல்லாவிட்டால் என்னெண்டு இதுக்கு நாங்கள் சம்மதிக்கிறது?" என்ற கமலம் தொடர்ந்தாள்.

"பிள்ளை ஏ.எல்.வரை படிச்சதோடை கொம்பியூட்டரும் படிச்சிருக்குது. அதை வைச்சுக் கொண்டு எப்பிடியும் பிள்ளை ஒரு உத்தியோகம் எடுக்கும். மாப்பிள்ளை படிக்காட்டில் பிள்ளைக்கு அவர் பொருத்தமில்லைத் தானே?" என்ற விளக்கம் சதாசிவத்திற்கு வியப்பை கொடுத்தது.

இவ்வளவு நாளும் சீதனத்தாலை கல்யாணம் தடைப்பட்டது எனச் சொன்னவையே, ஒரு வகையில் சீதனம் உருவாவதற்குக் காரணமாக இருப்பதை நினைத்த சதாசிவத்திற்கு சிரிப்பதா அழுவதா எனத் தெரியவில்லை.

போலிக் கௌரவங்களே சீதனத்தின் ஆக்கிரமிப்புக் காரணம் என்பதை உணராதவர்களுடன் மேலும் கதைப்பதில் பயனில்லை, எனப் புரிந்த சதாசிவம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தார்.

www.padippakam.com

# இலக்கிய நயம்

## அறியாமல் இருந்தது

தருவது ரசிகன்



தோழிக்கு
மணமாகிவிட்டால்
மணமாகாத தோழிகளுக்கு கொண்டாட்டம்!

கேலி செய்யும் போர்வையில்
கோர்வையாய் கேள்விகள் தொடுப்பர்.
தெரியாத இரகசியம் அறிந்தால்தானே
நாளை புரியாமல் முழிக்க வேண்டி இருக்காது!
எல்லாமே ஒரு முன்னேற்பாடுதான்!

"தூங்கவேயில்லைப் போல இருக்கிறதே
பாவமடி எங்கள் செண்பகம்!"

"ம்ஹீம்.. எப்படியாம் தூங்குவது
பள்ளியும் புதிது-பாடமும் புதிது
கற்றுக்கொள்ளாமல் கண்மூடிக்கொண்டால்
கள்ளி என்றழைத்து கிள்ளி விடுவாரே!"

"கிள்ளினால் கண்களில்
கொள்ளியெடுத்தன்றோ முறைப்பாள்!"

"போடி பைத்தியம்!
கிள்ளுவோர் கிள்ளினால்
முறைக்கவோ தோன்றும்
மொத்தமாய் கிள்ளக் கொடுக்கத்தான் தோன்றும்!"

"வெட்கம் இல்லையா உனக்கு
பாவம் செண்பகம்
மாயம் பண்ணும் கள்ளியல்லடி!"

"பார்த்தால் பசுதான் செண்பகம்
பாய்ந்துவிட்டால் புலிதான் செண்பகம்!
ஆண் அங்கே மானாகும் விசித்திரம்
தேன் சிந்தும் பள்ளியறையின் சரித்திரம்!"

வினாவும்-விடையுமாக
தோழிகளே குறும்பாடினார்கள்!

"இடை தொட இமை மூடும்
படையெடு என இளமை நாடும்
சிறையெடு என எழில்கள் கேட்கும்
தடையிலை என இதழ்கள் பூக்கும்
மடை உடை வெள்ளம் மனதில் பாயும்!"

ஒருத்தி அபிநயம் காட்டி
கவிநயம் தீட்டினாள்!

"நாளை உங்களுக்கும்
இரவு வரும்!-நீங்களும்
வாலைச் சுருட்டிக் கொள்ளும்
வேளை வரும்!"
என்றாள் மணமான தோழி.

"கோபப்படாதே தோழி
கற்றதில் கொஞ்சம் சொல்லிக்கொடு
ஆரம்ப பாடம் அறிந்துகொள்ள
ஆவலாய் உள்ளனர் சொல்லிக் கொடு!"

"உனக்கு மட்டும் வேண்டாமோ
பக்கத்து இலைக்கு பாயாசம்
கேட்பதுபோல நடிக்காதே!"

தோழிகளுக்குள் சிறு மோதல்
மலர்களுக்குள் சிறு உரசல்!

மணமான தோழி குறுக்கிட்டாள்.
அவளும் பொல்லா வாயாடி.

"எழுத்தில் வடித்தும் புரியாது
சொல்லில் வடித்தும் தெரியாது
ஏட்டில் எழுத்தில் அடங்காது
நேரில் அறிந்தால் புரிந்துவிடும்!"

"அன்பே! என்று அழைத்தாரா?
அடியே! என்று முறைத்தாரா?"
குறும்பாய் ஒருத்தி குறுக்கிட்டாள்.

"எட்ட நின்று பிணங்கியதால்
அன்பே! என்று அழைத்திட்டார்.
கட்டிக் கொண்ட பின் நானும்
இறுக்கிக் கொண்ட காரணத்தால்
அடியே! என்று அழைத்திட்டார்
போடா! என்றேன் நானும்தான்!"

"'டா' வோ போட்டாய்? அய்யய்யோ,
எத்தனை போட்டார் உன் முதுகில்?"

"போடி சுத்தப் பைத்தியமே
கூடியாடி ஒன்றாகி
ஒருவராகி போனதன் பின்
'டா'வும் இனிக்கும் கரும்பாக!
'டி'யும் இனிக்கும் பாகாக!"

"முகத்தை மூடிக் கொண்டாயோ?
நிலவை மூடிய திரையாக
விரலால் முகம் மறைத்தாயோ?"

"முகத்தை மூடிய விரலை
கரத்தை வீசியே பிரித்தாரே!
தரையை நோக்கிய தலையை
கரத்தால் வாரியே பிடித்தாரே!"

"உன் நெஞ்சில் வந்ததோ
அச்சம்? மிஞ்சி நின்றதோ தயக்கம்?"

"அச்சம் வரவில்லை-ஆனால்
மயக்கம் வந்தது மெய்தான்!
கனவில் நினைத்தது எல்லாம்
நனவில் நெருங்குது முன்னால்
இரவைத் துரத்திய எண்ணம்
உறவாய் நிற்குது முன்னால்!
நினைக்க வந்தது மயக்கம்!"

"மயக்கம் வந்ததா?- கள்ளி
கிறக்கம் வந்ததா?"

"மயங்கிச் சரிந்தேன் மார்பில்
மயக்கம் தீரத்தந்தார் இதழில்
விழிகள் சொக்கின சுவையில்.
மொழிகள் இல்லையடி சொல்ல!"

தோழிகள் திறந்த வாய் மூடவில்லை
தோழிகள் திறந்த விழி சாத்தவில்லை.

"கையணைக்க மெய் மறக்கும்
கால்கள் பின்ன கண் மயங்கும்
தோள்கள் சேர தேகம் உருகும்
தோகையெனவே மனம் விரியும்!

நினைவில் தேனை கொட்டியது யார்?
நெஞ்சில் பாலை கொட்டியது யார்?
கனவில் கண்ட காட்சிகள் யாவும்
நனவில் காண வைத்தது யார்?

கொட்டக் கொட்ட மலர் துள்ளும்
தேனியின் மீது மலர் துவளும்
வென்றது யார்? தோற்றது யார்?
யுத்தம் இன்னும் முடியவேயில்லை.
காதல் யுத்தம் கட்டிலில் தொடரும்
கல்லறை வரையும் முடிவே இல்லை!

நேற்றைய யுத்தம் ஆரம்ப பாடம்
தினமும் யுத்தம் புதிய அனுபவம்!"

நீண்ட விளக்கம் தோழி சொல்ல
கேட்டவர் விழிகள் விரிந்து போயின!

"அறிந்தது ஒருநாள்
ஆனால் அளவில்லா அனுபவம்!"
மெல்ல ஒருத்தி கேலி வீசினாள்.

"குடித்தது அமுதம்
எப்படி மறக்கும்!
கடைந்தது பாற்கடல்
எப்படிக் கசக்கும்?"

கொல் என்று நகைத்தனர்
குறும்பு துள்ளும் தோழியர் யாவரும்!

"ஏனடி தோழி?
காதலர் பக்கம் வந்தாலே
வெட்கம் வரும் என்பாய் முன்னர்!
இப்போது எப்படியடி
நீண்ட இரவில்
வெட்கத்தை விரட்டி
அவரோடு பக்கம் இருந்தாய்?"

"பக்கம் மட்டுமா இருந்தாள்
பாகமாயும் அல்லவா இருந்தாள்!"
மற்றொரு தோழி சீண்டினாள்.

மணமான தோழி
புன்னகை மாறாமல் பதில் சொன்னாள்;

"நாம் அறிய விரும்பியதை
நம் இனியவர்
நாம் அறியச்செய்யும்போது
நாணம் இருப்பதையே
நாம் அறியாமலிருப்போம்!"

"நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்"
குறள்:1257. அதிகாரம்:126

---

## ஸ்போர்ட்ஸ்

# இந்தியா தோல்வி கண்டது

பிரிட்ஜ்டவுனில் உள்ள பார்படோஸில் இந்திய-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

மேற்கிந்தியத்தீவு அணியின் கப்டன் கொட்னி வோல்ஷ் காயம் காரணமாக இந்தப் போட்டியில் பங்கேற்க இயலாததைத் தொடர்ந்து, பிரையன் லாரா மேற்கிந்தியத்தீவு அணிக்குத் தலைமை தாங்கினார். டெஸ்ட் போட்டியில் லாரா தலைமை தாங்கிய முதல் போட்டி இதுதான். வோல்ஷிற்குப் பதிலாக இயன் பிஷப் சேர்க்கப்பட்டார்.

இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் சுனில் ஜோஷிக்குப் பதிலாக டொட்டா கணேஷ் சேர்க்கப்பட்டார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, மேற்கிந்திய அணியை முதல் துடுப்பெடுத்தாடப் பணித்தது. மேற்கிந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது. சிவ்நாராயண் சந்தர்போல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி தனது முதல் சதத்தை எட்டினார். 8 பவுண்டரிகளை அடித்த இவர் 137 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார். மற்றும் லாரா-19, வில்லியம்ஸ்-24, அம்புரோஸ்-37 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

இந்திய அணி சார்பாக வெங்கடேஷ் பிரசாத் 82 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கணேஷ்-2 விக்கெட்டும் கும்ப்ளே, குருவில்லா தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.



சந்தர்போல்

இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 319 ஓட்டங்களைப் பெற்றது. டெண்டுல்கர் 92 ஓட்டங்களை விளாசினார். ராகுல் திராவிட்-78, கும்ப்ளே-23 ஓட்டங்களை எடுத்தனர். மேற்கிந்தியத்தீவு அணி சார்பாக ரோஸ் -4 விக்கெட்டுக்களையும், பிஷப்-3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத்தீவு அணி 140 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. லாரா 45 ஓட்டங்களை எடுத்தார். குருவில்லா 5 விக்கட்டுக்களையும், பிரசாத்-3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இலகுவான வெற்றி இலக்கில் விளையாடிய இந்திய அணி 81 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. வி.வி.லக்ஸ்மன் அதிக பட்சமான 19 ஓட்டங்களை அடித்திருந்தார். அம்புரோஸ் 4 விக்கெட்டுக்களையும், ரோஸ், டில்லான் தலா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சந்தர்போல் தெரிவு செய்யப்பட்டார். இவ்விரு அணிகளுக்கிடையேயான நான்காவது டெஸ்ட்போட்டி ஏப்ரல் 4-8 வரை அன்டிகுவாவில் நடைபெறுகிறது.

---

# இந்தநாள் திருமணம்



ராஜீவ்-சோனியா தம்பதியின் மகள் பிரியங்கா, தாயார், மணமகன் றொபேர்ட் மற்றும் தம்பி ராகுல் உடன்.

---

# சிந்தியா பதில்கள்

★ உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எப்படி?

கே. செல்வராஜா, உடப்பு.

வெளியே தெரியாத உட்காயத்துடன் மீண்டுள்ளது பொதுஜன முன்னணி. உட்காயம் என்பதால் அடியே படவில்லையே என்றும் சொல்லமுடிகிறது. ஆனால் வலி இல்லாமல் போகுமா?!

•••

★ தலைநகரில் தமிழ் வாக்குகள் ஐ.தே. கட்சியின் பக்கம் சென்றுள்ளதாக அமைச்சர் பௌசி கூறியுள்ளாரே?

எம். சகுந்தலா, கொழும்பு-06.

அதற்கான காரணத்தையும் அவர் அறிவார். கட்சிக் கட்டுப்பாடு கருதி சொல்லாமல் விட்டிருக்கிறார். நான் அறிந்த செய்திப்படி கொழும்பில் வாக்காளர்களாக இருக்கும் தமிழர்கள் பலர் வாக்குச் சாவடிப்பக்கமே செல்லவில்லை.

•••

★ இ.தொ.காவுக்கு கிடைத்துள்ள தோல்வி பொதுஜன முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டதால் ஏற்பட்ட தோல்வி என்கிறாரே தொண்டா?

வே. பன்னீர்தாஸ், நுவரெலியா.

சேவல் சின்னத்துடன் தனியாகக் கேட்ட இடங்களிலும் தோல்வி ஏற்பட்டுள்ளதே! நஷ்டத்தை பகிர்ந்துகொள்ள விரும்பாமல் கூட்டுச் சேர்ந்தவர்கள் தலையில் கட்டப் பார்ப்பது பழம்பெரும் தலைவருக்கு பெருமையாகாது! தவிர தொடர்ந்தும் பங்காளிகளாகவும் இருந்து கொண்டு அப்படிச் செய்யலாமா?

•••

★ அரசியல்வாதிகளால் மக்களை சுலபமாக ஏமாற்ற முடிகிறதே எப்படி?

எம். ஜவ்பர், கல்முனை.

அதுக்கெல்லாம் சில தொழில் நுணுக்கங்கள் தெரிந்திருக்க வேண்டும். ஒரு குட்டிக் கதை.

பிரிட்டனில் பிரபலமான அரசியல்வாதிகளில் ஒருவர் பெஞ்சமின் டிஸ்ரேலி.

அவருக்கு எக்கச்சக்கமான மக்கள் ஆதரவு. அவருடைய நண்பர் ஒருவருக்கு பெஞ்சமினின் செல்வாக்கைப் பார்த்து ஒரே ஆச்சரியம்.

ஒருநாள் பெஞ்சமினுடன் வோக்கிங் போனார் நண்பர். அவர்கள் எதிரே ஒரு முதியவர் நடந்து வந்தார். பெஞ்சமினைக் கண்டதும் "வணக்கம்" சொன்னார் முதியவர்.

உடனே பதில் வணக்கம் சொன்ன பெஞ்சமின்: "பெரியவரே! உடம்பு சரியில்லாமல் சிரமப்பட்டீர்களே, உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

முதியவருக்கு ஆச்சரியம். அட என் நோயைக்கூட தெரிந்து வைத்திருக்கிறாரே என்று நினைத்து நெகிழ்ந்தபடி சென்றார் முதியவர்.

சிறிதுதூரம் சென்றதும் பெஞ்சமினிடம் அவரது நண்பர்: "அந்த முதியவருக்கு உடல் நலமில்லை என்பது எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

அதற்கு பெஞ்சமின் சொன்னார்:

"வயதாகிவிட்டால் ஏதாவது வியாதி வராமலா இருந்திருக்கும்? அதுதான் அப்படிச் சொன்னேன்?" என்றார்.

•••

★ டியர் சிந்தியா! கடியாக ஒரு கதை சொல்லுங்கள்?

செல்வி ஆர். கோமதி, வவுனியா.

தன் தம்பிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தாள் அக்கா. அவனுக்கோ விளையாடப் போகவேண்டும் என்று அவசரம். "கணக்கை செய்துவிட்டுப்போ!" என்றாள் அக்கா.

அவசர அவசரமாகக் கணக்கைச் செய்து கொடுத்துவிட்டுப் புறப்பட்டான் சிறுவன். கணக்கைப் பார்த்தாள் அக்கா. 50+35=75 என்று இருந்தது.

"நில்லடா. 50+35ம் சேர்ந்தா எப்படியடா 75 வரும்?" என்று கத்தினாள் அக்கா.

"அதெல்லாம் வரும்," என்றான் சிறுவன்.

"எப்படிடா வரும்?"

"கணக்கைத் தப்பாகப் போட்டா வரும்!"

என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான் சிறுவன்.

•••

★ 'பதவி வரும்போது பணிவும் வரவேண்டும்' என்கிறார்களே, யார் அப்படி இருக்கிறார்கள்?

திருமதி ஆர். ராஜேஸ்வரி, கொழும்பு-11.

சும்மா இருங்க ராஜேஸ்வரி! பதவியில் இருப்போரைக் கண்டால் நமக்குத்தான் பணிவு வரவேண்டும்: இல்லையோ தொலைந்தோம்! காலம் மாறிவிட்டது.

•••

★ அன்புள்ள சிந்தியா! மினித் தேர்தலில் திருமதி அத்துலத் முதலி அணியினர் போட்டியிட்டார்களா?

எம். ஜெகசோதி, கொழும்பு-09.

மறைமுகமாக- சுயேச்சையாகப் போட்டியிட்டு தமக்குள்ள செல்வாக்கை ஆழம்பார்த்தார்கள். சின்னம் பேட்! ஒரு ரன்கூட தேறவில்லை, கிளீன் போல்ட்!

•••

★ தற்போது நம்பிக்கையான ஆட்டத்தில் அசத்தும் கிரிக்கெட் அணி எது?

இ. நித்தியானந்தன், மட்டக்களப்பு.

சமீபத்திய தரநிர்ணயப்படி சர்வதேச ஒருநாள் போட்டிகளில் முதலிடத்தில் இருக்கிறது பாகிஸ்தான்! இந்தியாவுக்கு ஐந்தாவது இடம். இலங்கை ஆறாவது இடத்தில் இருக்கிறது.

•••

★ சர்வாதிகாரிகளிடமும் நல்ல குணங்கள் இருக்கும் என்பது உண்மையா?

ஜெ. சௌந்தரம், சிலாபம்.

ஜெர்மனியில் ஹிட்லர் கொடிகட்டிப் பறந்த நேரம். ஹிட்லரை கொல்லச் சதி செய்ததாகப் பல்லாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். அதில் ஒரு பகுதியினரை சிறையில் சித்திரவதை செய்து கொல்லுமாறும், ஏனையோரைச் சுட்டுத் தள்ளுமாறும் உத்தரவிட்டார் ஹிட்லர்.

சுட்டுக் கொல்லப்படவேண்டியவர்கள் பட்டியலில் இருந்தவர்களில் ஒருவர் ஜெனரல் ரோமல். ஒரு காலத்தில் ஹிட்லருடன் தோளோடு தோள் நின்று போராடியவர்.

"ஜெனரல் ரோமலுக்கு கருணை காட்டலாம் என்று நினைக்கிறேன்," என்றார் ஹிட்லர்.

"அப்படியானால் அவரை விடுதலை செய்துவிடலாமா?" என்று கேட்டனர் அதிகாரிகள்.

உடனே ஹிட்லர் சொன்னார்: "அவரை சுட்டுத்தள்ள வேண்டாம். தற்கொலை செய்து கொள்ள அனுமதிக்கவும்!"

இப்படியான குணங்களும் இருக்கலாம் சௌந்தரம்!

•••

★ ரஜினியின் 'அருணாச்சலம்' எப்போது திரைக்கு வருகிறது?

செல்வி என். ஸில்வியா, நிந்தவூர்.

ஏப்ரல் புத்தாண்டுக்கு!

•••



அருணாச்சலம் (ரஜினி, ரம்பா)

★ டியர் சிந்தியா! 'அருணாச்சலம்' படத்தில் ரஜினிகாந்த் தலையில் விக் அணிந்தா நடிக்கிறார்?

ஏ. தனேஸ்வரன், கண்டி.

தலையின் முன்புறத்தில் மட்டும் லேசாக முடி ஒட்டிக்கொண்டு நடிக்கிறார். வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது.

•••

★ சமீபத்தில் படித்து வியந்த கவிதை?

செல்வி இ. சுபத்திரா, நீர்கொழும்பு.

அயலக சஞ்சிகை ஒன்றில் படித்த 'நரை' பற்றிய கவிதை.

"காலம் தெறித்த
காதோர எச்சில்
குடும்பம் சுமந்து
கிடைத்த மெடல்–
இளமை கொண்டாடும்
வெள்ளிவிழா"



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 77



இராமபிரான் தன் குழுவினருடன் தென் கடற்கரையை வந்தடைந்தபோது இலங்கை நகரில் இலங்கையர்கோன் இராவணன் பெரும் துயரங்கொண்டவனாகக் காணப்பட்டான்.

ஆஞ்சநேயர் இலங்கை நகர் புகுந்து சீதாப்பிராட்டியாரைக் கண்டது, மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் அழித்தது, தன் மகன் அட்சகுமாரன், பிரதான தளபதிகள் ஐவர் உட்பட பெரும் தொகையான அசுர சைனியங்களைக் கொன்றது, இவை மட்டுமல்லாமல் அவருடைய வாலில் மூட்டப்பட்ட தீயினாலேயே இலங்கை நகரில் பெரும் பகுதியினையே எரியூட்டியது போன்ற செயல்களினால் இலங்கேஸ்வரன் பெரும் குழப்பமடைந்திருந்தான்.

இலங்கை மாநகரை-இந்திரனின் அமராவதி நகரைவிட பன்மடங்கு அழகும் வசதிகளும் நிரம்பிய பெருநகராக நிர்மாணிக்க வேண்டும் என்று கருதிய இராவணேசன், தேவ தச்சனான மயனிடம்-நகர நிர்மாணப் பொறுப்பினை ஒப்படைத்திருந்தான். தங்கம், வெள்ளி போன்றவற்றாலும் வைரம், வைடூரியம், மாணிக்கம் போன்ற

## மந்திராலோசனை

நவமணிகளினாலும் எண்ணற்ற மாளிகைகளை அமைத்துக் கொடுத்திருந்தான் மயன். அழகுக்கு அழகூட்டுவது போல், மாளிகைகளின் எழிலுக்கு ஈடாக அவற்றின் அருகிலேயே நந்தவனங்களும் நீர்நிலைகளும் பொய்கைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

### கதிகலங்கிய இலங்கை

இத்தகைய சிறப்புக்களை ஒரு வானரம் வந்து சிதைத்துச் சின்னாபின்னமாக்கி விட்டதே! வேற்று நாட்டிலிருந்து ஓர் ஈ, எறும்புகூட உட்புகாதபடி மிக நேர்த்தியாக அரண் செய்யப்பட்டிருந்த இந்நகரத்துள் ஒரு குரங்கு புகுந்து எண்ணற்ற அழிவுகளை உண்டு பண்ணிவிட்டதே என்பதனால் இராவணன் நிலை குலைந்து போனான். மூவுலகங்களிலும் தனக்கு நிகரான வீரன்

இராஜகுமாரன்

எவருமில்லை என்று நிரூபித்தவன்; தேவேந்திரனையே, தன்மகன் இந்திரசித்துவை அனுப்பிச் சிறைபிடித்தவன்; சிவபிரானையே தனது அமுத கானத்தால் மயக்கியவன்; படைத்தல் கடவுளான பிரம்மதேவனிடமே அழியாவரம் பெற்றவன்- இத்தனை சிறப்புக்களையும் பெற்ற அரக்கர்கோனிடம் ஒரு குரங்கு வாலாட்டிச் சவால் விட்டுச் சென்று விட்டது. இதனால் இராவணன் மட்டுமல்ல, இலங்கைவாழ் அரக்க குலமே கதிகலங்கிப் போயிருந்தது.

சீரும் சிறப்பும் வாய்ந்த நாட்டில் எண்ணற்ற அனர்த்தங்களை விளைவித்து விட்டு உயிருடன் ஒரு வானரம் தப்பிப் போயிருப்பதனால் அனைவருமே அவமானத்தால் தலை குனிந்து போனார்கள். மந்திரிகளும் பிரதானிகளும் சேனைத்தளபதிகளும் இராவணனிடம் எத்தகைய சமாதானத்தைக் கூறிச் சமாளிப்பது என்று தெரியாமல் தவித்தனர்.

இந்த வேளையில்தான் இராவணனிடமிருந்து அமைச்சர்களுக்கும் தானைத் தளபதிகளுக்கும் அவசர அழைப்பு வந்திருந்தது. உடனடியாக மந்திராலோசனை மண்டபத்துக்கு அனைவரையும் வந்து சேரும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இத்தகைய அழைப்புக்கள் முன்பு வரும் போதெல்லாம் அகமும் முகமும் மலர வருவோர் இன்று, 'என்னதான் நடக்கப்போகிறதோ? யார் தலை உருளப்போகிறதோ?' என்ற கவலையில் ஆழ்ந்தவர்களாக, சோகமே உருவாக மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தனர். அம்மண்டபத்தின் சுற்றுப்புறமனைத்தும் மிகச் சிறந்த வீரர்களாகத் தெரிந்து, வேண்டாத எவரோ, விலங்கோ, பறவையோ, பிராணிகளோ புகுந்துவிடாதபடி காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர். எவ்வளவோ சிறப்பான காவலுக்குட்பட்டிருந்த நகருக்குள் எவருக்கும் தெரியாமல் ஒரு வானரம் புகுந்து செய்து விட்டுச் சென்ற செயல்களின் காரணத்தினால், மந்திராலோசனையில் இடம்பெறும் சம்பவங்கள் வெளியேறவிடாமல் பாதுகாக்கவே இத்தகைய முன்னேற்பாடுகள்.

அழைக்கப்பட்ட அனைவரும் வந்து சேர்ந்ததும் சோகமும் கோபமும் ஓரளவு அச்சமும் வெட்கமும் இணைந்த பாவம்-பத்து முகங்களிலும் படர்ந்த நிலையில் இராவணன் மண்டபத்துள் நுழைந்தான்.

கட்டியகாரன் தனது உச்சக்குரலை உயர்த்தி, "ராஜாதி ராஜ ராஜ கெம்பீர...." என்று கூறத் தொடங்க, தனது வலது கரத்தை உயர்த்தி, கொடூரமான பார்வையை அவன் மீது செலுத்தி, மேற்கொண்டு எதையும் கூறவேண்டாம், என்ற தோரணையில் அவனுக்குச் சைகை காட்டினான் இராவணன். கட்டியகாரனைத் தொடர்ந்து சபையிலுள்ளவர்கள் "வாழ்க! வாழ்க!" என்று கூறுவது வழக்கம். ஆனால் இப்போது எவரும் எதுவும் கூறவில்லை. அனைவரும் தலை கவிழ்ந்த வண்ணம் நின்றிருந்தனர். அரசன் ஆசனத்தில் அமர்ந்ததும் மற்றவர்களும் தயங்கித் தயங்கி தத்தமது இருக்கைகளில் அமர்ந்தனர்.

### இராவணன் உரை

இராவணன் எல்லோரையும் ஒருதடவை சுற்றிப்பார்த்துக் கொண்டு தனது உரையைத் தொடங்கினான்:

*"நமது நாடாகிய இலங்கையை ஒரு குரங்கு தீ வைத்துச் சீரழித்துவிட்டது! வெற்றியைத் தவிர வேறு எதனையுமே கண்டிராத வெற்றிக் கொடியுடைய நம் நகரம் அத்தீயிலே வெந்து சாம்பலாகிவிட்டது. எனது மனும் உறவினர்களும் நண்பர்களும் வீரர்கள் பல்லாயிரவரும் இறந்து போயினர். பெரும் அவமானத்தால் தலை குனிவு ஏற்பட்டு விட்டது. இவ்வளவெல்லாம் நடந்து முடிந்த பின்னரும் நான் சிம்மாசனத்தில் எப்போதும் போல் அமர்ந்துள்ளேன்!"*

இக்கருத்துக்களோடு கவிச்சக்கரவர்த்தி தரும் பாடல் இது:

**சுட்டது குரங்கு எரி சூறையாடிடக்**
**கெட்டது கொடி நகர் கிளையும் நண்பரும்**
**பட்டனர் பரிபவம் பரந்தது எங்கணும்**
**இட்டதில் அரியணை இருந்தது என்னுடல்.**

(யுத்த காண்டம்-23)

அனுமனிட்ட தீயினால் இலங்கை பட்ட துன்பத்தை விளக்கிய இராவணன், "இவ்வளவெல்லாம் நடந்து முடிந்தபின்னரும் நாம் எதுவுமே நடவாததுபோல், உண்டு உடுத்து இன்பமாக இருக்கிறோம்," என்று கூறி அங்கிருந்த அனைவரையும் வார்த்தைகளால் சுட்டான். அத்துடன் "மேற் கொண்டு என்ன செய்யலாம்," என்று சபையோரைக் கேட்டான்.

### படைத் தலைவர்கள் பகர்ந்த பதிலுரை

இராவணனுடைய கேள்விக்கு முதலில் பதிலளித்தவன் படைத்தலைவன். "வலிமை பொருந்திய அரக்கர் குலத்தைக் காக்கும் பொறுப்புள்ள மன்னன் இவ்வாறு கலங்கித் தடுமாறலாகாது. தங்கள் தங்கை சூர்ப்பணகையின் அங்கங்களைச் சிதைத்து, கரன் முதலான வீரர்களை வதம் செய்து, பின்னர் சாதாரண குரங்கை ஏவி பல கொடுமைகள் விளைவித்தவர்களை-அக் குரங்கைத் தொடர்ந்து சென்று கொன்றொழித்து விடாமல் இங்கு ஆலோசனைகள் செய்து கொண்டிருப்பதில் எந்தப் பயனுமில்லை!" என்று கூறியதுடன் உடனடியாகப் படை நடத்த வேண்டும், என்று வற்புறுத்தினான். இதனைத் தொடர்ந்து 'மகோதரன்', 'வச்சிரதந்தன்', 'துன்முகன்' ஆகியோர் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர்.

துன்முகன் கூறியதாக கம்பநாட்டாழ்வார் தரும் செய்யுள் இதோ:

**திக்கயம் வலி இல தேவர் மெல்லியர்**
**முக்கணான் கயிலையும் முரண் இன்றாயது**
**மக்களும் குரங்குமே வலியர் ஆம் எனின்**
**அக்கட இராவணற்கு அமைந்த ஆற்றலே.**

(யுத்த காண்டம் - 43)

பொருள்

*"எட்டுத்திக்குகளையும் தாங்கி நிக்கின்ற யானைகளே உமது வலிமைக்கு முன்னால் நிற்க முடியாமல் பணிந்து போயின. தேவர்களும் வலிவிழந்து போனார்கள். முக்கண்ணனான சிவபிரான் உறையும் திருக்கைலாய மலையும் உறுதி இழந்து போய்விட்டது. இத்தகைய வலிமைமிக்க நீர் சாதாரண மனிதருக்கும் குரங்கிற்கும் இத்தகைய மதிப்பளிப்பது விந்தையாக இருக்கிறது."*

இவ்வாறு கூறிய துன்முகன், "நம் நாட்டின் எல்லைக்குள் அத்து மீறிப்புகுந்த ஒரு வானரத்தின் செயல் கண்டு இவ்வளவு தூரம் அலோசனை செய்வதில் எதுவித பலனுமில்லை. கேவலம் மனிதர்கள் நம் உணவுக்கு உரியவர்கள், வானரத்தைத் தப்ப விட்டுவிட்டோம். இப்போது அந்த வானரமும் அதனை ஏவிய மனிதர்களும் எங்கே இருக்கிறார்கள் என்பதனைக் கண்டறிந்து, அவர்களை ஒழித்துக்கட்ட உடனடியாக நமது வீரர்களை அனுப்பி வைக்க வேண்டும். இதற்காக இங்கு ஆலோசனை நடத்துவது கேவலமாகும்!" என்று துன்முகன் மேலும் சொன்னான்.

அடுத்து 'மாபெரும் பக்கன்' என்றழைக்கப்படும் 'மகாபார்சுவன்' என்பவன் எழுந்து இராவணனுக்கு மரியாதை செலுத்திவிட்டு "ஒரு சாதாரண குரங்கு வந்து நமது வீரஞ்செறிந்த பூமியில் விளைவித்த சில அடாவடித்தனங்களினால், எமது அரக்க இனத்தின் மேன்மையும் வீரமும் அழிந்து விட்டதெனக் கருதலாமா? ஒரு குரங்கின் செயலுக்காக மந்திராலோசனை நடத்தி முடிவெடுப்பதென்பது கேவலமானது. உடனடியாக அந்தக் குரங்கையும் அந்த மனிதர்களையும் ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுத்ததாக வேண்டும்!" என்று கர்ஜனை செய்தான். மாபெரும்பக்கனைத் தொடர்ந்து எழுந்த 'பிசாசன்', "ஒரு குரங்கின் செயலால் மானமிழந்த நாம் இனிமேல் உயிருடன் வாழ்வதில் பயனில்லை," என்று வெறுப்புடன் கூறினான். இதே கருத்தினை 'சூரிய சத்தூரி' என்பவனும் அவன் பின் எழுந்த 'பகைஞன்' என்பவனும் வலியுறுத்தினர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 75**

**சரியானவிடை:- முரசு, பறை.**

1. டி.ஜி. சுபேசன், தாதிமார் விடுதி, யார்ட் வீதி, கல்முனை-01.
2. செல்வி கை.சுனீத்திரா, 64/47 மோதரவீதி, கொழும்பு-15.
3. ஆர்.நிலக்ஷி, 8/8 B2 லக்ஷ்மன் பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-6.
4. மலையாண்டி பரமேஸ்வரி, சின்ன செல்வ கந்த, பிட்ட கந்த, மாத்தளை.
5. மு.இ.சப்றி, C/o A.L.M. இஸ்மாயில், 19 டீன்ஸ் வீதி, அட்டாளைச்சேனை-10.

**போட்டி இல. 77** கேள்வி:- தேவதச்சனின் பெயர் என்ன?

ஏப்ரல் 12 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.77, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# தொண்டாவுடன் காதிலை பூ கந்தசாமி

## ஒரு கற்பனைப் பேட்டி

தொண்டா: (தனியே அமர்ந்திருக்கிறார். எங்கிருந்தோ ஒரு பாடல் காற்றில் தவழ்ந்து வருகிறது)

யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க-என்
கட்சி வெல்லும் வென்ற பின்னே
வாங்கடா வாங்க.

பெட்டியிலே வோட்டுமில்லே
எலக்ஷனில் வெற்றியில்லை
சபையிலே கட்சியில்லே
மனதிலே மகிழ்ச்சியில்லே!

கா.பூ.கந்தசாமி: ஐயா வணக்கமுங்க!

தொ: யாரு? அட காதிலை பூ கந்தசாமி யாரா? வாரும், வாரும். (முகத்தில் கட்டாயப் புன்னகை சூடுகிறார்)

கா.பூ.க: மலையே சாய்ஞ்சு போச்சுங்க. ஐயா மகிழ்ச்சியாக இருக்கிறாப்போல தெரியுதுங்களே?

தொ: இன்னைக்குத்தான் நான் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறேன். நாம எதற்கும் கவலைப்படக்கூடாது. பதவியே போனாலும் கவலைப்படாதவன் நான்.

கா.பூ.க: என்னங்க தலைவரே இப்படிச் சொல்லிப்புட்டிங்க. எலக்ஷனில் உங்க கட்சியும் தோல்வி கண்டிருக்கே?

தொ: தோல்விதான் ஒப்புக்கொள்கிறேன். ஆனா இது எமக்கு கிடைத்த தோல்வி அல்ல. ஆட்சியிலே இருக்காங்க பாருங்க அவங்களுக்கு கிடைச்ச தோல்வி.

கா.பூ.க: வெற்றி கிடைச்சிருந்தா?

தொ: அதுதான் கிடைக்கல்லேயே!

கா.பூ.க: நீங்க சொன்னதை மக்கள் கேட்கல்லையே தலைவரே?

தொ: எலக்ஷன் நேரமாப் பார்த்து சனங்க பொது ஜன முன்னணிக்கு வாக்குப் போட்டிட்டாங்க சனங்க. நாங்க அவங்களோட சேர்ந்ததுதான் சனங்களுக்கு கோபமே தவிர, அவங்க மேலே சனங்களுக்கு கோபம் இல்லை.

கா.பூ.க: புரியல்லையே தலைவரே?

தொ: அதாவது, சனங்க எங்களைத்தான் உரிமையோட நேசிக்கிறாங்க. அதுதான் எங்கமீது மட்டும் கோபத்தை காட்டியிருக்கிறாங்க.

கா.பூ.க: அதாவது, சனங்க உங்களுக்கு தண்டனை கொடுத்திருக்காங்க.

தொ: இல்லவேயில்லை, எங்களுக்கு வாக்குப் போடேல்லையே தவிர, அவர்களைத் தான் தண்டிச்சிருக்காங்க.

கா.பூ.க: பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் முதுகில் பட்ட அடி எல்லோர்மீதும் விழுந்த மாதிரி, பொது ஜன முன்னணி மீது பட்ட அடி உங்க மேலேயும் விழுந்திருக்கு எண்ணு சொல்லலாமா?

தொ: அதெப்படி விழும். நாங்கதான் அடிவிழ முன்னரே கவிழ்ந்துட்டோமே! அதனாலே தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போச்சு! எப்படி நம்ம உதாரணம்?

கா.பூ.க: சூப்பர்! எத்தனை கால அனுபவம். இப்படி எத்தனை காரணம் கண்டுபிடிச்சு சொல்லிச் சொல்லியே அசத்தியிருக்கீங்க. இந்த முறைமட்டும் சறுக்கீட்டிங்க.

தொ: பாலன்ஸ் பண்ணியிருக்கலாம். இந்த முன்னணிக்காரங்க காலைவாரி விட்டுட்டாங்களே.

கா.பூ.க: என்ன சொல்லுறீங்க தலைவரே?



தொ: நான் சொன்னதை ஆட்சியில் உள்ளவங்க கேட்கல்லை, அதனால நான் சொன்னதை கேட்காதவங்களை மக்கள் ஆதரிக்கல்லே. நான் சொன்னதை ஆட்சியிலே உள்ளவங்க கேட்டிருந்தா, அவங்க சொன்னதை மக்கள் கேட்டு நான் சொன்னபடி மக்கள் செய்திருப்பாங்க.

கா.பூ.க: ஐ.தே.கட்சிக்காரங்க உங்க கோட்டைக்குள் புகுந்துட்டாங்களே தலைவரே?

தொ: நாங்க தடுக்கலையே! அவங்க நிறைய நன்மைகளை முன்னாடி செய்திருந்தாங்க.

கா.பூ.க: பொது ஜன முன்னணி செய்யல்லையா?

தொ: எங்கே செய்தாங்க. படிச்சுப் படிச்சுச் சொன்னேன் கேட்டாங்களா? சனங்க கவிழ்த்துட்டாங்க.

கா.பூ.க: இப்படிக் கவிழ்ப்பாங்க எண்ணு நீங்க எதிர்பார்க்கல்லையா?

தொ: கரைக்குப் பக்கமா வைச்சுத்தான் கவிழ்ப்பாங்க, நீந்திக் கரைசேரலாம் எண்ணுதான் நினைச்சேன்.

கா.பூ.க: கரையே கண்ணுக்குத் தெரியாத தூரத்திலே நடுக்கடலிலே வைச்சு கவிழ்த்துட்டாங்களே. என்ன செய்யப்போறீங்க?

தொ: அதுதான் நான் முன்னாடியே சொன்னேனே எங்களைக் கவிழ்க்கணும் எண்ணு மக்கள் நினைக்கவே இல்லை. எங்க படகில இருந்தவங்களை பிடிக்கல்லை, அதுதான் கவிழ்த்துட்டாங்க.

கா.பூ.க: அதெப்படிங்க? நீங்களும்தானே நடுக்கடலில் விழுந்திருக்கிறீங்க. உங்களை காப்பாற்ற நினைச்சா உங்களுக்கு மட்டுமாவது கைகொடுத்திருப்பாங்களே?

தொ: நம்பகூட இருந்தவங்க மேலே மக்களுக்கு எக்கச்சக்கமான ஆத்திரம். அந்த ஆத்திரம் கண்ணை மறைச்சிடுச்சு. அதுதான் நம்ம ஆட்களையும் மீட்காம விட்டுட்டாங்க.

கா.பூ.க: மக்களுக்கு உங்க மேலேயும் அக்கறை விட்டுப் போச்சு எண்ணு தானே அர்த்தம்?

தொ: அதெல்லாம் கிடையாது! நாம தனியா நின்று தோற்றுப் போயிருந்தா அப்படிச் சொல்லலாம்.

கா.பூ.க: வத்தளையில் தனியாகக் கேட்டீங்க. பொது ஜன முன்னணியை எதிர்த்து உங்க வேட்பாளர்களை நிறுத்தினீங்க? என்னாச்சு? ஒரு சீட் கூடக் கிடைக்கல்லையே தலைவரே?

தொ: அங்கேதாங்க வேடிக்கையே இருக்கு. பொதுஜன முன்னணியில் இருந்த கோபத்தை எங்க மேலே காட்டிட்டு, பிரமிக்கிறமாதிரி ஏதாவது பண்ணியிருக்கணும். அந்த பிரமிப்பிலே இருந்து மக்கள் மீள முன்னாடி எலக்ஷன் நடத்தி வோட் கலெக்ஷனை நடத்தி முடிச்சுடணும். அது இவங்களுக்கு புரியவே மாட்டேங்குது பாருங்க.

கா.பூ.க: உங்க அடுத்த திட்டம் என்ன தலைவரே?

தொ: கொள்கைரீதியாக ஆதரவு! கோட்பாட்டு ரீதியாக எதிர்ப்பு.

கா.பூ.க: புரியவில்லையே?

தொ: நான் ஒரு முறை சொன்னா அது மீண்டுமொருமுறை சொல்லத் தேவையில்லாத மாதிரி.



கா.பூ.க: அமைச்சர் பதவியில் நீடிப்பீர்களா?

தொ: பதவி எனக்கு ஒரு பொருட்டல்ல. பொதுஜன முன்னணியின் பதவிக்காலம் முடியும் போது எனது பதவியை தூக்கியெறியவும் நான் தயங்கமாட்டேன்.

கா.பூ.க: ஐ.தே.கட்சியுடன் உங்கள் நட்பு புதுப்பிக்கப்படுமா?

தொ: முன்னாள் நண்பர்கள் பின்னாலும் நண்பர்களாகலாம். அதை இந்நாளில் சொல்ல முடியாது.

கா.பூ.க: மலையக மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

தொ: நம் சின்னமான சேவல் கூவும்போது மட்டும் விழித்தால் போதும், காலம் கெட்ட நேரத்தில் விழித்துக் கொண்டு என் உறக்கத்தையும் கெடுத்துவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கா.பூ.க: உங்கள் சேவல் எப்போது கூவும்?

தொ: எப்போதெல்லாம் தேர்தல் திருவிழாவில் வாக்களிப்பு நாள் வருகிறதோ அன்று அதிகாலையில் மட்டும் மறக்காமல் கூவும்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS




580230

பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-

105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# மும்பாய் நாயகன்



← 'ஹீரோ' படத்தின் வெற்றியுடன் ஹிந்தித் திரையுலகை கலக்கத் தொடங்கியவர் ஜாக்கிஷெராப். உயரமான, கட்டுமஸ்தான ஹீரோக்கள்மீது ஹிந்திப்பட ரசிகர், ரசிகைகளுக்கு எப்போதும் ஒரு தனி மயக்கம். ரசிகைகள் மட்டுமல்ல நடிகைகள் மத்தியிலும் கிறக்கம்தான்.

ஜாக்கி ஷெராப் படங்களுக்கு மும்பாயில் ரசிகர்களைவிட ரசிகைகள்தான் முண்டியடிக்கிறார்கள். அப்படி என்னதான் இருக்கிறது இந்த உயரமான சற்றே முரட்டுத்தனமான இந்த ஹீரோவிடம்?! "முரட்டுத்தனமான கம்பீரம்தான் எங்களை அவர்பால் ஈர்க்கிறது. ஜாக்கி ஒரு அட்டகாசமான புயல் குதிரை" என்று பொன்மொழியை உதிர்த்திருக்கிறார் ஒரு பிரபல நடிகை. அவர் வேறு யாருமல்ல, மம்தா குல்கர்னியேதான்.

ஜாக்கி ஷெராப் ஒன்றும் முற்றும் துணிந்த முனிவரல்ல. அதேசமயம் என்றாவது ஒருநாள் உச்சியில் இருந்து இறக்கப்படலாம் என்பதையும் உணராதவரல்ல.

பழைய ஹீரோக்களைப் போல அல்லாமல் இன்றைய ஹீரோக்கள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள் புகழ் போதையில் மட்டும் விழுந்து கிடக்காமல், தங்கள் எதிர்காலத்துக்காகவும் திட்டமிட்டுக் கொள்கிறார்கள். பணத்தை இலாபகரமான தொழில்களில் முதலீடு செய்துவிடுகிறார்கள்.

ஹிந்திப் பட ஹீரோக்களுக்கு புத்திசாலித்தனமான முன்னோடி அமிதாப் பச்சன்தான்.

இன்று பல்லாயிரம் கோடி ரூபாய்கள் முதலீடாக உள்ள பிரபல தொழிலதிபர் அமிதாப். சினிமாவில் கிடைத்ததை சிதறாமல் பெருக்கி இருக்கிறார்.

ஜாக்கி ஷெராப்பும் அமிதாப் வழியில் முதலீடு செய்யத் தொடங்கி உள்ளார். பணம் கொத்தும் நடிகைகளை இவர் தன்னிடம் அண்டவிடுவதில்லை. அதேசமயம் அன்போடு வலியக் கிடைக்கும் சந்தர்ப்பங்களையும் தவறவிடுவதில்லை. வாழ்க்கை வாழ்வதற்கே. ஆனால் ஜாக்கிரதையாகவும் விளையாட வேண்டும். இல்லாவிட்டால் குப்புறவிழுவீர்கள்' என்று தத்துவம் பேசுகிறார் இந்த மும்பாய் நாயகன்.

அமிதாப் போல தானும் ஒரு பட நிறுவனம் ஆரம்பித்து நியூசிலாந்தில் படப்பிடிப்பு நடத்திக் கொண்டிருக்கிறார் ஜாக்கி. படத்தின் பெயர் 'க்ரஹன்'. படத்தின் இசை இளையராஜாவின் வாரிசு கார்த்திகராஜா. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் நாயகன் ஜாக்கி.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

323657

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# மெல்லுடை



→ அப்பப்பா... என்ன புழுக்கம்! என்று சமீப நாட்களாக நாமெல்லாம் வெறுத்துப்போனோம் அல்லவா. உலகம் ரொம்பக் கெட்டுப்போச்சு. இயற்கை சூழலை மனிதன் தன் தேவைகளுக்காக கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டான். அதனால் எது எப்போ நடக்கணுமோ, அது அப்போ நடப்பதில்லை. வானம் பொய்க்கிறது. பூமி கொளுத்துகிறது. (வானமே இரங்கு) அதெல்லாம் இருக்க இந்தியாவின் புதுடில்லியில் கோடைவெப்ப காலத்திற்கு என்று அறிமுகம் செய்யப்பட்ட உடைதான் இது. மிக மிக மிக மெல்லுடை. மெல்லுடலுக்குப் பாரமாகவும் இருக்காது.

பாவுன் என்ற பெயரில் ஆண் குலத்தைப் பயமுறுத்தும் ஆடைகள் எல்லாம் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. அதில் ஒன்றுதான் இதுவும்.

கோடைகாலத்தில் இதை அணிந்தால் அணிகிறவர்களுக்கு புழுக்கம் இல்லாமல் இருக்கலாம்... ஆனால் காண்பவர்களுக்கு. (யாருங்க அது, நாங்க அக்கடாண்ணு உடை போட்டா நீங்க துக்கடாண்ணு எடை போட்டா என்னு பாடுறது?)

↓ இது என்ன பாழடைந்த பங்களா? ஏதாவது உலக அதிசயமோ என்று நினைப்பீர்கள். அதிசயமல்ல, அழிவு நாசம்!

இது ஒன்றும் பாழடைந்த பங்களாவும் அல்ல, பாவிக்கப்படாத கட்டிடமும் அல்ல. இதுதான் யாழ்ப்பாணக் கச்சேரி. அதாகப்பட்டது யாழ்; அரச செயலகம்.

12.11.93 அன்று காலை 8 மணிக்கு புலிகளின் முகாம் என்று நினைத்து உணர்ச்சிவசப்பட்டு இதன்மீது 'லேசாக' குண்டுகளைப் போட்டுவிட்டார் சுப்பர் சொனிக் விமானி. அப்போதைய அரச அதிபர் கா.மாணிக்கவாசகர் மேசைக்கு கீழே பதுங்கியதால் உயிர்தப்பினார். செயலக ஊழியர்கள் ஆறுபேரும், பொதுமக்கள் 13 பேரும் காயமடைந்தனர்.

அதன்பின்னர் யாழ் நகரைவிட்டு புலிகள் செல்லும்போது இதனை தகர்த்துவிட்டுச் செல்ல முயன்றனர். அப்போதும் தப்பிவிட்டது.

தற்போது இதன் உள்ளே உள்ள கட்டிடங்களில் அலுவலகங்கள் இயங்குகின்றன. முகப்பு காயத்துடன் யாழ்ப்பாணத்தின் சோகம்போல காட்சியளிக்கிறது.

(படப்பிடிப்பு பிரதாப்)

# விழுப்புண்கள்



↓ தற்போது நவீன விமானங்கள் அசத்தலான தொழில் நுட்பங்களுடன் பறந்து திரிகின்றன. சில விழுந்தும், விபத்தில் சிக்கியும் அழிந்து போகின்றன. புதிய தொழில் நுட்பத்தில் வசதிகளும் உண்டு, கரணம் தப்பினால் மரணம் என்னுமளவுக்கு ஆபத்துக்களும் உண்டு. இசகு பிசகாக தப்பான பட்டன்களைத் தொட்டு தப்பாக ஏதாவது செய்துவிட்டால் கதை காலி.

படத்தில் இருக்கிறது பாருங்கள், மிகப் பழைய விமானம். காற்றாடியின் உதவியோடு கச்சிதமாக பறந்து செல்லும் இந்த சுழல் விசிறி விமானத்தின் பெயர் சிவி-580.

1952ம் ஆண்டு பறக்கத் தொடங்கிய இந்த விமானத்திற்கு இன்று வரை ஓய்வேயில்லை. இதன் வயது 45.

1991ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 368 தடவை இது வானில் பறந்துள்ளது. அதாவது நாளொன்றுக்கு 9 தடவைகள் வீதம் பறந்துள்ளது. இது ஒரு உலக சாதனை.

இது ஒரு பயணிகள் விமானம். அமெரிக்காவில்தான் இதனை தற்போதும் பாவிக்கின்றனர். புதிய விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதும் பழசையும் பத்திரமாகப் பாவிக்கிறார்கள் பார்த்தீர்களா?

# இன்னும் ஓயவில்லை






# சிகரத்தின் மேலே

↑ உலகின் அதி உயரமான இமயமலையின் சிகரங்களை முத்தமிட்டுக் கொண்டு பறந்து சாதனையின் உச்சியைத் தொட்ட 'பலூன் விமானம்' இதுதான். சூடான காற்றை இராட்சத பலூனுக்குள் கருவிகள் மூலம் செலுத்தி நிரப்பிக் கொண்டு புறப்பட்டது இந்த பலூன் விமானம். இதற்கு ஸ்ரார் ஃபிளையர் என்று பெயர் சூட்டியிருந்தனர்.

பலூனுடன் இணைக்கப்பட்டுள்ள தொட்டில்தான் பலூன் விமானிகளின் இருப்பிடம். அதற்குள் இருந்துதான் சரியான திசைவழியில் பலூனை இயக்கிச் சென்றார்கள். இரண்டு விமானிகள் அதன் உள்ளே இருக்கிறார்கள்.

ஒரே நேரத்தில் இரட்டைச் சாதனை படைத்தது இந்த பலூன் விமானம். கடல் மட்டத்தில் இருந்து 4 ஆயிரத்தி 938 மீட்டர் (16200 அடி) உயரத்தில் பறந்து சென்றது ஒரு சாதனை. அப்படிப் பறந்து சென்று 4 ஆயிரத்தி 735 மீட்டர் உயரத்தில் (15536 அடி) இமய மலையில் தரையிறங்கியது மற்றொரு சாதனை. ஆக இரட்டைச் சாதனை. (நல்லவேளை காணாமல் போகாமல் திரும்பிவந்துவிட்டது) 1991ம் ஆண்டு அக்டோபர் 21 ம் திகதி இந்த உலக சாதனை நிகழ்த்தப்பட்டது.



இப்பத்திரிகை கொழும்பு [illegible] தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] அச்சகத்தில் [illegible] 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.